
ஏப்ரல் - ஜூன் 2022

# உள்ளம்

www.ullamm.com

கலை, இலக்கிய, சமூக காலாண்டிதழ்



வட அமெரிக்கா : $10
ஐரோப்பா : €5
அவுஸ்திரேலியா : $10

இலங்கை : 250 ரூபா
இந்தியா : 100 ரூபா
இங்கிலாந்து : £5

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக வெளியீடு

cyberUp TECHNOLOGY

*Web solutions*

*E-Commerce Solutions*

Welcome to Cyber Up Technology Your onestopsolution if you are looking to up your cyber game



**Contact Us**

**Tel : 9782677155**

https://www.cyberuptech.com/

info@cyberuptech.com

*Digital Solutions*

*Mobile Solutions*

# உள்ளத்துள்




கடன் பொறிக்குள் இலங்கை : ஏன்? எப்படி?
வைை.சிவநேசன் 8

உறவும், உணர்வும் - 2 எந்தையும் தாயே
செ.ஸ்ரீனிவாசன் 20

ஐயம் தெளி
மல்லியப்புசந்தி திலகர் 29
தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ 31
தமிழ்க்கவி 34
எஸ்.கருணாகரன் 36

கோமகன் என்னும் பேராளுமை
சஞ்சயன் 40

எதிர்வினை: இலங்கையின் கல்விச் சாதனைகள் ஏன் கைகொடுக்கவில்லை
நா.இராஜமனோகரன் 57

நாங்கள் பிஸி
பிரவீணன் விழிமைந்தன் 62

புலம்பெயர்தல் உருவாக்கும் புதிய சமூகவியல் கட்டமைப்பு
பேராசிரியர்.மா.சின்னத்தம்பி 68

ஈழசினிமாவும் அதன் தேவையும்
மதி சுதா 82

காசு... பணம்... துட்டு...money -Matters?
ரகுராஜ் 92

நினைவழியா உள்ளம்
அகன் 108

'தெணியான்' – ஒரு சரித்திரம்
தேவகி ரமேஸ்வரன் 151




உயிர் என ஒன்று
ஏ.எம்.குர்ஷித் 14

தீர்க்கதரிசியம்
டணிஸ்கரன் 46

நியாயத் தராசு
சஜாத் 76

கடற்தவளை
அகமது ஃபைசல் 100

கொடி
வாலெந்தின் கத்தாயெவ் 126

குருடு
அகமது ஃபைசல் 138





எத்தனிப்பு
தாட்சாயணி 19

என்று சொன்னார்கள்
குணாளினி 26

குளங்களை மூடி
காரையன் கதன் 38

கனவு என்பது முற்றுகிறது அலையின் முதுகில்
டீன் கபூர் 44

கூவாதே பாடு
அ.புராந்தகன் 54

படிக்காத சிறுவனின் கவிதை
பிரான்சிஸ் திமோதிஸ் 60

நமது அந்தியத்தின் சாட்சியம்
சிவ சேகரன் 66

நிலம் கொண்ட கடல்
சடா 74

பாட்டனின் தடங்களற்ற வரைபடம்
சண்முகம் சிவகுமார் 86

பிறக்கப்போகும் சிறுமி
கவிதா லட்சுமி 96

விழித்தெழும் மனிதம்
வினாயகமூர்த்தி அபிவர்ணா 105

அகரா கவிதைகள்
அகரா 106


மரம் வளர்ப்போம்
பஷ்றி 112

பனம்பால்... பா
பனையடிப்பாடகன் 117

செங்குருதி
சபீர் அலி 124

பேசப்படா மௌனத்துள்
அலெக்ஸ் பரந்தாமன் 146

- சொல்லிழை போட்டி – 2 88
- கழகச் செய்திகள் 114
- கட்புலக் கலைஞர்கள் 118
- கவிதைப் போட்டி 123
- கணைகள் 135
- உள்ளம் அறிமுக விழாக்கள் 155
- அமரர் ஈஸ்வரபவானி சோமசுந்தரம் 157
- குறும்பா 158

# அகவெளி

மதி: 6 பிறை : 15

வெள்ளை நிறப் பூவுமல்ல
வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி
உத்தமனார் வேண்டுவது
– விபுலானந்த அடிகள்

❖


மின்னஞ்சல்: info@ullamm.com
வலைத்தளம்: www.ullamm.com

❖

இலங்கை:
775856249

❖

இங்கிலாந்து:
7814643273

❖

சுவிஸ் மற்றும் ஏனைய ஐரோப்பிய நாடுகள்:
41794670366

❖

வட அமெரிக்கா:
(416) 316-3112


❖

அட்டைப்பட ஓவியம்:
பிரான்சிஸ் திமோதிஸ்


❖

மிகப் பெரும் அவலத்துக்குள் நாடு இருக்கும் ஒரு நிலையில் இன்னொரு தடவை உள்ளத்தின் பிரசவம். அரசியல்வாதிகள் மீதான மக்களின் கடும் கோபம், நாட்டின் பொருளாதார வங்குரோத்து நிலை, அடிப்படைகளுக்காக அல்லாடும் மக்கள், ஆட்சிமுறை மீதான இளைய சமுதாயத்தின் வெறுப்பு, மக்களின் விரக்தி, இதன் விளைவான வெகுஜன எழுச்சி, இவ்வளவும் நடந்தும் ஆக்கபூர்வமான திட்டங்கள் ஏதும் இன்றி பதவிகளில் குறிவைத்துக் காத்திருக்கும் கட்சிகள்.



இது, வெறுமனே ஒரு பொருளாதார நெருக்கடி மாத்திரம் அல்ல. இனவாத கொள்கைத் தீர்மானங்கள், மூன்று தசாப்த காலப் போர், போர் முடிந்தும் எகிறும் இராணுவச் செலவினங்கள், அரசாங்கங்களின் மோசமான நிதிக் கையாளுகை, அரசியல்வாதிகள் இடையே புரையோடிப்போன ஊழல் கலாச்சாரம், மக்கள் நலனை முதன்மைப்படுத்தும், தொலைநோக்குடன் செயலாற்றும் தலைவர்கள் இல்லாதிருத்தல், தொடரும் இனங்களுக்கிடையிலான பிணக்குகள், செயல் திறன் அற்ற அரச துறை, தகுதியற்ற நியமனங்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் நாட்டின் முன்னேற்றம் சுதந்திரமடைந்த காலம் முதலே தொடர்ச்சியான பின்னடைவுகளைச் சந்தித்து வந்திருக்கின்றது. அதிகாரம் மனிதனைக்

கெடுக்கும். முழுமையான அதிகாரம் முற்றிலும் கெடுக்கும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை இதைத்தான் நமக்கு உணர்த்துகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தாலும் நாட்டு மக்கள் இந்தப் பொருளாதாரச் சிக்கலிலிருந்து விடுபட ஆகக்குறைந்தது இன்னும் சில ஆண்டுகளாவது எடுக்கும். மக்கள் அதற்கான ஆயத்தப்படுத்துதல்களில் முனைப்பாக ஈடுபடவேண்டும்.



நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பு, குடும்ப அரசியல், ஒற்றையாட்சி அரசியலமைப்பு, ஜனாதிபதி ஆட்சிமுறை, நீதித்துறையின் சுயாதீனம், பாராளுமன்ற உறுப்பினர்களின் தகைமைகள், உயர் பதவிகளுக்கான தெரிவு, விருப்பத் தெரிவு தேர்தல் முறைமை, இனங்களுக்கிடையிலான உறவுநிலை, பேரினவாத அரசியல், நாட்டின் கல்வி முறையின் உள்ளடக்கங்கள் எனப் பொருளாதார, சமூக, அரசியல் கட்டுமானங்களின் அனைத்து அம்சங்களும் கேள்விக்கு உள்ளாக்கப்பட்டு அடிப்படையான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டால் மாத்திரமே நாடு ஒரு புதிய பாதையில் பயணிக்க முடியும். பொறுப்புக்கூறும் கலாச்சாரம், திறமை, நேர்மை, வெளிப்படைத்தன்மை, இன, மத நல்லிணக்கம் என்பவற்றை உறுதி செய்யும் ஒரு மாற்று அரசியல் கலாச்சாரத்துக்கான தேவை தவிர்க்க இயலாததாகி உள்ளது. இந்த வெகுஜன எழுச்சி இதற்கான ஒரு தொடக்கமாக அமையுமா?

– உள்ளம் ஆசிரியர் குழு

■


அட்டைப்படம் வடிவமைப்பு
லார்க் பாஸ்கரன்
❖
இதழ் வடிவமைப்பு
சந்தோஷ் கொளஞ்சி
❖
வலைத்தள வடிவமைப்பு
Maestro Innovative solution (PVT) Ltd.
❖
படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு . எனினும் , ஊடக அறம் கருதி பிரசுரித்ததற்கான பொறுப்பை ஆசிரியர் குழு ஏற்றுக் கொள்ளும்.
❖
இதில் வரும் சில புகைப்படங்கள் இணையத்தில் இருந்து எடுக்கப்பட்டவை.
❖


தொடர்புகளுக்கு :
வளர்மதி முன்னேற்றக் கழகமும் சனசமூக நிலையமும்
சம்பியன் லேன்
கொக்குவில் கிழக்கு ,
கொக்குவில் .
❖
மின்னஞ்சல் : info@ullamm.com
❖
இலங்கை : 775856249
இங்கிலாந்து : 7814643273
சுவிஸ் மற்றும்
ஏனைய ஐரோப்பிய நாடுகள் :41794670366
வட அமெரிக்கா :(416) 316 3112
❖
www.ullamm.com
❖

# கடன் பொறிக்குள் இலங்கை: ஏன்? எப்படி?






**வை.சிவநேசன்**
**நிதியியல் நிபுணர்**


இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து சந்தித்த மிகப்பெரும் பொருளாதார நெருக்கடியை தற்போது எதிர்கொண்டு வருகிறது. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து இலங்கை கடுமையான சென்மதி நிலுவை நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. நிதி மற்றும் கடன் குறிகாட்டிகள் மோசமடைந்ததால், நாட்டின் கடன் தரமதிப்பீடு குறைக்கப்பட்டது. சர்வதேச மூலதனச் சந்தைகளில் இருந்து இலங்கையினால் கடன்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. கிடைக்கும் அன்னியச் செலாவணி வரவுகளை வைத்துக்கொண்டு உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதேவேளை எப்படி வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவது என்ற இரட்டைச் சவாலுடன் கொள்கை வகுப்பாளர்கள் போராடி வருகின்றனர். அன்னியச் செலாவணிப் பற்றாக்குறையால் நாடு நாடாக கையேந்தும் நிலைக்கு நாடு தள்ளப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, சாதாரண பொது மக்களை விலைவாசி உயர்வு, பொருட்களின் தட்டுப்பாடு, கடுமையான எரிசக்தி நெருக்கடி, வேலை இழப்பு, வருமான இழப்பு, மின் வெட்டு என்றவாறு பல்வேறு விதங்களில் கடும் சிக்கலுக்குள் தள்ளியுள்ளது. பல லட்சக்கணக்கானோர் வறுமைக்கோட்டுக்குக் கீழே தள்ளப்பட்டு வருகின்றனர். முறைசாரா தொழில் துறைகளில் பணிபுரியும் ஏராளமான இலங்கையரின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.

சில மாதங்களுக்கு முன் இலங்கை பத்திரிகை ஒன்றில் ஒரு புள்ளிவிவரம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2019 டிசம்பர் முதல் 2021 நவம்பர் வரையிலான இரண்டு வருட காலத்தில் தெற்காசிய நாடுகளின் அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்ட மாற்றத்தை இந்தப் புள்ளிவிவரம் ஒப்பீடு செய்திருந்தது . உங்களது பார்வைக்காக இந்த ஒப்பீட்டு புள்ளி விவரத்தை இங்கு தந்துள்ளேன.

**அந்நியச் செலாவணி கையிருப்பு மாற்றம் (%)**

**டிசம்பர் 2019 தொடக்கம் நவம்பர் 2021 வரை**

| நாடுகள் | மாற்றம் |
|---|---|
| இலங்கை | –79% |
| இந்தியா | +39% |
| பங்களாதேஷ் | + 37% |
| பூட்டான் | +35% |
| மாலைத் தீவுகள் | +25% |
| நேபாளம் | +32% |
| ஆப்கானிஸ்தான் | +15% |

(ஆதாரம்: டெய்லி மிரர் 24 பிப்ரவரி 2022)

இந்த ஒப்பீடு சொல்கின்ற செய்தி மிக முக்கியமானது இலங்கையின் அன்னியச் செலாவணி கையிருப்பு குறிப்பிட்ட இரண்டு வருட காலப்பகுதியில் 79 சத வீதம் குறைந்துள்ளது. இதே காலப்பகுதியில் தெற்காசியாவின் மற்றைய எல்லா நாடுகளினதும் அன்னியச் செலாவணிக் கையிருப்பு அதிகரித்திருந்தது. எல்லா நாடுகளுமே தொற்று நோய்க்கு ஆட்பட்ட நிலையில் ஏனைய நாடுகள் பொருளாதார நெருக்கடியில் இருந்து விரைவில் மீண்டுவிட ஏன் இலங்கை தொடர்ந்தும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ளது? இந்தப் புள்ளி விபரத்தில் இருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு முடிவு என்னவென்றால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி தனியே கோவிட் தாக்கத்தின் விளைவு மாத்திரமல்ல. கோவிட், பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தியது. கோவிட், பொருளாதாரப் பலவீனங்களை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தது. ஆனால் இலங்கையின் பொருளாதாரச் சிக்கல்கள் கோவிட் காலத்துக்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே மையம் கொள்ளத் தொடங்கி விட்டன.

இலங்கையில் தொடரும் பொருளாதார வீழ்ச்சிக்குப் பல காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாக அடுக்க முடியும். சில பிரதான காரணங்களை மட்டும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

- **மிதமிஞ்சிய வெளிநாட்டு கடன்கள்:** இலங்கையின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களின் அளவு நாட்டின் பொருளாதார உறுதிப்பாட்டைச் சீர்குலைக்கும் அளவுக்கு அதிகரித்துள்ளது. இலங்கை 2007 ஆம் ஆண்டிலிருந்தே சர்வதேச இறையாண்மைப் பத்திர கடன்கள் (International Sovereign Bonds— ISB) எனப்படும் அந்நிய செலாவணிக் கடன்களைப் பெற்றுக்கொண்டுள்ளது. அடுத்த ஏழு ஆண்டுகளில் நாடு ISB பத்திர கடன்களில் 12.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடன்களை தீர்க்க வேண்டும். இது நாட்டின் வெளிநாட்டுக் கடன்களின் மூன்றில் ஒரு பகுதி ஆகும். ஒரு பில்லியன் டொலர்கள் ஜூலை 2022 இல் திரும்பச் செலுத்தப்பட வேண்டும். இது தவிர, கடந்த தசாப்தத்தில் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக சீனா தனது Belt and Road Initiative (BRI) திட்டத்தின் கீழ் பில்லியன் கணக்கான டொலர்களைக் கடனாக வழங்கியுள்ளது. 2022—ல் மொத்தமாக ஏழு பில்லியன் டொலர்களை மதிப்புள்ள வெளிநாட்டுக் கடன்களை இலங்கை திருப்பி செலுத்த வேண்டியுள்ளது. பல அன்னிய செலாவணி கடன்கள் அதிக வட்டி வீதத்தில் பெறப்பட்டுள்ளன. வெளிநாட்டு கடன்கள் அடிப்படையில் மிக ஆபத்தானவை. இலங்கை ரூபாவை அச்சடித்து வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது. தவிர, வெளிநாட்டு கடன்கள் பொருளாதாரத்தை மேம்படுத்தும், வருமானம் ஈட்டும் திட்டங்களில் சரிவரப் பயன்படுத்தப்படவில்லை. சரியான சாத்தியப்

**உள்நாட்டு மொத்த உற்பத்தியின் விகிதமாக நோக்குகின்ற போது, இலங்கை இப்போது உலகிலேயே மிகக் குறைந்த வரி விகிதத்தை கொண்ட நாடுகளில் ஒன்றாகும். பல தசாப்தங்களாக இந்த விகிதம் வீழ்ச்சியடைந்து வரும் போக்கில் உள்ளது. எனவே கிடைக்கவிருந்த வருமானத்தையும் வேண்டாம் எனக்கூறிவிட்டு கடன் வாங்கி செலவு செய்ததன் விளைவே இன்றைய நிலையாகும்.**

பகுப்பாய்வுகள் இன்றி விமான நிலையம், துறைமுகம், உயர்ந்த கோபுரம், கார்பெட் சாலைகள், துறைமுக நகரம் எனப் பாரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. பழைய கடன்களை திருப்பி செலுத்தவும் ஒரு பகுதி நுகர்வு தேவைகளுக்காகவும் கடன்கள் பயன்படுத்தப்பட்டன ஒரு கடனைத் திருப்பிச் செலுத்த இன்னொரு கடன் பெறுவது என்றுமே புத்திசாலித்தனமானது அல்ல. இலங்கை இதனை தொடர்ச்சியாக செய்து வருகிறது. இலங்கையின் மொத்த கடன்களின் அளவு அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 119% வீதமாக 2021 இல் காணப்பட்டது.

• **அரசாங்கத்தின் மோசமான நிதி முகாமை:** நவம்பர் 2019 இல் பதவியேற்ற உடனேயே, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பல வரிகளை கிட்டத்தட்டப் பாதியாகக் குறைத்தார். இந்த வருமானவரிச் சலுகை அரசாங்கத்தின் வரி வருவாயில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு வழிவகுத்தது அரசாங்கத்தின் வருமானம் பெருமளவில் துண்டு விழுகின்ற போதும் வருமான பற்றாக்குறையை ஈடுகட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்று அரச செலவினங்கள் சமாளிக்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டு மொத்த உற்பத்தியின் விகிதமாக நோக்குகின்ற போது, இலங்கை இப்போது உலகிலேயே மிகக் குறைந்த வரி விகிதத்தை கொண்ட நாடுகளில் ஒன்றாகும். பல தசாப்தங்களாக இந்த விகிதம் வீழ்ச்சியடைந்து வரும் போக்கில் உள்ளது. எனவே கிடைக்கவிருந்த வருமானத்தையும் வேண்டாம் எனக்கூறிவிட்டு கடன் வாங்கி செலவு செய்ததன் விளைவே இன்றைய நிலையாகும். இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ், இலங்கை மின்சார சபை, மற்றும் இலங்கை போக்குவரத்து சபை உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட அரச நிறுவனங்கள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவது அரசாங்கத்தின் வரவு செலவு கணக்கை பாதிக்கும் மிக முக்கிய காரணிகளில் ஒன்றாகும். உற்பத்திச் செலவைக் காட்டிலும் குறைந்த கட்டணத்தில் மானிய விலையில் பொருட்களும் சேவைகளும் வழங்கப்படுவது, அரசியல் தலையீடு, திறமை குறைவு, முகாமை சீர்கேடுகள் என பல காரணங்களால் பொதுத்துறை நிறுவனங்களின் நட்டக்கதை தொடர்கிறது. இலங்கை அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவம் மிக மோசமான நிலையில் இருப்பதன் சில வெளிப்பாடுகள் இவையாகும்.

• **பலவீனமான ஏற்றுமதிக் கட்டமைப்பு:** அந்நிய செலாவணி வருவாய்க்கான பிரதான ஆதாரம் ஏற்றுமதிகளும், வெளிநாட்டு முதலீடுகளும் ஆகும். இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பைப் பொறுத்த வரையில் முக்கிய பலவீனம் பொருட்கள் மற்றும் சந்தைகளில் பன்முகத்தன்மை இல்லாமை ஆகும். 1990களின் பின்னர் எந்த ஒரு குறிப்பிடத்தக்க ஏற்றுமதி பண்டமும்

> 2022 மார்ச் மாதத்தில் மத்திய வங்கி அமெரிக்க டொலருக்கு 200 ரூபா என்ற செயற்கையான கட்டுப்பாட்டை தளர்த்தியது. வட்டி வீத கட்டுப்பாடுகளும் படிப்படியாக தளர்த்தப்பட்டன. இது ஒரு சரியான திசையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்றபோதிலும் சேதம் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது.

இலங்கையால் கண்டறியப்படவில்லை. இலங்கை வெளிநாட்டு ஏற்றுமதி வருமானத்தைப் பெற சுற்றுலாத்துறை, ஆடைகள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு என்ற மூன்று பண்டங்களைப் பிரதானமாக நம்பியுள்ளது. இவற்றுள் சுற்றுலாத்துறையும் தைத்த ஆடைகளும் கோவிட் காலத்தில் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொண்டன. சுற்றுலாத்துறையின் பிரச்சினைகள் கோவிட் காலத்துக்கு முன்னரே ஆரம்பித்து விட்டன. தொற்றுநோய்க்கு முன்னதாக, 2019 இல் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் 2019 கோடைகால சுற்றுலாக் காலத்தை ஏற்கனவே கடுமையாக பாதித்து இருந்தன.

- **மத்திய வங்கியின் நாணயக் கொள்கை:** அதிகரித்த வெளிநாட்டு கடன் சேவை, அந்நிய செலாவணி வருவாய் சரிவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி காரணமாக நாட்டின் சென்மதி நிலுவை பாதகம் அடைய இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்தது. இலங்கை ரூபாவின் பெறுமதியை செயற்கையாக ஒரு டொலர் 200 ரூபா என்ற அளவில் வைத்திருக்க, ரூபாவுக்கு செயற்கையான தேவையை உருவாக்க மத்திய வங்கி, ரூபாவை வாங்க அதன் அந்நியச் செலாவணி இருப்புகளைப் பயன்படுத்தியது. மத்திய வங்கியின் அன்னியச் செலாவணி கையிருப்பு இதனால் தீர்ந்து போனது. மேலும் 2020 பிப்ரவரியில் இருந்து இலங்கை மத்திய வங்கி வட்டி வீதங்களை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியை 200 ரூபா என்ற எல்லைக்குள் வைத்திருக்கவும் மிகப்பெருமளவில் பணத்தை அச்சடித்து வெளியிட்டு வந்தது. இரண்டு வருடங்கள் தொடர்ந்த பண அச்சடிப்பு காரணமாக பணவீக்கம் அதிகரித்தது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உச்சம் தொட்டன. இலங்கை 2021 இல் 1.2 டிரில்லியன் ரூபாயை அச்சிட்டது (எத்தனை சைபர் தலை சுற்றுகிறது). அரசாங்கம் குறைந்த வட்டி வீதத்தில் உள்நாட்டு கடன்களைப் பெறுவதற்கு வசதியாக வட்டி வீதங்கள் குறைந்த மட்டத்தில் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளப்பட்டன. 2022 மார்ச் மாதத்தில் மத்திய வங்கி அமெரிக்க டொலருக்கு 200 ரூபா என்ற செயற்கையான கட்டுப்பாட்டைத் தளர்த்தியது. வட்டி வீத கட்டுப்பாடுகளும் படிப்படியாக தளர்த்தப்பட்டன. இது ஒரு சரியான திசையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்றபோதிலும் சேதம் ஏற்கனவே ஏற்பட்டுவிட்டது.

ஒட்டுமொத்தத்தில், பொருளாதார முகாமை செயற்திறன் அற்று போனது. அரசாங்கத்தின் நிதிக்கொள்கை மற்றும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை இரண்டினதும் ஒட்டுமொத்த தோல்வியின் வெளிப்பாடே இலங்கையின் இன்றைய நிலையாகும். பொருளாதாரத்தின் தீர்க்கமான மறுசீரமைப்பு ஒன்றே இலங்கைக்கு தற்போது உள்ள தெரிவாகும்.

■

## R &C Property Lawyers LLP

**Conveyancing Specialists**





## Raja Thavaraja & Senthuran Thavaraja Solicitors


**UNIT 116 Tooting Works**
**89 Bickersteth Road**
**London SW17 9SH**

0208 772 4920
02086820651

info@rcpropertylawyers.co.uk
www.rcpropertylawyers.co.uk

# உயிர் எனை ஒன்று





ஏ.எம். குர்ஷித்

செத்துக் கரையொதுங்கி சிலபொழுதுகள் கழிந்திருக்கவேண்டும், மூக்கின் அத்தனை திசுக்களிலும் கெட்டித்த நாற்றம் ஊறுகிறது.

காலை தேநீர் அருந்தும் போதே மகன் சொல்லியிருந்தான். ஆனால் அத்தனை கவனமெடுக்கவில்லை. ஊர் புதினம் என்னை பெரிதும் ஆட்கொள்வதில்லை. அலட்சியமாய்விட்டுவிட்டேன். இப்போது நாற்றம் குமட்டலாக உருப்பெருக்கிறது.போய் பார்த்து வந்தாலென்ன ? நப்பாசை வீணியாய் சுரக்கத்தொடங்குகிறது. எழுந்து நடந்தேன். எதிரே அவன் வலது காலை இழுத்து நடந்த படி வந்தான். பிறவியில் வந்தது,திருத்தப் போராடி தோற்றுப் போனதாக அவன் சொன்னது ஞாபகம். என்னைக் கண்டதும் உதட்டோர வளைவுள் சிறு சிரிப்பை உற்பத்தியாக்கி கருணை தேக்கிப் பார்த்தான். எனதுவீட்டின் இரண்டாவது தெருமடிந்து குறுகலாய் போன ஒருமாட்டு வண்டி மட்டும் நுழைய, தோதான சந்தியில் வாடகைக்கு பயந்து தொழு நோயாளியின் உடம்பு போல காறை உதிர்த்திருந்த ஒரு பழங்கால ஓட்டுக் கூரை வீட்டில் ஒரு ‘டராக்...ட்ராக்...ஃபேன், பதினாறு அடிக்கு மேல் தொங்குகின்ற மஞ்சளித்து எரிகிற ஒற்றைக்குண்டு

பல்ப், சிங்கள ஸ்ரேசனைத் தவிர மற்ற எல்லாமுமே கொர், கொரப்பப்பாய் கேட்கிற றேடியோ, மூட்டைப் பூச்சியும் அவனும் சரி சம விகிதத்தில் பங்கு பிரித்து ஒற்றுமையாய் வாசம் செய்கிற சாய்மணைக்கதிரை, அடிப்பகுதியில் கரி உப்பிக் கெட்டித்த கொஞ்ச பண்ட பாத்திரங்கள் என்றவாறான சொத்துக்களின் அதிபதியாக அவன் இருந்தான். கவர்மெண்டில் சிறு தொழில் ஒன்று செய்வதாக அவன் சொல்லக் கேட்டிருக்கிறேன்.அது என்ன தொழில் என்று அவன் சொன்னதுமில்லை. நான் கேட்டதுமில்லை. அதற்காகத்தான் தென் திசையில் இருந்து இங்கு வந்ததாகச் சொன்னான். விலை குறைந்த மட்டமான பில்ற்றர் இல்லாத சிகரட் காலையொன்றும்,



எல்லாம் தெரிந்ததாய் பிரசங்கிப்பவர்களின் சீரிலி வட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே பார்க்கிறேன். முதுகு நாணி தொகுதியை சேர்ந்த 5அடி 6அங்குல நீளமுள்ள முதலை வயிற்று வெண்பாகம் நிலமழுந்த செத்துக்கிடந்தது. மக்கள் கிடைக்காத நிவாரண அரிசிக்கு ஏங்கும் பாவனையில் அதனை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர்.

இரவுச் சாப்பாட்டுக்கு பிறகு ஒன்றுமாக உறிஞ்சுவது தவிர அவனிடம் வேறு எந்த கெட்ட பழக்கத்தையும் நான் கண்டதில்லை. அவன் ஒரு கூச்ச சுபாவி. என்னைத் தவிரவும் அவன் தங்கியிருக்கிற வீட்டில் இருந்து இரண்டுவீடு தள்ளியிருக்கும் மெர்க்குரி லைற்கம்பத்துக்கு அருகில் கடனுக்கு பொருட்கள் வாங்கும் கடைக்காரனைத் தவிரவும் வேறு யாரிடமும் அவன் பேச்சு வைத்துக் கொண்டதில்லை. ஒரு வாரப் பத்திரிகையில் நான் எழுதிய ஒரு கவிதையின் கிறக்கத்தில் என்னை துப்பறிந்து கண்டறிந்து அவன் உறவை வளர்த்துக் கொண்டான். ஒரு சீனியர் போலிஸ் காரரிடம் ஒரு கான்ஸ்டபிள் நடந்து கொள்வது போல என்னிடம் பவ்யம் கலந்து பழகத் தொடங்கினான். அவனைத் தேடி அவன் அம்மாவும் சின்னத் தங்கையும் வந்து போவதை சில தடவைகள் அவதானித்திருக்கிறேன். அவர்கள் கொண்டு வரும் சாப்பிடும் எண்ணெய் வகையறா வஸ்த்துக்களில் குறித்தவொரு பாகத்தை சீமெந்து பேப்பரில் சுற்றி என்னிடம் தவறாமல் கொண்டு வந்து தருவான். என்னைத் தவிரவும் என் வீட்டில் அவனுக்கு இரண்டு உறவு. ஒன்று என் மனைவி. மற்றையது சங்கிலியில் பிணைத்துக் கிடக்கும் என் ரதி.

“எங்கே போறயள்...’ இழுவையாக கேட்டான் விடயத்தைச் சொன்னேன். அவனும் கூட வரப் புறப்பட்டான். இருவரின் பாதங்களின் கீழும் வெண்மணல் உடைந்து கொண்டிருந்தது. பிரசவ வலியில் துடிக்கும் தமிழ் சினிமா நாயகி போல் கடல் அலைகள் ஓலமிட்டன.”கொஞ்சம் பொறுத்துக்கம்மா” என்று சொல்லும் தாய்தான் அங்கிருக்கவில்லை. நாற்பது வயதுக்கு பின்னதாக ஒட்டிக்கொள்ளும் களைப்பு வகையான இழுப்பில் மோவாய் மேல்வியர்வை புள்ளியிடுகிறது. தொண்டை காய்ந்து நுனி நாக்கில் வெண்படையாய் பரவுகிறது.நெருங்கியாயிற்று. எல்லாம் தெரிந்ததாய் பிரசங்கிப்பவர்களின் சீரிலி வட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே பார்க்கிறேன். முதுகு நாணி தொகுதியை சேர்ந்த 5அடி 6அங்குல நீளமுள்ள முதலை வயிற்று வெண்பாகம் நிலமழுந்த செத்துக்கிடந்தது. மக்கள் கிடைக்காத நிவாரண அரிசிக்கு ஏங்கும் பாவனையில் அதனை உற்று நோக்கிக் கொண்டிருந்தனர். 2009இன் 22 இலக்க திருத்தப்பட்ட அதிகார சட்டத்தை மனப்பாடம் செய்த வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைகளக் காக்கிக் காற்சட்டை அதிகாரி விசாரணைகளை முடுக்கி விட்டிருந்தார். அருகில் மென் நீல ஆடையில் ஒரு ஒல்லித்தேகி சமுத்திர சுற்றாடல் அதிகார சபை ஊழியராய் இருக்க வேண்டும் பக்கத்துணை வழங்கிக் கொண்டிருந்தார். சிறிய வகை நோட்டுப் புத்தகத்துடன் பத்திரிகைக்காரனும் நின்றிருந்தான். பல்லியை முதலையாக்கத் தெரிந்தவனுக்கு, முதலை கிடைத்தால் விடவா போகிறான். ஏன், எதற்கு, எப்படி, எவ்வாறு, எவ்வேளையெனத் தொடங்குவதும், முடிவதுமான சொற்களாலான கேள்விக் கணைகளை அம்பறாத் துணியிலிருந்து

எடுத்து அதிகாரி எய்து கொண்டிருந்தார். மக்கள் சளைத்தவர்களில்லை. ஆம் என்பதற்கும் இல்லை என்பதற்கும் இடைப்பட்ட வகையிலான தோரணையில் தலையையாட்டிக் கொண்டிருந்தார்கள். நம் அரசியல்வாதிகளின் தந்திர பேச்சை கேட்டு வளர்ந்தவர்களாயிற்றே, அப்படிக் கெதியில் பிடிகொடுத்துவிடுவார்களா என்ன? .அதிகாரி களைத்துப்போனார். 'நன்னீரிலிருந்து உவர் நீரில் வந்து மாட்டிக் கொண்டு காலநிலை ஒவ்வாமையால் வாய்பிளந்து, மிதந்து அலைந்து சோர்ந்து தன் விருப்பப்படி உயிரை விட்டு கரையொதுங்கியது' என்பதை யூகிக்கத் தெரியாத அளவுக்கு இந்த அதிகாரி முட்டாளாக இருக்கமாட்டார். இருந்தும் சந்தேகமும், சக்கரைவியாதியும், ஒத்த குணமுடையவை. இரண்டும் ஒட்டிக் கொண்டால் இலகுவில் விலகாது. அரை மணி கழித்து மிருக சிகிச்சை வைத்தியர்(மிருக வைத்தியர் என்று சொல்வது உறுத்தலாய்ப்படுகிறது)வந்திருந்தார். தாடை,விலா,வயிறு,இதரவைகளென நுணுக்கமாக பார்த்தார். காயமிருக்கிறதா என வெறித்தார்.பிரேத பரிசோதனைக்கு தயாராக்கச் சொன்னார். வெயில் செருப்பால் அடிப்பது போல் சுட்டது. திரும்பினோம். திரும்பும் வழியில் அவன் கேட்டான் "செத்த இந்த அஃறிணைக்கு இத்தனை பம்மாத்து ஏன்...". நான் ஒற்றைச் சொல்லில் பதில் சொன்னேன். "அது அரிய வகை உயிர்".

அடுத்த நாள் இயந்திரங்கள் குழி தோண்டிக் கொண்டிருந்ததை ஜன்னலூடாக பார்த்தேன். போய்ப் பார்த்து வரலாம்.நடந்தேன். சீரான செவ்வக வடிவ குழி தயாராகியது. முதலை குழியுள் இறக்கப்பட்டது.பிரமுகர் ஒருவரை புதைப்பது போல் பவ்வியமாக அடக்கினர். என்னவொரு குறை கூத்தாடிகளின் ஆட்டம் மட்டும் இல்லை அவ்வளவுதான்.அரச செலவில் முதலையைஅடக்கிய இயந்திரம் மூச்சை நிறுத்தி ஓய்விலிருந்தது. வீடு திரும்பியபோது மனைவி செய்தி பார்த்துக் கொண்டிருந்தாள். ஏழைகளை வாழவைக்கிற தோரணையில் பட்டினியில் உசிரைவிட்ட பசுமாட்டுக்காரனை பேட்டி எடுத்துக் கொண்டிருந்தான் ரிப்போட்டர் ஒருவன். பட்டினிக்கு பொறுப்பான அலுவலர்களிடம் பால்காரனை பாரம் கொடுத்துவிட்டுத்தான் நிருபர் ஓய்வான் என நினைத்துக் கொண்டு அறைக்குள் நுழைகிறேன். கட்டிலில் சாய்கிறேன்.

பின்னேரம் வெளிறிய சூரியக்கதிர்கள் சோம்பல் முறித்தபடி யன்னல் வழி வந்து என்னோடு கட்டிலில் படுக்கத்தயாரான போது நான் எழுந்து கொண்டேன். எரியும் கண்களுடன் மனைவி வைத்த தேநீரை அருந்தி, 'பொலிஷ்' ஆகி தெரு முனையில் ஒஃபீஸ் 'டொக்கியூமென்ற்'களை தட்டச்சுப் பொறிக்க கொடுத்த கடையினை நோக்கிப் போக மோட்டார் சைக்கிளை உதைத்து உசுப்பேற்றி உயிர்ப்பிக்கிறேன். மனைவி வரும்

வீடு திரும்பியபோது மனைவி செய்தி பார்த்துக் கொண்டிருந்தாள் ஏழைகளை வாழவைக்கிற தோரணையில் பட்டினியில் உசிரைவிட்ட பசுமாட்டுக் காரனை பேட்டி எடுத்துக் கொண்டிருந்தான் ரிப்போட்டர் ஒருவன். பட்டினிக்கு பொறுப்பான அலுவலர்களிடம் பால்காரனை பாரம் கொடுத்துவிட்டுத்தான் நிருபர் ஓய்வான் என நினைத்துக் கொண்டு அறைக்குள் நுழைகிறேன். கட்டிலில் சாய்கிறேன்.

வழியில் மண்ணெண்ணெய் வாங்கி வரும்படி கலனை தருகிறாள்.

நாற்பதில் எக்ஸிலேற்றரை முறுக்கி பிரதான வீதியைத் தொடும் பெரிய சந்திக்கு வருகிறேன். திரள் கட்டிக் குழுமிய சனங்கள் கலர் கலராய் தெரிந்தார்கள். கலவரம் தெரிந்த ஒரு முகத்தாரிடம் சைக்கிளை நிறுத்திக் கேட்டேன்."என்ன விஷயம்..." "அக்ஸிடென்ற்...".அவசரமாய் சைக்கிளை ஸ்ராண்ட் இட்டு கூட்டத்தின் இடுப்பினூடே தெரிந்த துவாரத்தின் வழி பார்வையை நுழைத்தேன். எனக்கு மேல் இருந்த வானம் படீரென வெடித்துப் பொல பொலத்து உதிர்வது போன்ற பிரமை. அவன்..அவனேதான். வாலறுந்த பல்லிபோல துடித்துக் கொண்டிருந்தான். காதுச் சோணையுள்ளிருந்தும் பின்னந் தலையாலும் கறுத்த கெட்டித்த ரத்தம். சனம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. கோடு... கச்சேரி அலைய வேண்டும் என்ற ஒற்றைப் பயம் எல்லோரின் கையையும் உணர்வையும் மனிதாபிமானத்தையும் தின்று தீர்த்திருந்தது."ச் ...சீய். கருணையற்றுப்போன அற்ப உயிரிகள்..." கூட்டத்தை விலக்கித் தள்ளி உள்ளோடி அவனை அள்ளி எடுத்தேன். அவன் கை இடுக்கினுள் இருந்து அவனும் அவன் குட்டித் தங்கையும் அம்மாவும் எப்போதோ எடுத்துக் கொண்ட மூலை சுருண்டிருந்த கறுப்பு வெள்ளை புகைப்படம் ஒன்று கீழே விழுந்தது. அவனை அள்ளிக் கொண்டேன். தலை மல்லாந்து அவன் சாந்த சொருபியாய் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆட்டோ ஓடிக் கொண்டிருந்தது. அவனைச் சலனம் சூழத் தொடங்கியது. ஹொஸ்ப்பிற்றலுக்கு இன்னும் ஐந்து நிமிட தூரம். தேவைக்கதிகமாக இறைவனை சேவிக்காத நான் அன்று அவனுக்காக கண் மூடி பிரார்த்திக்கத் தொடங்கினேன். மனக் கண்ணில் முதலையும் அதற்கு நடந்த செய்த ராஜ உபசாரமும் ஞாபகத்துக்கு வந்து போனது.

என்னை அறியாமல் வாய் முணு முணுக்கத் தொடங்கியது.

"முதலை அருகி வரும் உயிர்.. மனிசன் அருகாத உயிர்".

■


**துயர் நிறைந்த வேளைகளில்**
**உங்கள் சுமை நிறைந்த**
**தேவைகளை சுலபமாக்கி கனிவான**
**சேவை வழங்குபவர்**





Chapel Ridge
Funeral Home Inc

**Chapel Ridge**
Funeral Home & Cremation Centre

**Vilosan Sivatharman**, B.Eng
*Funeral Director*

8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1

**Telephone : (416) 993-0826**
Fax : (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

# எத்தனிப்பு



**தாட்சாயணி**

துடிப்பற்ற கனா
அந்தரத்தில் சுழல்கிறது
சிறகற்ற வெளியில்
நிலைத்து, நிலைத்து
வெறும் பிண்டமென நிற்கிறது

கனவு இப்படியிருக்கக் கூடாது


கனவென்பது
ஓராயிரம் சிறகுகளுடன்
வான்வெளியின் மூலை முடுக்கெங்கும்
சிறகடிப்பது

எனினும்,
இந்தக் கனவு
அசையாமல் நிற்கிறது

வெட்டப் பட்ட சிறகுகள்,
வரையறுக்கப்பட்ட எல்லைகள்


பிறகதற்கேன் கனவென்று,
ஒரு தேவதைத்தனமான பெயர்?

ஆற்றாமை தாளவில்லை
அயர்ச்சியின் முளையை
வெட்டிவிட்டு,
சிறகில்லாது விடினும்,
பறப்பதற்கு முயற்சிக்கலாம்,
இனியதல்லாத என் கனவே!



# உறவும், உணர்வும் – 2

## எந்தையும்...தாயே..!





**செ.ஸ்ரீனிவாசன்**

பையன் அப்பாவிடம் சொன்னான் 'அப்பா உன்னை என் கணக்கு டீச்சர் பார்க்கணுமாம் ..நீ ஸ்கூலுக்கு வரணும்'

எதுக்குடா என்னை வரச் சொல்றாங்க ?"

"கிளாஸ்ல ஒரு கேள்வி கேட்டாங்க..

9 ஐ 7 ஆல பெருக்கினா என்ன வரும்னு 63 ன்னு சொன்னேன் ..

சரி அப்புறம்...

7 ஐ 9 ஆல பெருக்கினா என்ன வரும்னு கேட்டாங்க ..

அதே எழவு தானே. வரும்... சரி நீ என்ன சொன்ன..

அதே எழவு தானே வரும்னு சொன்னேன் ..உன்ன வந்து பார்க்கச் சொல்லிட்டாங்க "

குழந்தைகள் "கெட்ட" வார்த்தைகள் பேசுவதில்லை

"கேட்ட"வார்த்தைகளையே பேசுகிறார்கள்..

என்பதை வலியுறுத்தும் இப்படி ஒரு சம்பாசணை தந்தைக்கும் மகனுக்கும் இடையில் தொடர்வது வாசகர் அனைவருக்கும் பெரும்பாலும் தெரியும்.மேலே உள்ள ஒரு குட்டிக்கதை ஒன்றின் பகுதியில் இருந்து குறித்த கதைசொல்ல வரும் செய்தி ஒரு பிள்ளையின் எதிர்காலத்தில் தந்தையின் பங்கு எவ்வளவு ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதை எமக்கு வலியுறுத்துகிறது.ஆனால் காலங்கடந்தே பெரும்பாலான பெற்றோரும் பிள்ளைகளும் இதனை உணருகிறார்கள். அதுவும் வளர்ந்து தனித்தனிக் குடும்பங்களாக ஆங்காங்கு பிரிந்து சென்று நாமும் தாய் தந்தையாக வாழும் போதே தாய் தந்தையின் பெருமைகளை நாம் உணர்கிறோம். அதுவும் தந்தையின் அன்பு அவர் இல்லாத போதே பலருக்கும் வெளிச்சத்துக்கு வருகிறது.

நல்ல தகப்பனைப் பெற்ற எல்லா மகன்களின் கனவும் அடுத்த ஜென்மத்தில் தமது தந்தை தங்கள் பிள்ளைகளாகப் பிறக்க வேண்டும் என்பதே...!

அன்றைய நாளிலும் விடியல் சூரியனை முந்திக்கொண்டது போல நிலம் வெளுத்து ஆர்ப்பரிப்பு தெருவில் விரிந்தது. இதனுள் தனது கடமைகளை விரைவாகவே முடித்துக் கொண்டு, வீட்டில் மனைவிக்கு துருவலையில் தேங்காய் துருவுதல் போன்ற ஒத்தாசைகளை அடுக்களை வரை சென்று புரிந்து புறப்படும் இவரும் ஒரு தந்தை தான். வெள்ளைநிறத்தோல், ஆங்காங்கே நரைத்த முடி,கூர்மைக்கண்கள், அனுபவத்தின் சாயல் பதிந்த முகம், நேர்த்தியான உடை துவிச்சக்கர வண்டியை மிதித்தபடி செல்லும் பொறுமை கொண்ட நல் தந்தை. மிக ஆரவாரம் மிக்க நகரின் உடல் — உயிர் பேணலகமான பொது வைத்தியசாலையில் X — Tray பிரிவில்

> “வைத்தியசாலையில் வைத்தியர்களுடன் வேலை செய்வதால் ,பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவந்தேயாக வேண்டும் என்ற விடாப்பிடி இந்த தந்தைக்கு இருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. மூன்று பிள்ளைகளில் மூத்தவன் மகன். இரண்டாவது மகள். மூன்றாமவன் குட்டி மகன். மூத்தமகன் வைத்தியனாகிறான் .மற்றையவர்கள் வங்கிகளில் உத்தியோகத்தர்கள் ஆகின்றார்கள். இவர்கள் இந்த நிலையை அடைய முன் மாரடைப்பு வந்து அந்த அற்புத தந்தை இறந்து விடுகிறார்.”

வேலை பார்ப்பவர். எல்லாத்தந்தைகள் போலவே பிள்ளைகளின் எதிர்காலத்தையே கனவாகக்கொண்டு தனது தொழில்,குடும்பம் என வாழ்வை சுருக்கிக் கொண்டவர். வீட்டில் மனைவிக்கு உதவிசெய்து, தனது வேலைகளையும் பார்த்து,பிள்ளைகளின் நலன்களில் கவனமெடுத்து, அவர்களைப் படிப்பித்து,பெரியவர்கள் ஆக்கி, அழகு பார்க்க வேண்டும் என்பது தான் இவரின் கனவும், லட்சியமும் கூட...!

வைத்தியசாலையில் வைத்தியர்களுடன் வேலை செய்வதால், பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவந்தேயாக வேண்டும் என்ற விடாப்பிடி இந்த தந்தைக்கு இருந்ததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. மூன்று பிள்ளைகளில் மூத்தவன் மகன். இரண்டாவது மகள். மூன்றாமவன் குட்டி மகன். மூத்தமகன் வைத்தியனாகிறான். மற்றையவர்கள் வங்கிகளில் உத்தியோகத்தர்கள் ஆகின்றார்கள். இவர்கள் இந்த நிலையை அடைய முன் மாரடைப்பு வந்து அந்த அற்புத தந்தை இறந்து விடுகிறார். குடும்பம் நிர்க்கதியாக, நிற்க வேண்டிய நிலையில் பிள்ளைகள் குடும்பத்தைச் சுமக்கத் தொடங்கினர். தாயை இறுதிவரை கண்போல் காக்க வேண்டும் என்ற தந்தையின் விருப்பையும் பிள்ளைகள் நிறைவேற்றுகிறார்கள். அப்பாவின் பாசம் அவரது கடமையில் தெரியும் என்பார்கள்.

ஒரு நல்ல தந்தை ஆயிரம் ஆசிரியர்களுக்கு சமமாக இருப்பார்! இதனாலேயே இந்த தந்தை மூன்று பிள்ளைகளினதும் வாழ்வின் திசை காட்டியாக நின்று நிமிர்ந்து நிற்கிறார்.

இப்படி கோடானுகோடி தந்தையர்களை உலகில் காணலாம்.

தாய் சொர்க்கத்தின் வாசல் என்றால் தந்தை தான் அந்த சொர்க்கத்தைப் பிள்ளைகளுக்குக் காட்டுகிறார்.

பெரும்பாலும் ஒரு ஆண் பிள்ளை தந்தையின் குணங்களை கச்சிதமாக பிடித்துக்கொள்கிறது.இதனால் எல்லா மகன்களுக்கும் தந்தை தான் முதல் நாயகன் (Hero) ஆகிறார் .தனது அன்பை ஊட்டவே பிள்ளையை இடுப்பில் சுமந்து பிள்ளையின் முகத்தை இதயத்தில் புதைக்கிறாள் தாய். தான் காணாத உலகத்தைத் தன் பிள்ளை காணவேண்டும் என்பதற்காகவே; பிள்ளையை அப்பா தோளில் சுமக்கிறார், என்ற மரபு இன்று பலரால் வியக்கப்படுகிறது.அதனால் தான் பல பிள்ளைகளுக்கு அப்பா பெரும் வரமாகிவிடுகிறார். பிள்ளைகளைப் பிள்ளைகளாக வளர்க்க வேண்டும் . அவர்கள் விரும்பும் வழியில் விட்டு வேடிக்கை பார்ப்பவராகத் தந்தை இருக்க வேண்டும் என்று சொன்னால் பலரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால் உண்மை அது தான் ...!



இறுக்கமாக வளர்க்கப்படும் சிறுவர்கள் வாழ்வில் தோற்றுவிடுகிறார்கள் என்பதும் அனுபவம் தான். கொஞ்சம் சுதந்திரமாக வளர்க்கப்படுவதையே குழந்தைகள் விரும்புகிறார்கள். அப்படியான தந்தைகளே, நல்ல எதிர்காலத்தை குழந்தைகளுக்குக் கொடுக்கிறார்கள். கண்டிப்பானவராக இருக்கும் தந்தையரை விட வழிகாட்டியாக இருக்கும் அப்பாக்களையே பிள்ளைகள் விரும்புகிறார்கள். இந்த இடத்தில் பல தந்தையர்களும் வெறும் நடிகராகி விடுகிறோம். ஒரு பிள்ளைக்கு தந்தையாவது மிகவும் இலகுவானது. ஆனால், ஒரு தந்தையாக இருந்து பிள்ளைகளின் நாளாந்த நடவடிக்கைகளைக் கவனிப்பது மிகவும் கடினமானது.

அதுவும் இலங்கை போன்ற மூன்றாம் உலக நாடுகளில் இன்றைய பணவீக்கம்; விலைவாசியின் நாளாந்த உயர்வு பொருள் தட்டுப்பாடுகளுக்கிடையில் தந்தையின் வகிபங்கு கடும் சவாலானது."தந்தை

சொல்மிக்க மந்திரமில்லை” என்பது காலஓட்டத்திற்கேற்ப சிந்திக்கத்தக்கது. தந்தையர் பிள்ளைகள் மனம் போல் நல்லதைச் சொல்லவேண்டும் என்பது இன்றைய பிள்ளைகளின் எதிர்பார்ப்பு. ஒரு குழந்தையின் நடத்தை, பழக்க வழக்கம், பண்பு எல்லாவற்றுக்கும் முன்னுதாரணமான வழிகாட்டி தந்தையே. தந்தை தனது பிள்ளை எப்படி வரவேண்டும் என கனவு கண்டு; அவர்களை அதற்காக வருத்தி அதில் தோல்வி கண்டு அவர்கள் பாதை தவறிச்செல்லும் சந்தர்ப்பங்களே அதிகமாக நிகழ்கின்றன. “மூத்தோர் வாக்கும் முது நெல்லிக்கனியும் முன்னர் கசக்கும் பின்னர் இனிக்கும்” என்ற முதுமொழி தந்தையர்களால் தரமாக கையாளப்படவேண்டும்.



ஒரு அப்பா தான் உலகில் சாதிக்க நினைத்தவற்றை பிள்ளைகள் மூலம் நிறைவேற்ற நினைப்பது வழமைதான். எனினும் இது தவறு எனத்தெரிந்தும் பல தந்தையர்கள் இந்தக் கனவில் இருந்து விடுபடுவதாக இல்லை. தன் பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அப்பாக்களுக்கு இருக்கும் வேகம் ஒப்பிடமுடியாதது. தினம் தினம் பிள்ளைகள் பற்றிய எண்ணத்திலேயே இவர்கள் வாழ்க்கைச் சக்கரம் சுழல்கிறது. தெய்வங்கள் எல்லாம் தோற்றே போகும் தந்தை அன்பின் முன்னே...! தாலாட்டு பாடும் தாயின் அன்பும் தந்தை அன்பின் பின்னே...! என்ற பாடல் வரிகள் ஒரு வகையில் நிதர்சனமானவையே..! பல்வேறு சந்தர்ப்பங்களில் தந்தை எம்முன் தியாகியாகவே நிற்கிறார். குடும்பத்திற்காகவும் சமூகத்திற்காகவும் தன்னைத் தியாகம் செய்யும் தந்தையர்களை நாம் அதிகம் பார்த்துள்ளோம். தனது சமூகத்தின் விடிவிற்காய் தம்மைத் தமது உயிரை அர்ப்பணித்த அப்பாக்கள் முள்ளிவாய்க்கால் தொடக்கம் உக்ரைன் வரை நீண்டு செல்கிறார்கள். வெற்றி பெற்ற குடும்பங்களில் அப்பாக்களின் தியாகம் ஒளிவீசாமல் இல்லை.குடும்ப சுபீட்சத்துக்காய், கடல்கடந்து சென்று வீட்டையும், சமூகத்தையும் பிரிந்து கண்காணாத தேசத்தில் இரவும், பகலுமாய் மாடாய் உழைத்து மனைவி, பிள்ளைகளை சொகுசாக வாழ வைக்க தன் இரத்தத்தைப்பாலாக்கும் தந்தையர்களின் தியாகங்கள் வார்த்தைகளுக்கு அப்பாற்பட்டவை.

தனது பிள்ளைகளை வளர்த்து நல்ல நிலைக்கு கொண்டுவர, பொருளாதார நிலையை உயர்த்த அப்பாமார் தோள்களில் சுமக்கும் சுமைகளும் அவமானங்களும் சொல்லில் அடங்காதவை . வலிமிகுந்த பாதைகளை இதற்கென தந்தையர்கள் கடந்து வருகிறார்கள் என்பதை பிள்ளைகள் உணர வேண்டும்யுத்தம் தந்த பிள்ளைகளின் பிரிவால், தினம் தினம் துடி துடித்து இறக்கும் தசரதர்கள் பலரை இன்றும் கண்முன் பார்க்கிறோம். தனது தந்தைக்காக திருமண வாழ்வைத் துறந்த பீஷ்மர்கள் போன்ற பிதாமகன்களும் நம் மத்தியில் தந்தையர்களாக உள்ளனர். தனது குடும்பம் முழுவதும் வெளிநாடு பயணமாக தனது தந்தைக்காக ஊரில் வீட்டுடன் இருந்து நல்ல வாழ்வை விடுத்து தனது தந்தையின் சுகமே முக்கியம் எனத் தன்னையே அர்ப்பணித்த முன்னுதாரண தனயன்களும் இருக்கின்றார்கள்.

பிள்ளைகளுக்கு நல்ல சுதந்திரம் கொடுத்து அவர்கள் பாதையில் தலையிடாது, பார்த்துக்கொண்டிருக்கும் அப்பாக்கள் கிடைப்பதும் பிள்ளைகளுக்கு பெரிய வரமே..! பல பிள்ளைகளுக்குத் தந்தை மிகப்பெரிய வெகுமதியாகி விடுகிறார். பிள்ளைவளர்ப்பில், கடிவாளத்தைத் தனது கரங்களில் எடுக்காது, கண்களில் நாணயக்கயிற்றை வைத்துள்ள, வைத்திருந்த தந்தையர்கள் சிறந்த ஆளுமைமிக்க .பரந்த அறிவுள்ள, தலைமைத்துவம் மிக்க பிள்ளைகளை வளர்த்தெடுத்துள்ளார்கள்.



நடக்கவும் வாழவும் ஒரு அப்பாவிடமிருந்து குழந்தை கற்றுக்கொள்ளும் பயிற்சி வாழ்வின் அத்திவாரங்கள். தனது பிள்ளைகள் விடுகின்ற தவறுகளை தமது தவறுகளாக்கிய,அப்பாக்கள் எனும் கவரிமான்களை நாம் கண்டுள்ளோம். பல துன்ப, துயரங்களை தாங்கிப் பிள்ளைகளுக்காகச் சகித்துவாழும் அப்பாக்கள் முடிமன்னர்களே.!

தனது குழந்தை நன்றாகப் படிக்கவும், நன்றாக உழைக்கவும் எத்தனை பேரிடம் மண்டியிட்டும் அவமானங்களை அடைகாத்தும் பல தந்தைகள் பிள்ளைகளை பெரியவர்கள் ஆக்கியிருக்கிறார்கள்.இந்த அப்பாக்கள் பலர் இன்று முதியோர் இல்லங்களில் அடைக்கலம் புகுவது வேடிக்கையாகவுள்ளது. பிள்ளைகள் விரும்பியதை அடைய புலம் பெயர்நாடுகளில் பனியிலும்,கடும் வேதனையிலும் இரவுபகலாக உழைத்தும், பலரிடம் கையேந்திக்கடன்பட்டும் குடும்ப கஸ்டங்களை தமது முதுகில் சுமக்கும் அப்பாக்களை, எந்த ஒரு படத்திலும் வரும் ஹீரோக்களாலும் வெல்ல முடியாது.

இப்படியாக அருகில் இருந்து ஒளியூட்டும் கைவிளக்குகளின் அர்ப்பணிப்பு அளப்பரியது. எனினும் “தம் பிள்ளைகளை நல்வழிப்படுத்திக் கூட்டிச் செல்வதற்கு அவர்களுக்கு கண்டிப்பு அவசியமாகிறது. அதனாலென்னவோ பல அப்பாக்கள் தம் பிள்ளைகள் மீது கொண்டிருக்கிற,தாய்க்கு நிகரான நேசத்தை வெளிக்காட்டாமல் மிகவும் இரகசியமாகவே வைத்திருக்கிறார்கள் “ என்ற ஒருவரின் வரிகள் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. குடும்பவிருட்சம் என்பதை ஒரு மனிதன் சந்ததி, சந்ததியாக வளர்த்துக்கொள்ளும் மரபு, அப்பா என்கிற ஆணிவேரில் இருந்தே ஆரம்பமாகிறது. வாழ்க்கை ஒரு அனுபவம். அது தரும் பாடத்தை விட சிறந்தது எதுவும் இல்லை என்பது ஒரு தந்தையின் அழுத்தமான சிந்தனை. எல்லா குழந்தைகளுக்கும் ஓடிக்கொண்டிருக்கும் அந்த நம்பிக்கை நதியின் நதிமூலம் அவரவர் அப்பாக்களே

ஒரு குழந்தை அப்பாவின் கைப்பிடித்துக் கொண்டு எடுத்து வைக்கிற முதல் அடியே, நம்பிக்கை விதையின் முதல் நாற்று நடும் நிகழ்வு. விழுந்து எழுந்து,முட்டி மோதி வலிகளையும்,வடுக்களையும் தாங்கிக் கொண்டு

தனது ஒரு மகனையாவது வெளியில் அனுப்பிவைக்க வேண்டுமெனத் தான் சேகரித்த சொத்துக்கள் அத்தனையும் விற்றுக் கனடாவுக்கு அனுப்புவதற்கு ஏஜென்சியிடம் பணம் கொடுக்க மகன் தென்ஆபிரிக்காவில் இறக்கிவிடப்பட நாட்கள் மாதங்களாகி, மாதங்கள் வருடங்களாகி இருந்த அத்தனையையும் இழந்து நிற்க, மகன் இடைநடுவில் நின்று உண்ண வகை தெரியாது தவித்து நிற்கமீண்டும் ஊர்திரும்பி வா ..! என அழைக்கும் அப்பாவின் பாசத்துக்கும், சோகத்திற்கும்; இடையிலான வேஷத்தைப் பார்த்து வேடிக்கை பார்க்கும் உலகம்

இது..! பல இரவுகள் தூக்கமற்று குடும்பப் பாரங்களை மனதில் சுமந்து, முடியுதிர் மன்னர்களாக புலம்பெயர் நாடுகளில் வாழும் அப்பாக்கள் பலரை நாம் காண்கின்றோம். நீச்சல், உதைபந்து, கிரிக்கெட், கராட்டி, செஸ், கல்வி,வெற்றி, தோல்வி அனைத்தையும் கற்றுக்கொடுத்து,அத்தனை துறைக்கும் முதல் ஆசானாகி பிள்ளைகளின் ஆற்றலை அளவெடுக்கும் தந்தையர்கள் ஆயிரம். ஊரில் தோட்டங்களிலும், வயல்வரம்புகளிலும், உழைக்கும் அன்றாடம் கூலி வேலை பார்க்கும், தொழில்திறமையால் உழைத்து வாழும், அப்பாக்களின் நரம்புதெரியும் கைகளும் ரேகை தேய்ந்த உள்ளங்கைகளும், பித்தவெடிப்பு ஏற்பட்ட பாதங்களும், குழி விழுந்த கன்னங்களும், நரைவிழுந்த முடிகளும் தந்தையரின் தியாகத்தின் ஆயிரம் கதைகள் பேசி நிற்கும்.

ஆனால் அப்பாக்களை உதறித்தள்ளும் பிள்ளைகளும் உள்ளனர்.அப்பாக்களை முதியோர் இல்லங்களில் சேர்க்கும் கலாசாரமும் பெருகியுள்ளது. மறுதலையாக பிள்ளைகளை நடுத்தெருவில் விட்ட தந்தையரும் சமூகத்தில் இல்லாமல் இல்லை. எனினும் அம்மா பத்து மாதம் சுமக்க அப்பா ஆயுள் முழுதும் பிள்ளைகளைச் சுமக்கிறார். தோழனாக இருந்து தோல்விகளை வெற்றிகொள்ளும் அப்பாக்கள் கிடைத்தால் அது பிள்ளைகளுக்கு உயர் விருது தான். பிள்ளைகளின் தேவையறிந்து அவர்கள் கேட்காமலேயே உதவும் தந்தை, தீயவை பிள்ளைகளை அணுகக்கூடாது என கண்ணில் விளக்கெண்ணெய் ஊற்றிக் காவலிருக்கும் தந்தை,துன்பங்கள் அத்தனையையும் மறைத்து இன்பங்களையே தரும் தந்தை, உண்மையில் பிள்ளைகளின் பக்கத்தில் உள்ள சூரியர்களே..!

சிறு வயதுகளில் கோவில் திருவிழாக்களில் அப்பா கையை பிடித்து பொடி நடையாய் நடக்க; நாமும் வேகமாக ஓடி ஓடி நடந்த காலங்களில், ஊரைப்பார்த்து மகிழ்ந்த கணங்கள் எம்முடன் இன்று வரை நீள்கின்றன. தந்தை தாயின் அருமை ஒவ்வொரு பிள்ளைக்கும் தாம் தந்தை தாய் ஆகும் வரை புரிவதில்லை தான்..!என்பது துரதிஷ்டமே..! குடும்பமாகி கணவன் மனைவியாக இருவரும்.. வாழ்க்கை நடத்தும் போதே தந்தையின் பாசத்தைப் பலரும் உணருகிறார்கள். அது வரை பாவம் அப்பாக்கள். அதிகமானோர் குடும்ப அன்புச் சிறைக்குள் அகப்பட்ட மனசாட்சியின் கைதிகளே..!

இது தான் தந்தையர்களின் வேதனை. இதனை நினைத்துச் சிரிப்பதா..? அழுவதா..? அப்பாவி அப்பாக்கள்..!அப்பாக்களின் பாசத்துக்கும் வேஷத்துக்குமான ஊசலாட்டத்தை, பரிதாபநிலையை எங்கோ கேட்ட இந்த வாழ்க்கை கணக்கும் நன்கு எடைபோடுகிறது.

ஐந்து வயதில் பையன் சொல்வான் எங்க அப்பா தான் Super..! பத்துவயசில சொல்வானாம் எங்க அப்பா நல்லவரு ..!அப்பப்ப கத்துவாரு..! பதினைந்து வயதில சொல்வானாம்..!அம்மாவை கூப்பிட்டு உன்ர புருசன் என்ர ரூட்டில வர்ராரு..கொஞ்சம் சொல்லி வை..என்பானாம்..! இருபது வயசில சொல்வான் எப்பிடிம்மா ..? இந்த ஆளை போய் நீ கலியாணம் கட்டின..! முப்பது வயசில சொல்வானாம்..எங்க அப்பாட்ட நான் பேசிறதில்ல..நான் என்ன செய்தாலும் அதைத் தப்பு என்கிறார்..! நாற்பது வயசில பிள்ளை குட்டியோட மல்லுக்கட்டும் போது சொல்வானாம்.. "எங்க அப்பா அதை இதை சொன்னாலும் ரொம்ப நல்லவரு..! ஐம்பது வயசாகிட்டா அந்த வறுமையிலும் எங்களை என்னமாதிரி வளர்த்தாரு எங்கட அப்பா..! எங்க அப்பா தான் Great என்பான்.

இது தான் நிஜமும். எல்லா அப்பாக்களும் குடும்பத்தில் உள்ளோருக்கு எல்லாம் ஹீரோ தான்..! அப்பாக்களை, அவர்களின் உணர்வுகளை ;அவர்கள் வாழும் போதே புரிந்தும், உணர்ந்தும் நடக்கின்ற பிள்ளைகளாய் பிறப்பதும் வாழ்வதும் தந்தை பெற்ற வரமே..!

■

# என்று சொன்னார்கள்



**குணாளினி**

வானளாவ உயர்ந்து
விரிந்த ஒரு பெருங்காடு.
அங்கொரு
ராஜநடையிடும் சிங்கம்.
நாள் கோள்கள் கூடிய
நல்ல தருணம் ஒன்றிலே
சிங்கத்தின் மீதேறி அமர்ந்தாள்
வனரட்சகி ஒருத்தி .
அந்த ஏறுகையில்
சிங்கத்தின் பெருமிதம் ததும்பிய
உயிர்ச்சுர நரம்பு வெடிக்க
எவருக்கும் வாய்க்காத
அதன் கழுத்து நிமிர்த்தல்
காணாமல் போனது
என்று சொன்னார்கள்.
அதன்பின்
சிங்கத்தின் கம்பீர முழக்கத்தில்
காடு அதிரவில்லை.
கனத்த அதன் சிரிப்பொலியைக்
காற்றுக் காவவில்லை.


நேற்று இன்று நாளையென
காலமாற்றம் கரைந்தழிய
கூடிச் சினேகித்த நட்புகளுடன்
வாழ்வுரசம் பருக
சிங்கம் வருவதில்லை
என்று சொன்னார்கள்.
காலப்போக்கில்,
பின் பிடரியில் சிலிர்த்துச் சிலிர்த்து
மென்காற்றோடு குலவிச் சரசமிடும்
தன் தங்க மயிர்களை மழிக்கவல்ல
சவரக்கத்தியாளனை
சிங்கம் தேடித் திரிந்தது என்றும்
வனரட்சசி தன் நகங்களால்
மாயக்கத்தி ஒன்றினைச் சிருஷ்டித்து
அப்பொன்மயிர்களை வழித்தெறிந்தனள்
என்றும் சொன்னார்கள்.
வேங்கைக்கு இணையாகத்
தாவ வல்ல அதன் கால்களை
நீல நிற இழைகளினால்
அவள் கட்டி இருப்பதாகவும்
நீள் இரவுகளில்
விஷக் கொடுக்குடைய சிலந்தியாகி
அவளே அந்நூலை நூற்பதாகவும்
அந்நூல் சுற்றிய நூற்கண்டுகளை
பூத்துக்குலுங்கும் பருத்தி மரக்காட்டிடையே
பதுக்கி வைக்கும் அவள்,
ஒரு கைதேர்ந்த பொம்மலாட்டக்காரி
என்றும் சொன்னார்கள்.
அவள் சுரம் பிரிக்கும் தாளலயங்களில்
தன் பாதங்களை நடப்பிக்கும்
சிங்கத்தின் உயிர் நர்த்தனங்கள்
உறைநிலைக்கு நகர்ந்தன என்றும்




சுயம் தொலைந்து போக
பயம் உலாவும் விழிகளைத்
தன்னுரிமை ஆக்கியது என்றும்
ஆண்மையை உறுதிசெய்யும் நிமித்தம்
ஓரிரு பிள்ளைகளை
உற்பவிக்கும் கடமை புரிந்தது
என்றும் சொன்னார்கள்.

இறுதியாக,
முன்பொருநாளில்,
“அவனும் ஒரு சிங்கமாக இருந்தான்”
என்று சொன்னார்கள்.

# ஐயம் தெளி – 1






# நாட்டின் பொருளாதார நெருக்கடிகளினால் தாங்கொணாத் துயருறும் மக்களின் இன்னல்களுக்குச் சாத்தியமான தீர்வுதான் என்ன ?





**மல்லியப்புசந்தி திலகர்** ■

நாட்டில் இன்றைய நிலைமைகளுக்கு தேசிய கொள்கைத் திட்டமிடலிலும் நடைமுறைப்படுத்தலிலும் ஏற்பட்ட பிரதான குறைபாடுகளே காரணமாகும். எனவே ஆட்சியாளர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். இது நீண்டகால தீர்வுக்கான வழிமுறைகளாகும்.

ஆனால் குறுங்காலத்தில் பொதுமக்களுக்கான அவசர நிவாரணங்கள் தேவைப்படுகின்றன. அத்தகைய நிவாரணங்கள் முன்னர்போன்று சமூக நலன் நோக்கிய நிவாரணங்களாக அன்றி அத்தியாவசிய தேவைகளுக்காக தேசிய ரீதியாகப் பெற்றுக் கொடுக்க வேண்டிய அடிப்படை நிவாரணங்களாக உள்ளன. எரிபொருட்கள், சமையல் எரிவாயு, உணவுப் பொருட்கள், விவசாயத்துக்கான உரம், பத்திரிகை அச்சு பொருட்கள் , பாடப்புத்தகங்கள் என உடனடியாகத் தீர்வு காணப்படவேண்டிய விடயங்கள் உள்ளன.

பணவீக்கம் வேகமாக உயர்வடைந்துவரும் நிலையில் நாட்டில் வருமானம் உயர்வடையாது அதே நேரம் வருமானப் பெறுமதி குறைவடைந்துச் செல்லும் போக்கு அபாயகரமானது. மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேலும் மேலும் குறைவடையச் செய்யக்கூடிய இந்த நிலைமை மக்களை மன அழுத்தத்துக்கு உட்படுத்தக் கூடியது. இது அவர்களது தொழில்சார்ந்த உற்பத்தித்திறனை குறைக்கவல்லது. இதனால் பொருளாதார வீழ்ச்சிக்கான திசையே அதிகம் தெரிகிறது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களைப் பொறுத்த வரையில் ஆயிரம் ரூபா சம்பள அதிகரிப்பு முழுவதுமாக நடைமுறைக்கு வராத நிலையில் இப்போது பணவீக்கம் காரணமாக அதன்பெறுமதி 500/— ஐ விட குறைந்து விட்டது. மறுபக்கமாக அவர்களது நாளாந்த வாழ்க்கைச் செலவு அதிகரித்தும் செல்கிறது. இந்தநிலையில் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாட்சம்பள அதிகரிப்பு அவசியமாகிறது. அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவர்கள் சார்ந்திருக்கும் தொழில் துறையில் ஒரு வாய்ப்பு உள்ளது. அதுதான் அவர்கள் சார்ந்திருப்பது ஏற்றமதி பொருளாதாரத்தில் ஆகும். எனவே டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி குறைந்தாலும் ஏற்றமதி பெறுமானத்துக்காக கிடைக்கும் டொலர் அடிப்படையிலான வருமானம் உயர்வானதாகும். பெருந்தோட்டத்துறையில் உற்பத்திச் செலவாக மூலப்பொருட்களின் விலைகள் கூடியிருந்தாலும் பெரும்பங்கு வகிக்கும் உழைப்புக்கான கூலி ( நாட்சம்பளம் ஒப்பந்த அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டு இருப்பதால் பெருந்தோட்டத்துறைக் கம்பனிகளுக்கு இலாபம் அதிகரித்து உள்ளது. எனவே அந்த இலாபத்தின் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்கான சம்பளமாக கம்பனிகள் பெற்றுக் கொடுக்க முன்வரவேண்டும். வாதத்தின் அடிப்படையை முன்வைத்து தொழிற்சங்கங்களும் அதனைப் பெற்றுக் கொடுக்க முன்வருதல் வேண்டும்.

■




# ஐயம் தெளி – 2



■ தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**விரிவுரையாளர், ஒஸ்லோ பல்கலைக்கழகம்**

இலங்கையின் இன்றைய நெருக்கடி பல்பரிமாணமுடையது. அதன் வெளித்தெரிகின்ற பரிமாணமே பொருளாதார நெருக்கடி. இலங்கையின் நெருக்கடி நான்கு நெருக்கடிகளின் கூட்டு விளைவு. முதலாவது அரசியல் நெருக்கடி, இரண்டாவது ஆட்சியியல் — நிர்வாக நெருக்கடி, மூன்றாவது பொருளாதார நெருக்கடி, நிறைவாக சமூக நெருக்கடி. ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்த இந்த நெருக்கடிகள் தனித்தனியாக மிகவும் ஆழமானவை. இவை சுதந்திரத்திற்குப் பிந்தைய பின்காலனிய இலங்கையின் தேசக் கட்டுமானத்தோடும் அதன் வளர்ச்சியோடும் நெருக்கமானவை. இன்று இலங்கை வேண்டி நிற்பது முற்றுமுழுதான ஒரு கட்டமைப்புசார் மாற்றத்தையே. அது சாத்தியப்படாமல் பொருளாதாரப் பிரச்சனைகளுக்கான தீர்வை எட்டமுடியாது.

சாத்தியமான தீர்வுகள் குறித்துப் பேசும்போது மூன்று விடயங்களை அடிப்படையாக நோக்க வேண்டியுள்ளது. முதலாவது இந்த நெருக்கடியில் இருந்து நாம் பெற்றுக்கொண்ட பாடங்கள் என்ன. இரண்டாவது, முன்வைக்கப்படுகின்ற தீர்வுகள் சாத்தியமானவையா. மூன்றாவது, சாத்தியமான குறுகியகால, நெடுங்காலத் தீர்வுகள் எவை.


இந்நெருக்கடியில் இருந்து 7 பாடங்களை நாம் கற்கவியலும்:

1. இனத்துவத் தேசியவாதத்தால் பொருளாதார பிரச்சினைகளை தீர்க்க முடியாது.

2. வல்லுனர் அரசியல் (technocratic politics) தீர்வு அல்ல.

3. பொது நிர்வாகத்தை இராணுவமயமாக்கி உருவாக்கப்பட்ட “ஒழுக்கம்” என்ற தோற்ற மயக்கம் மோசமாக தோல்வியடைந்துள்ளது.

4. “வலுவான தலைவரால்” நாட்டை வளமான நிலைக்கு கொண்டு செல்ல முடியாது.



5. ஜனரஞ்சக அரசியல் எப்போதும் பொருளாதார வளர்ச்சியை குழிபறிக்கும்.

6. பாராளுமன்றம் மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்கவியலாத களமாகியுள்ளது.

7. அரசியல்வாதிகளின் நடத்தை அவர்கட்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியின் தூரத்தை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடிக்கான உடனடித் தீர்வான முன்வைக்கப்படுவது சர்வதேச நாணய நிதியத்திடம் (ஐ.எம்.எப்) கடன் பெறுவதாகும். ஆனால் இவ்வாறு பெறப்படுகின்ற கடன் எமது பிரச்சனைக்குத் தீர்வல்ல. ஐ.எம்.எப் கடன் என்பது சாதாரண உழைக்கும் மக்களின் மீது மேலும் சுமையேற்றும், சுரண்டும் ஒரு வழிமுறையே. இங்கு இரண்டு விடயங்களை நோக்க வேண்டும். முதலாவது இலங்கையின் மொத்த வெளிநாட்டுக்கடன் 51 பில்லியன் அமெரிக்க டாலர்கள். இலங்கை இவ்வாண்டு மீளச்செலுத்தவேண்டிய கடன்தொகை 7 பில்லியன் டாலர்கள். இவ்வாண்டுக்கான உத்தேச ஏற்றுமதி 12 பில்லியன், உத்தேச இறக்குமதி 22 மில்லியன் எனவே இவ்வேற்றுமதி இறக்குமதியில் மட்டும் துண்டுவிழும்தொகை 10 பில்லியன் டாலர்கள். இலங்கையின் கையிருப்பு கிட்டத்தட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டாலர்கள். ஐ.எம்.எப்விடம் இருந்து பெறக்கூடிய ஆகக்கூடிய கடன் 4 பில்லியன் அமெரிக்க டாலர்கள், அதையும் பல தவணை இடைவெளிகளிலேயே பெறமுடியும். ஐ.எம்.எப்பிடம் கடன்பெறுவதற்கு இலங்கை கட்டமைப்புச் சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும். அவை மரத்தில் இருந்து வீழ்ந்தவனை மாடேறி மிதித்த கதையாய்

ஏற்கனவே நொடிந்து போயுள்ள அப்பாவிப் பொதுமக்களை மேலும் வதைக்கும்.

ஐ.எம்.எப்விடம் போனால் மேலும் கடன்களை வாங்குவதற்கு இலாயக்குள்ள நாடாக இலங்கையை மாற்றவியலும் என்பதே ஐ.எம்.எப்பிடம் செல்வதற்கான அடிப்படை. அதற்குமேல் வேறெதுவுமில்லை. மொத்தத்தில் நாம் இன்னும் கடனாளியாகிறோம். இந்தக் கடன்சுமையும் சாதாரண மக்கள் மீதே ஏற்றப்படும். மொத்த அந்நியக் கடன் பற்றிப் பேசுகிற அளவுக்கு அதைவிட அதிகமாகவுள்ள உள்நாட்டுக்கடன் பற்றிப் பேசப்படுவதில்லை. இவை எமது பொருளாதார நெருக்கடியின் சிக்கல்தன்மையை விளக்குகின்றன.

உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கப்படல், மின்சாரம், தண்ணீர், எரிபொருள் ஆகியவற்றின் விலைகள் பன்மடங்காதல், நிவாரண உதவிகள் நிறுத்தப்படல் என்பன ஏற்கனவே கட்டம் கட்டமாக நடந்தேறுகின்றன. இந்தப் பின்புலத்திலேயே சாதாரண மக்களுக்கான தீர்வுகளை எதிர்வுகூறவேண்டியுள்ளது. முதலாவது, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கான திட்டங்களை முன்னெடுத்தல் வேண்டும். இது நகரங்களை விடக் கிராமங்களில் சாத்தியமானது. வீட்டுத் தோட்டங்கள், சிறு பயிர்ச்செய்கைகள், விவசாய நிலங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல், மீன்பிடியை உள்ளூர் பயன்பாட்டுக்கு உரியதாக மாற்றல் என்பன இதில் பிரதானமானவை. இரண்டாவது, எமது நுகர்வுப் பழக்கத்தில் இருந்து மெதுமெதுவாக விடுபடுதல். உலகமயமாக்கலும் அத்தோடு இணைந்த தொழிநுட்பமும் கடந்த சில தசாப்தங்களில் மிகைநுகர்வை சாத்தியமாக்கியுள்ளன. அதிலிருந்து மீள்வதற்கான வழிவகைகளை நாம் ஒவ்வொருவரும் தேட வேண்டும். மூன்றாவது, செல்வந்தர்கள் மீதான வரிகள் அதிகரிக்கப்படல் வேண்டும். இன்று அதிகவரிச்சலுகைகளைப் பெறுபவர்களாக செல்வந்தர்களே இருக்கிறார்கள். அவர்கள் மீது செல்வ வரிகள் (wealth tax) நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நீண்டகாலத் தீர்வுகளைப் பொறுத்தவரையில் இந்த நெருக்கடியின் மூலகாரணி 1977ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த சந்தைப் பொருளாதாரமே என்ற உண்மையை விளங்கலும் ஏற்றுக்கொள்ளலும் அவசியமானது. கடந்த நான்கு தசாப்தங்களில் இலங்கை உற்பத்திப் பொருளாதாரத்தில் இருந்து சேவைமையப் பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்துள்ளது. இது கட்டற்ற இறக்குமதியை ஊக்குவித்துள்ளதோடு இலங்கையைத் தங்குநிலைப் பொருளாதாரமாக மாற்றியுள்ளது. இதிலிருந்து மீள்வதாயின் முதலில் இலங்கைக்கான தேசியக் பொருளாதாரக் கொள்கையை உருவாக்கல் முதன்மையானது. அதற்கு விவசாய, கைத்தொழில் பொருளாதாரமாக இலங்கை மாற்றமடைய வேண்டும். அடுத்து கடந்தகாலத்தில் செழிப்புடன் இருந்த கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் வலுப்படுத்தப்பட வேண்டும். இலங்கையின் தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதில் உழைப்புக்கேற்ற ஊதியம் அடிப்படையாய் அமைவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பணி முதன்மையாக இருக்க முடியும்.

இவையனைத்துக்கும் மேலாக, இலங்கையின் அரசியல் பண்பாடு, ஊழலிலும் அதிகாரத் துஸ்பிரயோகத்திலும் அடியூன்றியுள்ளது. இதை மாற்றுவது அவசியம். பொறுப்புக்கூறலும் வெளிப்படைத்தன்மையும் சகல மட்டங்களிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். அதற்கு இலங்கை முழுமையான ஒரு மாற்றத்தை வேண்டிநிற்கின்றது. அம்மாற்றமின்றிப் பொதுமக்களுக்கு நீதியானதும் நின்றுநிலைக்கக்கூடியதுமான பொருளாதாரத் தீர்வுகள் சாத்தியமில்லை என்பதே வருத்தத்திற்குரிய உண்மை. ■

# ஐயம் தெளி – 3





**தமிழ்க்கவி**

எழுத்தாளர், சமூகப்பணியாளர்

இலங்கை .



இலங்கையில் இது இப்போது மட்டும் நேர்ந்ததல்ல. ஆயிரத்து தொளாயிரத்து அறுபதுகளின் கடைசியிலும் எழுபதுகளின் ஆரம்பத்திலும் இப்படி ஒரு நெருக்கடி வலிந்து அன்றைய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டிருந்தது. ஒரு நபருக்கு அரைக்கொத்தரிசி மட்டும், பாணுக்காக செகண்ட் ஷோ படம் பார்த்துவிட்டு அப்படியே போய் பேக்கரி வாசலில் படுத்து விடிகாலையில் அரை அவியல் பாணை ஒருறாத்தல் வாங்கிக் கொண்டு போய் மீள அவித்து சாப்பிட்டு சீனியே இல்லாமல் தேநீர்கடைகளில் 'காட்ட' எனப்படும் தனிச்சாயத்தை பதினைந்து சதத்துக்கு வாங்கி குடித்து வாழைப்பழத்துடனும் தேங்காய்ச் சொட்டுடனும் பேரீச்சம்பழத்துடனும் தேநீர் அருந்தி, செத்தல் இல்லை, மல்லி இல்லை, வெங்காயம் இல்லை, பூடு இல்லை, இந்திய திரைப்படங்கள், புத்தகங்கள் துணிமணிகள் இல்லை. நல்ல வேளையாக அன்றெல்லாம் உந்துருளிகள் ஊருக்கு பத்து கார் நகரத்துக்கு ரெண்டு, மூன்று என இருந்ததால் எரிபொருள் பற்றாக்குறை வரவில்லை. வீடுகளில் எரிபொருள் விறகும் மரத்தூசும் உமியுமாக இருந்தது. பொலித்தீன் பாவனையில் இல்லை. வாழைக்கிழங்கை அவித்தும் உண்டார்கள் நிழல் மரவள்ளிக்கிழங்கை உண்டவர்கள் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைகளில் கிடந்தார்கள். ஆஸ்பத்திரியில் மருந்தெடுக்க இருபத்தைந்து சத முத்திரை வேண்டும் அதுகூட இல்லாமல் நாங்கள் என் தாயை வாட்டில் விட்டோம். அவர் இறந்தே போனார். பட்டினிச்சாவுகள் கணக்கில் எடுக்கப்படவில்லை. ஒரு வருட முடிவில் :




வடபகுதி விவசாயிகள் உழுந்து மிளகாய் வெங்காயம் நெல் சிறுதானிய உற்பத்தி என்பவற்றின் மூலம் பெரும் பணக்காரராயினர். மகாவலித்திட்டம் விரைந்து முடுக்கிவிடப்பட்டது. எந்த வீட்டிலும் தமக்கான மரக்கறிகள் பயிரிடப்பட்டது. பூத்தொட்டிகளில் கத்தரி காய்த்தது. ஆனால் அடுத்த தேர்தலில் மக்கள் 'வாரம் எட்டுறாத்தல் தானியம் வழங்குவோம்' என்ற வாக்குறுதிக்கு வாக்களித்தார்கள். விளைவு பொருளாதாரத்தை அந்நிய முதலாளிகளுக்கு அடகுவைத்த அரசாங்கங்கள்; இன்றுள்ள நிலவரத்துக்கு விதைபோட்டார்கள். இதற்குத் தீர்வுதான் என்ன, மருந்து என்ன என்பது ஏற்கெனவே தெரிந்திருக்கிறது. புதிய தலைமுறை அறிந்திருக்கவில்லை. இதைவிட்டிட்டு போர் காரணம் என்றால் அது 'லொள்ளாயி'சும்மா.

என்னிடம் ஒரு வீட்டுத்தோட்டம் இருக்கிறது அது எனக்கு மரக்கறிகள் பழங்கள் என்பவற்றை மட்டுமல்ல, எனக்கு தேக ஆரோக்கியத்தையும் வேலை செய்வதன் ஊடாக தருகிறது. கோழிகள் வைத்திருக்கிறேன் அவை எனக்கு பேச்சுத் துணை மட்டுமல்ல முட்டையும் தேவையான போது இறைச்சியும் தருகின்றன. இந்த வயதிலும் எனக்கு சுகரும் இல்லை கொலஸ்ரோலும் இல்லை.

பொருளாதார நெருக்கடி என்பது எமது பழக்க வழக்கங்களால் வந்தது. பிளாட் வீடுகளில் காஸ் மட்டும்தான் வேண்டும். அல்லது மண்ணெய் அடுப்புகளுக்கு மாறலாம். ஆனால் நாம் மாறவேண்டிய விடயங்கள் நிறைய உண்டு. சைக்கிள்களில் போவதைவிட உந்துருளி கவுரவம். ஒருவர் மட்டுமே பயணிக்க ஒரு கார் தேவைப்படுகிறது. இனி வீட்டிலும் ஏராளமான பாவனைப்பொருட்களை மின்சாரத்தை நம்பி வாங்கிக் குவித்திருக்கிறோம். சிந்தனையில் மாற்றம் வந்தாலொழிய மீள வழியே இல்லை முதலாளித்துவம் புற்று நோய் போல எம்மை பற்றிக் கொண்டிருக்கிறது. அதற்கு மருந்து சுய பொருளாதாரத் தன்னிறைவும் அநாவசிய தேவைகளை குறைப்பது அல்லது அகற்றுவது மட்டும்தான்.

■

# ஐயம் தெளி – 4






**எஸ்.கருணாகரன்**
கவிஞர், ஆய்வாளர்




நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் நெருக்கடிகளிலிருந்து மீள வேண்டும் என்ற எண்ணமும் தேசத்துக்காக உழைக்க வேண்டும் என்ற சிரத்தையும் ஒரு நிகழ் பண்பாடாக உருவாக்கப்பட வேண்டும். ஒரு நிமிடத்தைக் கூட பயனற்றதாகச் செலவழிக்கக் கூடாது, செலவழிக்க முடியாது என்ற வகையில் வாழ்க்கை முறையில் (Change in lifestyle) மாற்றம் வேண்டும்.

முதலில் இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான காரணங்கள் என்ன என்பதைப் புரிந்து கொண்டால்தான் அதற்குப் பொருத்தமான தீர்வைக் காணமுடியும். ராஜபக்ச குடும்பத்தினால் மட்டும்தான் இந்த நெருக்கடி உருவானது என்று ஒற்றைப் பரிமாணத்தில் புரிந்து கொள்ளாமல், அவர்களோடு இந்தப் பின்னடைவில் முன்னைய ஆட்சியாளர்கள், பிற அரசியற் தரப்பினர், அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழகங்கள், புத்திஜீவிகள், துறைசார் நிபுணர்கள், புலம்பெயர் மக்கள் என அனைத்துத் தரப்பினரின் தவறுகளும் உள்ளன.


இவற்றில் மாற்றமும் திருத்தமும் வேண்டும். திறந்த பொருளாதாரக் கொள்கையில் மாற்றம், வரி நீக்கம், வரிச்சலுகை, வரி ஏய்ப்பு போன்றவற்றைச் சீர்செய்தல், அதிகரித்த நிவாரணங்கள், இலவசம் ஆகியவற்றை மட்டிறுத்தல், அரசியல் ரீதியான பணி வழங்கல்கள், ஊழல் ஆகியவற்றை இல்லாதொழித்தல், எல்லையற்ற கடன்படுதலைக் குறைத்தல், முதலீடுகளை ஊக்கப்படுத்துதல், அதற்குப் பொருத்தமான விசேட ஏற்பாடுகளை உருவாக்குதல் என அதிரடியான நடவடிக்கைகள் வேண்டும். அத்துடன் நடைமுறையில் உள்ள மேலும் புதிதாக உருவாக்கப்படும் திட்டங்களை மதிப்பாய்வு செய்யும் பொறிமுறை அவசியம். ஒவ்வொரு திட்டத்தையும் முன்மொழிவோர் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும். தொழில் முயற்சிகள், கைத்தொழிலாக்கம் போன்றவற்றில் அரசும் மக்களும் ஈடுபடுவது அவசியம்.

கூடவே, நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் நெருக்கடிகளிலிருந்து மீள வேண்டும் என்ற எண்ணமும் தேசத்துக்காக உழைக்க வேண்டும் என்ற சிரத்தையும் ஒரு நிகழ் பண்பாடாக உருவாக்கப்பட வேண்டும். ஒரு நிமிடத்தைக் கூட பயனற்றதாகச் செலவழிக்கக் கூடாது, செலவழிக்க முடியாது என்ற வகையில் வாழ்க்கை முறையில் (Change in lifestyle) மாற்றம் வேண்டும். இப்பொழுது அரசு வேறு. மக்கள் வேறு. அதாவது நாம் வேறு என்ற வகையிலான சிந்தனை முறையே பலரிடத்திலும் உள்ளது. இதனால்தான் பொறுப்பற்ற விதமாகப் பலரும் நடக்கின்றனர்.

அப்படியல்ல. நாம் செய்கின்ற ஒவ்வொரு தவறும், ஒவ்வொரு பொறுப்பின்மைகளும் தேசத்தையே பாதிக்கிறது. தேசத்தின் பாதிப்பு மறுவளமாக நம்மையே தாக்குகின்றது என்ற புரிதலை – என்ற உண்மையை — உணர்த்த வேண்டும்.

இவ்வாறு செய்யப்படும்போது கிட்டத்தட்ட அடிப்படை மாற்றம் ஒன்று நிகழும். அது தற்போது கோரப்படும் கட்டமைப்பு மாற்றுத்துக்குக் (System change) கிட்டவாகச் செல்லக் கூடியதாக இருக்கும். இதுவே நெருக்கடிகளிலிருந்து விடுதலை பெறுவதற்கான வழியை ஏற்படுத்தும். ■

# துளங்கள
# உடை





**காரையன் கதன்**

களைத்துப்போன இயந்திர
சில்லையும் நனைத்துப் போகிறது
மழை
புழுதி கழுவிய காலம்
போய் மலக்குழி நிறைந்து
வழிய இப்போதும் அது
பெய்துகொண்டுதான் இருக்கிறது.

நிறமூர்த்த வலையில் சிக்கிய
மீன்களை
பிடித்து தாத்தா எம் மீது எறிந்து
கொண்டு
விரட்டுகிறார்.
மாடிப்படியில் ஓடித்தான்
இறங்குகிறோம்.

தாத்தாவிடம் தப்பித்த
கொண்டாட்டம்
மட்டுமே
மூளையிலும் முன்னானிலும்
பச்சை குத்தி கிடக்க
இலவச சோற்று பொதியை
இரையாக்கி நாட்களை
நகர்த்துகிறோம்.

தாத்தா இன்னும் இறங்கி வரவில்லை
மாடியில் இருந்து கொண்டே
சிக்கிய மீன்களை
எறிந்துகொண்டுதான் எப்போதும்
இருக்கிறார்.
தாத்தா பாவம் என்று நாமும் சொல்லி
கொண்டுதான் இருக்கின்றோம்.

இனியாவது
எம் நிறமூர்த்த வலைகள்
எங்கு
எப்போது
எவ்விடத்தில்
யாரால்
யாருக்கு
கட்டிப்போடப்பட்டது என்று
என்னுடன் நீங்களும் கேளுங்கள்
எம்மிடம்.

# கோமகன் என்னும் பேராளுமை





**சஞ்சயன்**
**நோர்வே**

காலாகாலமாய், நான் நலிவுற்று மன அழுத்தத்தில் மூழ்கி மூச்செடுக்க தடுமாறும் பொழுதுகளில்,யாரோ ஒரு மனிதனை, காலம் என்னிடம் அனுப்பி என்னை மூர்ச்சையடையாதிருக்க வைக்கிறது. அப்படியானவர்களில் முக்கியமானவர் கோமகன். பெயருக்கேற்ற குணம் வாய்த்தவர் அவர்.

எவ்வாறு அவருடன் அறிமுகமாகினேன் என்பதோ அல்லது எப்போது பழகத்தொடங்கினோம் என்பதும் நினைவில் இல்லை. ஆனால் பல ஆண்டுகளுக்கு முன் என்பது மட்டும் நினைவில் இருக்கிறது.

இத்தனை ஆண்டுகளாகிவிட்ட பின்பும் நாம் ஒருபோதும் நேரடியாக சந்தித்ததில்லை. ஆனாலும் நெருங்கிய பிணைப்பொன்று எம்மை இணைத்துவிட்டிருந்தது. தேவைக்கு மட்டும் உரையாடும் நட்பு அல்ல அது. ஒருவரது வலியை, களைப்பை, மன அசதியை, அமைதியின்மையை மற்றவர் எவ்வாறோ உணர்ந்து, தொடர்புகொண்டு பேசும் அதிசயமான உறவு அது.



தொலைபேசி உரையாடல்களும் மணிக்கணக்கில் அமைவதில்லை. மிகவும் குறைந்த நேரத்தில் பேச வேண்டியதை மட்டும் பேசும் உரையாடல்களே எமக்கிடையில் இருந்தன.

2018 இல் மிகுந்த மன அழுத்தம் நிரம்பிய காலத்தினைக் கடந்துகொண்டிருந்தேன். அக்காலத்தில் என்னுடன் மனக்கசப்பு ஏற்படாதவர்களே இல்லை எனலாம். அந்நாட்களில், நோர்வே வாழ் எனது இலக்கிய வட்ட நண்பர்கள் அனைவரினதும் மனங்களைப் புண்படுத்தியிருந்தேன்.சம காலத்தில் சிரியாவின் எல்லையில் தொழில் புரிய வாய்ப்புக்கிடைத்தது. யுத்த பூமி அது. பல நண்பர்களது, உறவினர்களது எச்சரிக்கையையும் மீறி, நோர்வேயில் வாழப்பிடிக்காததனால் ஒரு வாரத்தினுள் சிரிய எல்லைக்குள் அமைந்திருக்கும் ஒரு நிறுவனத்தில் தொழில் புரிய சம்மதித்து அங்கு சென்றுமிருந்தேன். அக்காலத்தில் ஒரு நாள் ”முருகா, உன்னுடன் சீரியசாகப் பேசவேண்டும்” என்று ஒரு குறுஞ்செய்தியை கோமகன் அனுப்பியிருந்தார்.என்னை கடவுளின் பெயர்கொண்டு அழைக்கும் ஒரே ஒரு பிரகிருதி அவர் மட்டும்தான்.அதற்கு முன்னும் நாம் நண்பர்கள்தான். எனது குழந்தைகள்பற்றிய பத்திகளை தொகுப்பதுபற்றி நாம் பேசிக்கொண்டிருந்தோம்.

ஒரு நாள் மாலை அவரைத் தொடர்புகொண்டேன். “என்ன பிரச்சனை ?” என்றார். அத்தனையையும் கொட்டித் தீர்த்தேன். குரல் தழுதழுத்தது. அழுதேன்.

”முருகா, தவறுகளை உணர்பவன் உயிர்ப்புடன் இருக்கிறான். தவறுகளை நியாயப்படுத்துபவன் பரிதாபத்திற்குரியவன்” நீ முதலாமவன். மற்றையவர்களின் நன்மை, தீமைகளை தீர்மானிக்க நீ யார் ? எனவே, ”காலம் தந்திருக்கும் வழியில் பயணி” என்று நலிந்து ஒடிந்துவிடும் நிலையில் இருந்த என்னை உயிர்ப்பித்தவர், கோமகன்.

‘நடு’ இதழுக்கு எழுது என்பார். “வலிந்து என்னை எழுதவைப்பவன் நான் இல்லை” என்பேன். ”உனக்குத் தானே ஒஸ்லோ முருகன் இருக்கிறான். அவனிடம் கதைத்துப்பார்” என்பார்.கொரோணா உலகத்தையே முடக்கிவிட்டிருந்த காலத்தில், வாசகர்கள் தாம் வாசித்த ஒரு நூலைப்பற்றி பேசும் காணொளிகளைத் தயாரிக்கலாம் என்று எண்ணுகிறேன் என்றார். நான் தொழில்நுட்பத்தில் உதவுகிறேன், வேலையை ஆரம்பியுங்கள் என்றேன். முப்பத்தியிரண்டு காணொளிகளைத தயாரித்து வெளியிட்டிருந்தோம்.எழுதும் ஆர்வமுள்ள அனைவரையும் ஊக்குவித்து அரவணைக்கும் அவரது மனம் பல இலக்கியர்களுக்கு வாய்ப்பதில்லை.முதன் முதலாக எழுதவும், வரையவும் பல கலைஞர்களுக்கு ‘நடு’வில் இடமளித்திருக்கிறார். அவரது இந்த ஊக்குவிக்கும் மனம் இல்லை எனில் பலர் இன்றும் இலைமறைகாயாகவே இருந்திருப்பார்கள். அவரளவுக்கு தமிழ் இஸ்லாமிய உறவுக்கு

இலக்கியரீதியாக பங்களித்தவர்கள் மிகக் குறைவாகவே இருப்பார்கள்.

'நடு'வில் மட்டும் அவர் ஆகக்குறைந்தது முன்னூற்றி எழுபத்தைந்து எழுத்தாளர்களுக்கு, கலைஞர்களுக்கு இடமளித்திருக்கிறார் என்பது பெருஞ் சாதனையே. 'நடு' வை காலாண்டு இதழாக வெளியிடப்போகிறேன் என்றவரை, இழுத்து நிறுத்தி, அதற்குரிய உழைப்பு மிகவும் அதீதமானது, உங்களை சோர்வடையவைக்கும், எனவே வருடத்திற்கு ஒன்று வெளியிடுங்கள் என்றேன். "சரி, முருகா... உனக்கும் வேண்டாம், எனக்கும் வேண்டாம், வருடத்திற்கு இரண்டு வெளியிடுகிறேன்" என்றுவிட்டு "முதலாவது இதழாக 'நடு'வின் ஐம்பதாவது இதழை வெளியிடுகிறேன், நீயும் எழுதவேண்டும்" என்றார்.

அந்நாட்களில் ஒரு பத்தி எழுதி ஒரு இணைய சஞ்சிகைக்கு அனுப்பியிருந்தேன். "நீங்கள் ஒரு சம்பவத்தை எழுதியிருக்கிறீர்கள், என்ன சொல்ல வருகிறீர்கள் என்று புரியவில்லை" என்பதால் வெளியிட முடியவில்லை என்றிருந்தார்கள். ஒவ்வொரு தொகுப்பாளருக்கும் தனிப்பட்ட கருத்து இருக்கும் என்பதால் நானும் அவர்களது கருத்தை ஏற்றுக்கொண்டேன். "முருகா ஐம்பதாவது 'நடு' இதழுக்கு நீ இன்னும் ஆக்கத்தினைத் தரவில்லை" என்ற தொலைபேசிக்கு பின், மேலே குறிப்பிட்ட ஆக்கத்தினை அவருக்கு அனுப்பியிருந்தேன். அத்துடன் அதற்கு ஏற்கனவே கிடைத்திருந்த குறிப்பையும் குறிப்பிட்டேன். "முதலில் அனுப்பு" என்றார். "மறுநாள், இலக்கியம் என்பதற்கு ஒரு வரையறை இல்லை. என்னைப் பொறுத்தவரை வாழ்வை அப்படியே எழுதுதல் இலக்கியமாகிறது, உனது பத்தியை எடுத்துக்கொள்கிறேன், ஆனால் நீ உனது தந்தைசார்ந்த ஒரு சம்பவத்தை இப்படி எழுதுவதுபற்றி யோசித்துவிட்டு பதில் சொல் என்றார்.

வாழ்வை அப்படியே எழுதுவதை இலக்கியம் என்றீர்களே என்று அவரது வசனத்தையே அவருக்குத் திருப்பினேன். " சரி, முருகா" என்றார்.

" ஐம்பதாவது இதழின் வெளியீட்டுக்கு பிரான்சுக்கு நீ வருகிறாய்" என்றிருந்தார்

சில நாட்களுக்கு முன் சிராஜும், சோபாசக்தியும் நடுவின் ஐம்பதாவது இதழை வெளியிட்டிருந்தார்கள். 'நடு' வின் ஐம்பதாவது இதழை அனைவரும் கொண்டாடுகிறார்கள். கோமகன் மட்டும் அங்கில்லை.

தனது இலக்கிய ஊழியத்தினால் தனக்கென ஒரு தனியிடத்தினைக் கோமகன் ஈழத்து இலக்கியப்பரப்பிலும், புலம்பெயர் தமிழிலக்கியத்திலும் பிடித்திருக்கிறார்.

அவர் சகபாடிகளை ஒருவித அடைமொழியில் அல்லது பட்டப்பெயரில்தான் அழைப்பார். "பேர்லின் சிங்கம், கொரில்லா, பரட்டை, பேபி" என்பவை நினைவில் நிற்கின்றன. அவரதுஅண்ணண் வடகோவை வரதராஜனை "விதானை" என்றே என்னுடன் உரையாடும்போதுஅழைப்பார். விதானையாரின் பத்திகளில் வரும் "பர்வதம் மாமி, பாங்க் மனேஜர்" ஆகியபாத்திரங்களை நான் கலாய்க்கும்போது "முருகா, விதானை பொல்லுத் தந்திருக்கிறார், நல்லா மொத்து"என்பார்.

எனது "தேவதைகளின் பாதணிகள்" என்னும் பத்திகளின் தொகுப்பை அண்மையில்தான் பதிப்பித்தார். அண்மையில் ஊருக்குச் சென்றிருந்தபோது, என்னுடன் தொடர்புகொண்டு, "நான் நாளை பாரீசுக்குப் புறப்படுகிறேன், நீ ஏறாவூரான். உனது ஊரில்தான் அதை முதலில் வெளியிடவேண்டும். அதற்கான எல்லா ஏற்பாடுகளையும் எனது ஏறாவூர் நண்பர்கள் செய்வார்கள். நீ ஊருக்குப் போகும் திகதியைச் சொல். உன்னை மாப்பிள்ளையாக்குகிறேன் என்றார்".மறுநாள் காலம் அவரை அழைத்துவிட்டிருந்தது.

■

# கனவு என்பது முற்றுகிறது

பல வருடங்களுக்கு முன்

கண்ட கனவொன்றைத் தேடிப் புறப்படுகிறேன்.

வழி நெடுகிலும்

பல நூறு மரங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

குடிசைகளுக்குப் பதிலாக

மாடி.. மாடியாய் கொங்கிறீட் மனைகள் எழுந்து நின்றன.

தெரு ஓரங்களில் நாட்டு மருந்துச் செடிகளின் வாசமே இல்லை.

தெரு விளையாட்டுக்கள் அழிந்துவிட்டன.

தெருவைக் கடந்து செல்கிறேன்

அதோ... அதோ...கண்ட கனவு

என் முன்னே வந்து

ஒரு சந்தியில் விலகிச் செல்கிறது.

சேலை அணிந்து கடந்து செல்கிறது

கனவின் வாசல் முழுக்க காய்க்காத

சிறு மரங்களாய் இருந்தவைகள்

காய்க்கத் தொடங்கி இருந்தன.

கனவு ஒரு தசாப்தத்திற்குப் பிறகு முற்றுப்பெறுகிறது.






# அலையின் முதுகில் குந்தியவர்


**டீன் கபூர்**

**(இலங்கை)**


கடலை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார்
தொடுவானம் கற்பனையாகியது
கடல் அடிவாரத்தில் மீன்களின் ஆட்சியாளர்கள்
வருகை
மனம் சுழியோடத் தொடங்கியது
அவரது மனத்திற்குப் பின்னால்
கடல் வாழ் இதர உயிரினங்கள்
ஆழம் வரை நீந்தத் தொடங்கின
நீரைக் கிழித்து மேலே உயர்ந்தவர்
அவரின் கற்பனையில் மிதந்த
தொடுவானம் நான்கு புறமும் தெரிந்தது
சிறு அலையின் முதுகில் குந்தியவரை
ஒரு பெரும் அலை தூக்கி வீசியது கரையில்
அவர் நனைந்திருக்கவில்லை.



# தீர்க்கதரிசியம்



## டனிஸ்கரன்

உஷ்ணமடங்காத பின்னேரப் பொழுதொன்றில் கால்களைப் புதைத்துக்கொண்டு கடலின் மறு தொங்கலை பார்த்தபடி அமர்ந்திருக்கிறான். அலைகளின் வருடல் இதமாக இல்லை. புதைந்த கால்கள் மேலும் புதைந்து கொண்டே இருந்தன. ‘அரித்துச் செல்கின்ற மண்ணை கடல் எங்கோ குவிக்காமல் விடுவதில்லை’ என்று எழுதிய நாட்குறிப்புகள் அவன் நினைவுகளில் வந்து போக படகின் நிழல் தேடி எழுந்தான். கரைக்கு வந்து நீண்ட நாட்களாக திரும்பாத படகுகளில் சிப்பிகள் பூத்துக் காய்ந்திருந்தன.



பத்து பதினொரு ஆண்டுகளுக்கு முன்னால் நான்கு தென்னைகளுக்கு நடுவே சீமேந்துக் கதிரைகள் போட்டிருந்த நிலத்துண்டில்தான் இப்போது அலைகள் வீரியம் கொள்ளத் துவங்குகின்றன. அன்றிருந்த கதிரைகளும் அந்த வளைந்த தென்னைகளும் இப்போது இல்லை. அவற்றின் வேர்களில் ஏறி நின்று அலை எழும்போது புகைப்படம் எடுக்கும் பலரையும் பரிதாபத்துடன் பார்ப்பது போல இருந்த தென்னையடியும் பறட்டைத்தலைபோலிருந்த அதன் வேர்களும் இப்போது இல்லை. அவ்வாறு புகைப்படம் எடுத்துக்கொண்ட இளைஞன் ஒருவனை சந்திக்கக் கிடைத்தபோது 2003ல் ஓர் அதிகாலைப்பொழுது கைகள் இரண்டும் உயர்த்தியபடி முகம் மண்ணில் முட்ட காதுகள் இரண்டிலும் வடிந்திருந்த இரத்தம் மணலில் கலந்து ஒரு இருண்ட நிறத்தில் உடைய பருந்துகளும் காகங்களும் வானத்தில் வட்டமிடக் காலையில் கரவலை இழுக்கவும் நடைபயிலவும் இன்னுமாக கூடி கதை அளக்கவும் என வந்த பலநூறு வகையானவர்களில் யாரோ ஒருவர் வாட்டசாட்டமான பருத்த அந்த உடம்பைத் திருப்பியபோது தெரிந்த அதே முகத்தைப்போல இருந்தது ஒன்றும் ஆச்சர்யம் இல்லை.

இப்போது மண்டைக்குள்ளே ஒடிக்கொண்டிருக்கின்ற ஒன்று என்னவென்றால் இரண்டு நாட்களாக சாப்பிடுகின்ற எந்த ஒரு சாப்பாடும் சுவை தரவில்லை. மேலும் அவற்றின் வாசமோ நாற்றமோ எதுவும் மூக்கில் நுழைவதுமில்லை என்பதுதான். மேலும் தனக்கு பெரும் பிரச்சினையாக மாறி இப்போது இருந்துகொண்டிருப்பதும் மனைவியுடனான நேற்றைய சண்டைக்கு காரணமாக இருந்ததும் அதுதான். அவளின் சமையலில் குறையிருப்பதாக சண்டை போட்டு கூச்சலிட்டவனுக்கு ஹோட்டல்களில் பரிமாறப்பட்ட உணவும் சுவையில்லாமல் எந்தவொரு மணமும் இல்லாமல் மேலும் மேலும் எரிச்சலூட்டின. இது அவனுக்கு மட்டுமல்லாது ‘வனபதீகாங்கோ ‘நாட்டின் மக்கள் பலருக்குமான ஏன் உலகின் பல நாடுகளுக்குமான பிரச்சனையாக இருப்பதை தெரிந்துகொள்ள அவனுக்கு சில நாட்கள் தேவைப்படலாம்.

நாடு குறித்த போராட்டத்தில் வெடித்துச் சிதறிய வனபதீகாங்கோ நாட்டின் மக்களும் சொற்களும் பதட்டமடையத் தொடங்கி புதிதாக ஊடுருவி ஒவ்வொருவராக கொன்றுகொண்டிருக்கும் தொற்றைக் குறித்து பேசவும் அதற்கெதிராக போராடவும் தொடங்கியிருந்தனர். இந்த சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்தினால் ஒழிய ஒருபோதும் எமது ‘ஹப்ஜராவ்’ முடியின் இலச்சியத்தையும் அத்தோடு ‘நாசீம்கா’ நாட்டு மன்னனுக்கும் அவன் சபைக்கும் கொடுத்த வாக்கையும் நிறைவேற்ற முடியாமல் போய்விடும் என்ற பதட்டத்தில் வனபதீகாங்கோ தேச ஹப்ஜராவ் முடியின் வாரிசுகள் தங்கள் மாளிகை மண்டபத்தின் ஒரு தொங்கலில் இருந்து மறு தொங்கல் வரைக்கும் என மாறி மாறி குறுக்கும் நெடுக்குமென நடந்துகொண்டும் கைபேசிகளை உரசிக்கொண்டு அன்றைய செய்திகளை பார்த்துக்கொண்டுமாக தூக்கம் இல்லாமல் புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

அவர்களின் எல்லா அசைவுகளையும் எந்த சிறு அசைவுமில்லாமல் கவனித்துக் கொண்டிருந்தது அந்த வெள்ளை நிறத்திலான இரண்டடுக்கு மாளிகை. பல ராஜாக்களையும் மந்திரிகளையும் பார்த்து சலித்த அந்த மாளிகையின் வாசல் கதவுகளில் இருந்து தொடங்கும் ஒவ்வொரு புகைப்படமும் அந்த மாளிகைக்குள் நுழைவதற்காக விரிக்கப்பட்ட நீண்ட சிவப்பு நிறக் கம்பளத்தில் கால் வைக்கின்ற எந்த ஒரு நாட்டின் தூதுவராக அல்லது உயர் அதிகாரியாக இருந்தாலும் சரி ஏன் சாதாரண ஒரு குடிமகனாக இருந்தாலும் அவர்களின் கவனங்களை தங்கள் பக்கமாகத் திருப்பிக்கொள்ளும் விதத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. அதில் ஒன்று ‘கவிறதுத்பௌன்கள்’ சிலர்

சென்றுகொண்டிருந்த பெரிய பேருந்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு குறித்தாக இருந்தது. இன்னுமொரு புகைப்படம் வெள்ளை நிறத்திலான நீண்ட ஆடையுடைய சில பெண் குழந்தைகளின் உடைகளில் இரத்தம் படிந்தபடி இருக்க அதில் சிலர் அங்கொன்றும் இங்கொன்றும் வீசப்படுவதைப்போல காட்சியளித்தது. இன்னொரு புகைப்படம் சந்தையொன்றில் சிதறிக் கிடந்த கைகளையும் கால்களையும் இன்னும் சில மனித பாகங்களையும் கொண்டதாக அமைந்திருந்தது. அதில் சிலர் தங்கள் தலைகளில் அடித்துக்கொள்வதைப்போலவும் மண்ணை வாரி இறைப்பதைப்போலவும் குந்திக்கொண்டும் நின்றுகொண்டும் இருந்தார்கள். இறுதியாக இடம்பிடித்த புகைப்படத்தில் உடைந்து சில்லங்களாக சிதறிய கட்டிடம் ஒன்றினுள் ஐந்துபேர் இருக்கத்தக்கது போன்ற வகையில் மரத்தாலான சில வாங்குகளில் அவற்றுக்கு மேலும் கீழுமாக சிதறிய உடல்களும் சில கை உயர்த்திய சிலைகளும் இருந்தன.

இப்படி தொங்கவிடப்பட்ட புகைப்படங்களுக்குப் பின்னால் சில வரையப்படாத ஓவியங்களும் சில இரத்தக் கறை படிந்த புகைப்படங்களும் மறைந்திருந்தன. வெற்றுக் கண்களுக்கு புலப்படாத அந்த புகைப்படங்களிலும் வெள்ளை நிறத்திலான நீண்ட ஆடையுடைய சில பெண் குழந்தைகளின் கிழிந்த உடைகளில் இரத்தம் படிந்தபடி இருக்க அதில் சில அங்கொன்றும் இங்கொன்றும் வீசப்படுவதைப்போல இருந்தன. ஆனால் முன்னைய புகைப்படத்துக்கும் இதற்கும் இடையில் நிறைய வித்தியாசங்கள் இருந்தன. அதில் ஒன்று முகம் என்றால் ஏனையவை நிலம்,வயது, நிறம், ஆடை மற்றும் காலம் போன்றனவாக இருந்தன.

அலங்காரம் ஒன்றுமேயற்ற தங்கள் ஆடைகளுக்காகவும், சொகுசுப் பயணங்களுக்காகவும் ஏனைய ஆடம்பரங்களுக்காகவும் கோடிக்கணக்கில் செலவிடக்கூடிய தங்கள் ஆட்சியில் ‘கயத்படா கஸ்தமன்’ இந்த நூற்றாண்டின் மன்னனாக இருந்தாலும், ‘கயாந்கிகோ கஸ்தமன்’ என்பவர்தான் வனபதீகாங்கோவின் முடி சூடா மன்னனாக எப்போதுமே இருந்துகொண்டிருந்தார். இடது கையின் பெருவிரலுக்கும் அதற்கு அடுத்த விரலுக்கும் நடுவே ஒரு சிறு வெள்ளிக்கோலை மறைத்து வைத்து உருட்டியபடி தன் சந்திப்புக்களையும் வெளிநாட்டு விஜயங்களையும் வெற்றிகொண்டு வந்த கயாந்கிகோ கஸ்தமன் என்பவன்தான் வனபதீகாங்கோ நாட்டில் வேரூன்றி இருந்த இன்னும் விரிவாக சொல்வதென்றால் நாட்டின் அரசியலை இயக்குகின்ற மாபெரும் சக்தியாக பெருகி இருந்த கவிறதுத்பௌன் என்கின்ற ஒரு பெரும் குழுவின் சாஸ்திர சம்பிரதாயங்களுக்கும் அவர்களின் மந்திரஜாலங்களுக்கும் கட்டுப்பட்டவனாகவும் அதன் மீது அதீத நம்பிக்கை கொண்டவனாகவும் காணப்பட்டான். அதன் சாட்சியமாக கறுப்பை அப்பிய நிறத்துடைய பல அடிகள் உயரத்துக்கு குதிக்கவும் பறக்கவும் முடியுமான பூதங்களைக் கொண்டு ஆயிரம் பெண்களின் மார்பைக் கொய்து அந்த இரத்தத்தினால் அபிஷேகம் செய்து தன் ஆயுளை நீட்டிக்கொண்டான் என்ற ஒரு எழுதப்படாத கதையும் உண்டு.

நாட்டில் நோயின் தீவிரம் உச்சமடைந்து அங்கொன்றும் இங்கொன்றுமாக இறந்து கொண்டிருந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கத் தொடங்கி நாடு முழுவதும் முடங்கத் தொடங்கின. தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் விவசாயம் என இன்னும் எல்லாமே கேள்விக்குறியில் இருந்தன. சுகாதாரத்துறையைச் சேர்ந்த பலரும் தூக்கத்தை மறந்திருந்தனர். தொற்றுக்குள்ளானவர்களில் இருந்து மற்றவர்கள் பாதிக்கப்படாதிருக்க பாதுகாப்புப் பிரிவு நாடு முழுவதும் தீவிரமாக

இயங்கத்தொடங்கியது. வானை முட்டும் செலவுகள் ஒருபுறம் என்றால், மறுபுறம் சரிந்துகொண்டே செல்கின்ற பொருளாதாரம். இறந்த உடல்களை விட சரிந்த பொருளாதாரம் ஹப்ஜராவ் முடியின் மன்னரையும் சகாக்களையும் இன்னும் இன்னுமாக நீளும் அதன் வாரிசுகளையும் ஆட்டங்காண வைத்தது. விரைவாக மந்திரி சபையை ஒன்றுகூட்டி நிலமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது பற்றி கலந்தாலோசிக்க வேண்டிய தேவை தீவிரமானது.

அதற்கு முதல் நாட்டை மூடி வீட்டைவிட்டு எவரும் வெளியேற முடியாதபடி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளுக்குள் சிறைவைக்கப்பட்டார்கள். பாதிக்கப் பட்டவர்கள் தனிமைப்படுத்தப்பட்டார்கள். தனிமைப்படுத்தப்பட்டவர்களை எவருமே நெருங்கமுடியாது. அவர்களுக்கான உணவுகளும், மருந்துகளும் தட்டுகளில் வைத்து தள்ளிவிடப்பட்டன. மீண்டுவந்தவர்களை ஏனையவர்கள் நெருங்கவே அஞ்சினார்கள். நாட்டில் பசி, பட்டினி கோரத்தாண்டவமாடத் தொடங்கியது. சமைத்த உணவுகளை பரிமாறியவர்களையும் ஒரு கட்டத்தில் தடுத்து நிறுத்தியது அதிகாரம்.

சிறுமி ஒருத்தி அழுகின்ற சத்தம் கேட்கிறது. வாசிப்பதை நிறுத்திவிட்டு என்னுடன் இந்த மூடப்பட்ட தெருவுக்குள் சற்று வாருங்கள். காதுகளிலும் கழுத்திலும் ஏதுமே இல்லாத ஒரு தாய் கொஞ்சம் வீட்டு சாமான்களோடு ஒரு எல்.சீ.டி ரிவியை வைத்துக்கொண்டிருக்க தெருவால் வந்த ஒருவன் அறாவிலைக்கு கேட்க அவள் கெஞ்சுகின்ற காட்சியை உங்காளால் காணமுடிகிறதா ?

‘ஏனம்மா இந்த ரிவிய விக்கப்போறீங்க? ஆசையாசையாய் அப்பா கொண்டு வந்ததம்மா’

‘ரீவிய வச்சி என்னடி செய்ற திங்கிற சோத்துக்கே வழி இல்லாம கிடக்கு அக்காட அண்ணாட சூம் கிளாசுக்கு என்னடி செய்ற என்டே தெரியாம இருக்கு’

‘பிளீஸ் அம்மா இந்த ரீவிய மட்டும் குடுக்காதீங்கம்மா ம்..ம்... ம்.... ரிவி....’

இந்தக் குரல்களெல்லாம் உங்கள் காதுகளுக்கும் கேட்கின்றதா ? கேட்டாலும் கேட்காமல் போனாலும் அவற்றை இந்தத் தெருவோடு நிறுத்திக்கொள்வோம். ஒவ்வொரு தெருவிலும் இதுபோல வெவ்வேறு அழுகுரல். ஒவ்வொன்றும் மிக மிக நீளமானவை. எல்லாவற்றையும் உங்களோடு கதைத்துக்கொண்டிருந்தால் இந்தக்கதையை சொல்லமுடியாமல் போய்விடும்.

கதைக்குள் வாருங்கள். அரச சபை ஒரு முறை கூடுவதென்றால் ஹப்ஜராவ் பலமுறை அதன் கவிறதுத்பௌன் தலைவர்களோடு ஆலோசனைகளை நிகழ்த்தும் வழக்கம் நீண்டகாலமாகவே இருந்து வந்தது. அன்றும் அப்படித்தான் அச்சந்திப்பு நிகழ்ந்தது. அச்சந்திப்பில்தான் கொடிய நோய்க்கான காரணம் குறித்து தாயங்கள் உருட்டப்பட்டு விரித்து வைக்கப்பட்ட வெற்றிலைகளில் மை தடவி குறிகேட்கப்பட்டதும் மதிப்பிற்குரிய ‘ரத்தினாதி கவிறதுத்பௌன்’ அவர்கள் முதலாம் குறியைச் சொல்ல ஆரம்பித்தார்.

கிரேக்க நாடகங்களிலும் அதன் வரலாறுகளிலும் பரீட்சயமும் சோஃபக்கிளீஸ் மீது அதீத ஈர்ப்பும் மிகுந்த மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌன் அவர்கள் மிக ஆறுதலாக சொல்லுகின்ற வார்த்தைகளை குறிப்பெடுக்க வந்த மதிப்பிற்குரிய ஒரு இளம் கவிறதுத்பௌன் பின்வருமாறு எழுதிக்கொண்டிருந்தார்.

‘நாட்டில் மன்னிக்க முடியாத அளவு பாரிய குற்றம் ஒன்றை நிகழ்த்திய யாரோ ஒருவன் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கின்றான். அவன் வனபதீகாங்கோ நாட்டின் சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி குடிமக்களை ஆளும் அரசனாக இருந்தாலும் சரி அவனைத் தேடிப் பலி இட வேண்டும் அல்லது நாடுகடத்த வேண்டும்’

சொல்லிக் கொண்டிருந்த குறிப்பை எழுதி முடிப்பதற்குள்ளாக இடைமறித்த அன்றைய ஆட்சியில் இருந்த மன்னன் ‘குறுக்கிடுவதற்கு மன்னித்துக்கொள்ளுங்கள், குற்றம் செய்தவர் யார்? என்ன குற்றம்? தெளிவாக சொல்லுங்கள் சுவாமி’ என்றதும் அடுத்த இரண்டாம் குறிப்புக்கான பூஜை வேள்விகள் ஆரம்பமாகின. சம்மாளத்தில் இருந்த மதிப்பிற்குரிய கவிறதுத்பௌன்மார்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் தொடுத்தபடி நீளமான கறுப்பு நிறத்தால் பின்னப்பட்ட நூல் ஒன்றை கூப்பிய கரங்களின் விரல் இடைவெளிக்குள் பிடித்துக்கொண்டு முணுமுணுக்கத் தொடங்கினார்கள். சாமரங்கள் வீசப்பட்டுக்கொண்டிருக்க மயான அமைதியில் ஹப்ஜராவ் வாரிசுகள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், எல்லோரது கவனமும் மன்னனின் மீதுதான் குவிந்திருந்தன.

‘அம்மையைக் கடத்தி கொலைசெய்து பின் ஆட்சி அதிகாரத்தை பிடித்த இந்தச் சபையில் இருக்கும் உங்களில் ஒருவர்தான் குற்றவாளி’

பூஜை மண்டபம் மெல்ல தன் அமைதியை இழக்கத்தொடங்கியது. ‘நாங்கள் எந்த அண்ணனையும் கொலை செய்யவில்லை உங்கள் குறி மீதான எங்கள் நம்பிக்கையை அவமதிக்கின்றீர்கள்’ என்று முன் எப்போதும் இல்லாதபடி எல்லோரும் தங்கள் குரல்களை உயர்த்தவும் எழுந்து நடக்கவும் செய்தார்கள். ஆனால், கயாந்கிகோ கஸ்தமன் மட்டும் அமைதியாக இருந்தபடி ஒன்றைக் கேட்டார் ‘எங்கள் சகோதரர்களை தயவு செய்து மன்னித்துவிடுங்கள். அவர்களுக்காக உங்கள் முன் நான் மண்டியிடுகிறேன். ஆனால், நீங்கள் சொல்வதைப்போல் அப்படி நாங்கள் எங்கள் ஆட்சிக்காக எந்த அண்ணனையும் கொலைசெய்யவே இல்லை என்பது உறுதி சுவாமி. அப்படிச் செய்திருந்தாலும் ஏன் எங்கள் நாட்டில் மட்டுமில்லாமல் இன்னும் பல நாடுகளிலும் இந்த கொடிய நோயின் தீவிரம் தாண்டவமாடிக்கொண்டிருக்க வேண்டும். கூறுங்கள்’

மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌன் அமைதியாகச் சொன்னார் ‘அண்ணனை அல்ல அம்மையை’ என்று. மீண்டும் குழப்பம் ஆரம்பமாகி பேரமைதி குலைந்து ஒவ்வொருவரின் குரலும் ஒருவரை ஒருவர் முந்திக்கொள்வதையும் பதட்டமடைவதனையும் காட்டிக்கொடுத்தது. மீண்டும் மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌன் அமைதியாகச் சொன்னார் ‘இப்படித்தான் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இதே போன்றதொரு நோய் தீபிசின் மக்களை கொன்று குவித்துக்கொண்டிருந்தது கண்டு தாங்காத அம்மக்கள் தங்கள் கடவுளிடம் மண்டாடி காரணமும் பரிகாரமும் தேடினார்கள். முடிவில் ‘தன் தந்தையைக் கொன்று தாயை மணந்து ஆட்சியில் அமர்ந்திருப்பதுதான் குற்றம். ஈடிப்பஸ் மன்னன்தான் குற்றவாளி’ தீர்க்கதரிசி ‘தெய்ரீசியஸ்’ கூறியதும் ‘ஈடிப்பஸ்’ மன்னனும் அதை ஆரம்பத்தில் மறுத்தார். சாட்சியங்களோடு நிரூபிக்கும் வரை அவர் அதனை ஏற்றுக்கொள்ளவேயில்லை.’

‘ஆனால், இந்த குற்றம் ஒருவரால் நிகழ்த்தப்படவும் இல்லை, ஒருவருக்கு எதிராக நிகழ்த்தப்பட்டதும் இல்லை. கண்டங்கள் இணைந்து காடுகள் மறித்து தர்மங்கள் நீக்கி நிர்வாணமாக்கி ஒரு தேசத்தையே நிர்மூலமாக்கிய யுத்தம். கரித் துண்டுகள் என அடுக்கப்பட்ட பிணங்களும், முலையறுத்து வீசப்பட்ட பெண்களும் விழுந்து கிடந்த நிலத்தில் மிஞ்சியவர்கள் அனைவரும் கெஞ்சக் கெஞ்ச நிர்வாணமாக்கப்பட்டு சிறைப்பிடிக்கபட்ட கோர யுத்தமது’ முதலாம் குறிப்பு நிறைவு கண்டது.

இப்போது கயாந்கிகோ கஸ்தமன் திகைத்து எழ ஆரம்பித்தான் ‘அப்படியென்றால் உங்கள் கவிறதுத்பௌன் தலைமைகளுக்குதானே இதில் பாரிய பங்கு இருக்கிறது. உங்கள் ஆலோசனைப்படிதானே நாங்கள் ஒவ்வொரு கட்டமாக நகர்ந்தோம் உங்களுக்குத் தெரியாதா? மறந்துவிட்டீர்களா சுவாமி’

மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌளன் அவர்கள் குழப்பத்தில் சற்று நிதானமிழந்திருந்தாலும் வெளிப்படுத்திக்கொள்ளாமல், மீண்டும் கண்களை மூடி முணுமுணுக்கத் தொடங்கினார். அவரைத்தொடர்ந்து கவிறதுத்பௌளன் அனைவரும் ஒருவரை ஒருவர் தொடுத்தபடி அதே நீளமான நூலைப் பிடித்துக்கொண்டு முணுமுணுக்கத் தொடங்கினார்கள். ஒரு முணுமுணுப்பு சுமார் முப்பது தொடக்கம் நாற்பது நிமிடங்கள் வரை நீளமானது. அந்த நீண்ட இடைவெளிக்குள் புதிய குறிப்பைத் தயார்படுத்திக்கொள்ள முடியும் என்பது மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌளன் அவர்களின் நம்பிக்கை.

இறுதிக் குறிப்பிற்கு முந்தைய குறியை சொல்லத் தொடங்கினார் மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌளன். 'எல்லாக் குற்றங்களுக்கும் பரிகாரம் உண்டு. தசாப்தங்கள் பல கடந்து மீட்ட தேசத்தை ஆண்டீர்கள், பின் ஆட்சியை இழந்தீர்கள், ஞாயிறு நாளில் பல்லுயிர் பலி கொடுத்து மீண்டும் மீண்டீர்கள். நீண்டு செல்லும் பிணங்களின் எலும்புகளால் அலங்கரித்த உங்கள் ஆட்சிபீடம் நிலைக்க நீங்கள் செய்யவேண்டிய காரியங்கள் இரண்டுண்டு என்றறிக'

'என்னவென்று தெளிவுறச் சொன்னால் ஆலோசிக்கலாம். அவை என்ன காரியங்கள் சொல்லுங்கள்' எல்லோரும் ஒன்றாக கேட்டார்கள்.

'ஒன்று: இப்போது நோயொன்றால் நாங்கள் வீடுகளிலும், விடுதிகளிலும் சிறைப்பட்டிருப்பதைப்போல ஆண்டுகள் நீண்டு வயதுகள் முதிர்ந்து சிறைப்பட்டிருக்கும் அப்பாவிகளை விடுதலை செய்ய வேண்டும்.

இரண்டு: இல்லாத தேசத்தை வரைந்து அதை பொல்லாத நாசீம்கா இளவரசுக்கு தாரைவாக்கும் திட்டத்தில் இருந்து விடைபெற வேண்டும்.'

குறி சொல்லி முடித்ததும் அமைதியாய் இருந்த ஹப்ஜராவ்க்களும் கவிறதுத்பௌளன்களும் தங்களுக்குள் புசுபுசுக்கத் தொடங்கினார்கள். 'சிறைப்பிடித்தவர்களை எந்த நம்பிக்கையில் வெளியே விடுவது. எந்த குழியில் எந்த ஆயுதம் பதுங்கிக் கிடக்கும் என்று யாருக்குத் தெரியும். இது ஆபத்தான ஒரு காரியம். இனி வரும் ஆட்சிக்கான மொத்த செலவும் நாசீம்காவை நம்பித்தானே இருக்கின்றது. ஏற்கனவே கைமாறிய அத்தனைக்கும் அவர்களுக்கு என்ன பதில் சொல்வது. இதைப் பரிகாரம்

ஏற்கனவே பல குற்றங்களுக்கு கா

நாடு.. கொள்கை.. கொள்கை.. என்று நாம்

வெறும் பதினான்கு நாட்கள் கூட எங்கள

முடியாது போனதே. எப்படி இன்னும் இரு

கனவுகளை புதைத்துக்கொண்டு ஐந்தடி அ

வாடிக்கொண்

என்றே ஏற்றுக்கொள்ள முடியாதே. இதில் ஏதோ சதித்திட்டம் இருப்பதாகவே மனம் நம்புகிறது...' புலம்பல்களும் குசுகுசுப்புகளும் நீண்டுகொண்டே சென்றன.

இரு தரப்பும் தங்களுக்குள்ளும் குழப்பமடையத் தொடங்கியதை உணர்ந்த கயாந்திகோ கஸ்தமன் அமைதியாக எழுந்து நின்றதும் அனைவரும் அமைதியானார்கள். புறடியை மறைத்து அணிந்த இரத்தக்கறுப்பு நிறத்தாலான துண்டை ஒருதடவை சரிசெய்தபின் பேசத்தொடங்கினான். விரல்களுக்கு நடுவே இருந்த கோல் உருளுவதை நிறுத்திக்கொண்டது. 'இந்த பரிகாரங்களில் எங்களுக்கு குழப்பம் நிறைய

உண்டு. அது மட்டுமில்லாது இரண்டுமே சாத்தியமற்ற ஒன்றாகவும் எங்களுக்கு தோன்றுகின்றன. இத் தொற்றிலிருந்து விடுபடவும் மீட்சிபெறவும் நாசீம்காதான் பெரிதும் உதவிக்கொண்டிருக்கிறது. அது போக அவர்களுக்கு செலுத்தவேண்டிய கடன்சுமை ஒன்று எங்கள் தலைகளில் ஏறி அமர்ந்திருந்து அழுத்திக்கொண்டிருப்பது உங்களுக்கு தெரியாத ஒன்றல்ல சுவாமி. இவை தவிர்த்து வேறு பரிகாரங்கள் இருப்பின்' என்று இழுத்துக்கொண்டு விட்டு அமைதியாக இருந்தான்.

ரணமாக இருந்துவிட்டேனே. நாடு..
் கொன்ற உயிர்கள் ஒன்றா இரண்டா.
ளால் ஒரு இடத்தில் முடங்கி இருக்க
நக்குள் கொடுப்பதை உண்டுகொண்டு,
ஆறடி என நாம் வடிவமைத்த சிறைக்குள்
இருப்பார்கள்.

இறுகக் கண்களை மூடிய மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌளன் அவர்களின் உடல் வேர்க்கத் தொடங்கியது. வழுக்கையான தன் தலையில் பனித்துளிகளைப்போல படர்ந்திருந்த வியர்வை நெற்றி வழியாகவும், காது மடல்கள் வழியாகவும் வடிய தன் இறுதிக் குறியை குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார்.

ஏற்கனவே பல குற்றங்களுக்கு காரணமாக இருந்துவிட்டேனே. நாடு.. நாடு.. கொள்கை.. கொள்கை.. என்று நாம் கொன்ற உயிர்கள் ஒன்றா இரண்டா. வெறும் பதினான்கு நாட்கள் கூட எங்களால் ஒரு இடத்தில் முடங்கி இருக்க முடியாது போனதே. எப்படி இன்னும் இருளுக்குள் கொடுப்பதை உண்டுகொண்டு, கனவுகளை புதைத்துக்கொண்டு ஐந்தடி ஆறடி என நாம் வடிவமைத்த சிறைக்குள் வாடிக்கொண்டிருப்பார்கள். இந்த கொடுமைகளுக்கு ஏதோ ஒரு வகையில் காரணமாக இருந்த என்னை கடவுள் மன்னிப்பாரா மறுமையில் எனக்கு நன்மை கிட்டுமா? இந்த எல்லாப் பாவங்களுக்காகவும் அவர்களை விடுதலை செய்துவிடுவதுதான் சரி. மேலும் நாசீம்காவிடமிருந்து என் நாட்டையும் மக்களையும் என் உயிரைப் பலி கொடுத்தாவது காப்பாற்றுவதே நல்லது. மதிப்பிற்குரிய ரத்தினாதி கவிறதுத்பௌளன் அவர்களின் மனம் பதைக்கத்தொடங்கிய கணம் பேரமைதியாக இருந்தது மண்டபம்.

இறுதிக் குறியை சொல்ல ஆரம்பித்தார். 'செய்த குற்றத்திற்காகவும், செய்யாத குற்றத்திற்காகவும் நாம் கொடுத்த தண்டனை மிக அதிகம். விடுதலை செய்வதைத் தவிர வேறொரு பரிகாரம் ஒன்றில்லை என்றறிக. அரசே இப்பரிகாரத்தை நாங்கள் செய்யாதுபோனால், இந்த வனபதீகாங்கோ தேசத்தை இழந்து பின்னால் வேறு தேசமொன்றில் குடிபெயர்வீர்கள். அந்த தேசமும் அதன் நிலங்களும் உங்களின் உதவியால் இப்பூமியில் புதிதாய் முளைத்த ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால், ஒருபோதும் உங்களாலும் உங்கள் வாரிசுகளின் வாரிசுகளாலும் நிம்மதியோடு அந்த நிலத்தில் வாழமுடியாது தவிப்பீர்கள். நீங்கள் அடிமைகளாக்கப்பட்டு உங்கள் கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்படும். மீட்பர்களாக கொண்டாடிய மக்கள் உங்களைத் துரோகிகள் எனத் துரத்த தப்பித்து வரும் உங்களின் வாரிசுகளின் வாரிசுகளை கவிறதுத்பௌளன் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் கல்லால் அடித்தும் கட்டி இழுத்தும் கொல்வார்கள்.


இறுதிக் குறியை எழுதி முடிப்பதற்குள் வாசல் கதவுகளின் இருமருங்கிலும் வரிசையிட்டிருந்தனர் கையில் ஆயுதமேந்திய சில கறுப்பு வீரர்கள்.

■

# கூவாதே பாடு



**அ.புராந்தகன்**



குச்சி, இலை, தழை பொறுக்கி
கஷ்டப் பட்டுத் தன் கூட்டை
கட்டி முடித்த காக்கை ஒன்று
களைப்பில் கரையும். எனினும்
களிப்பில் திளைக்கும்.
காற்றில் சிறகை
உதைத்துப் பறந்தொரு
வட்டமடித்து வானில் மிதக்கும்.

இப்படி உழைத்துக் கூடு
கட்டும் எண்ணம் மனதில்
சற்றும் இன்றிக் காட்டில்
சுற்றித் துணையொடு கூடி, நெறி
கெட்டுக் கருவுற்று மிக வாடி
தக்கதொரு தருணம் தேடி, திருட்டுப்
பெட்டைக் குயிலொன்று
இட்டு வைக்கும் தன்னுடைய
முட்டைகள் அதற்குள்.

அப்பாவிக் காகம் ஏதும்
அறியாமல் பத்திரமாய்
பொத்தி அடை காக்கப்
பொரிக்கும் குயிற் குஞ்சு.

'கூக் கூ' வை இனங்காண
'காக் கா' க்குத் தெரியாதா?

செட்டை முளைத்தந்தச்
சிட்டுக்கள் கூவும் நேரம்
கொத்தித் துரத்தும் காகம், அதன்
கோபத்தில் உள்ளதொரு ஞாயம், மறு
கோணத்தில் இது பெருஞ் சோகம்,





கூடு,

குழந்தைத் துர்ப்பிரயோகம்.

கெட்டித்தனக் குயிலாரே! ஏமாற்று
வித்தையினைக் காட்டிய
குற்றச்செயலுக்காய், விதிப்
புத்தகத்தில் உள்ள 'வினைப்பயன்'
சட்டத்தின் பிரகாரம் சிறைப்பட்டீர்.
தப்ப முடியாதினி.

அடைகாக்கும் பொறுப்பற்ற
அசமந்தப் போக்குக்கு
அடைத்தும்மை வைத்தல்
பழுதில்லைப் பாரும்.

கூடு தானே தேடிப் போனீர்...?
இந்தாரும் பிடியும்...இரும்புக்
கம்பியாலே செய்ததிது....கடும்

மழை, புயல் எதற்கும்
ஆடாது நின்று பிடிக்கும்... காக்காக்
கூடு எந்த மட்டு...?
இதற்குள் தனித்திரும்.

கூவியழுகின்ற ஒப்பாரி
வேண்டாங்காணும்.
மெட்டமைத்தொரு தாலாட்டுப்
பாட முடிந்தால் பாடும்.
தூர இருந்தேனும்
கேட்டுத் தூங்கட்டும்
இரவல் தாய் வீட்டில்
இருந்துழலும் உம்முடைய
மழலைச் செல்வங்கள்.

## எதிர்வினை

# இலங்கையின் கல்விச் சாதனைகள் ஏன் கை கொடுக்கவில்லை



**நா.இராஜமனோகரன்**
சமூக சேவை அலுவலர்

இலங்கையின் கல்விச் சாதனைகள் ஏன் கைகொடுக்கவில்லை என்ற தலைப்பில் கடந்த உள்ளம் இதழில் இடம்பெற்ற வைத்தியநாதர் சிவநேசன் அவர்களது கட்டுரையை வாசித்தேன். மிகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் இருந்தது. ஒரு சிறந்த கலந்துரையாடலுக்கான களத்தை இந்த கட்டுரை திறந்து விட்டிருக்கின்றது என்பது மகிழ்ச்சிக்குரியது.

சில விடயங்களை கலந்துரையாடுவதற்குக் காத்திரமான தொடங்கு நிலை தேவை.இதனை இந்த கட்டுரை தொடக்கி வைத்துள்ளது.பலருடைய கருத்துக்கள் இதை தொடர்ந்து வரும், அது கலந்துரையாடலுக்கு மேலும் வலுச்சேர்க்கும். அந்த அடிப்படையில் எனது பார்வையில் பதிந்த சில விடயங்களை பதிவு செய்கிறேன்.

இலங்கையின் கல்வி முறைமை தொடர்பான இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்ட பிரதானமான சில விடயங்களை என்னால் அடையாளப்படுத்தக்கூடியதாக இருந்தது:

1. இலங்கையில் கல்வி முறையின் பலவீனம்

அ.தொழில்சார் தேவையுடன் உருவாக்கப்படாதவர்கள்

ஆ.புலமைசார் ஆளுமைகளை உருவாக்க தவறியமை

இ.உயர்கல்வியின் திட்டமிடல் குறைபாடு

ஈ.அதிகளவான கலைத்துறை பட்டதாரிகளின் உருவாக்கம்.

2. கல்வி மற்றும் முதலீட்டில் தனியார் துறையின் தேவை

இவற்றில் சில மறுக்க முடியாத விடயங்களாக இருந்தாலும் சில கேள்விக்கு உட்படுத்தவேண்டிய தேவையை ஏற்படுத்துகின்றது.

முதலாவது கேள்வி இந்த கட்டுரை “கல்வி” என்ற கருத்துருவை எந்த நோக்கு நிலையில் முன்வைக்க முயலுகின்றது.

1. சமூகக் கட்டுமானத்திலா ?

2. விழுமியக் கட்டுமானத்திலா ?

3. விடுதலைக் கல்வி என்ற கட்டுமானத்திலா ?

4.நவீனகாலனித்துவ அடிப்படைச் சிந்தனைக் கட்டுமானத்திலா ?

5. பல்தேசிய நிறுவனங்களுக்கு மாணவர்களை உற்பத்தி செய்யும் அடிப்படையிலா?

இக்கட்டுரை பெருமளவு இலங்கையின் பொருளாதார நிலைபேறைக் கல்விக்கூடாக கொண்டு செல்ல என்ன செய்யலாம் எனக் குறிப்பிடுவதுடன்,கல்வியை அந்த எல்லைக்குள்ளேயே அடக்கிவிட்டதாக தெரிகின்றது. அதுமட்டுமன்றி நவகாலனித்துவக் கட்டுமானத் தூண்களாக விளங்கும் பல்தேசிய நிறுவனங்களுக்கான ஊழியர்களை உற்பத்தி செய்யும் நிறுவனமாக விளங்க வேண்டும் என இக்கட்டுரை கோடிடுகின்றது.

கல்வியில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் செயல் முறைகள் இருக்கலாம் ஆனால் கல்வி அதற்கு அப்பாலானது.

இருக்கிற சமூக அமைப்பிற்குத் தக்கவராக மனிதரை வசப்படுத்துவதற்கோ (Domesticating) அல்லது இருக்கிற சமூக அமைப்பைக் கவிழ்த்து மனிதரின் விடுதலைக்கு வழிவகுப்பதற்காகவோ (Liberating)மட்டுமே கல்வி இருக்க முடியும். இரண்டிற்கும் இடைப்பட்ட நடுநிலையான கல்வி(Neutral education) என ஒன்று கிடையவே கிடையாது. கல்வி என்பது ஓர் அரசியல் செயல்பாடு.அதிகாரத்தைப் பகுப்பாய்வு செய்யாமல் கல்வியைப் பகுப்பாய்வு செய்யமுடியாது.

ஒடுக்கும் கல்வி சமூகத்திற்கு மனிதரை வசப்படுத்துகிற பணிகளை பல வழிகளிலும் நிறைவேற்றுகின்றது என்பது கவனிக்கத்தக்கது.

இந்த கட்டுரை கல்விச்சாதனைகள் என்பதை சந்தைக்கேற்ற நிரம்பலை தயார் செய்யாத குறையைச் சுட்டி நிற்கிறது. இதனூடாக கல்வியைச் சந்தை நிரம்பலுக்கு அப்பால் கொண்டு செல்ல முனையவில்லை. இலங்கைக்கான கல்விமுறை நிதிவழங்கும் நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரல்களிலும் தங்கியுள்ளமை மறுப்பதற்கில்லை.

இக்கட்டுரை, தனியார் பல்கலைக்கழகங்கள் பற்றிக் குறிப்பிடுகின்றது. இவையும் சந்தையை ஒட்டிய கல்வியை வழங்கும் என்பதில் சந்தேகமில்லை.அதுமட்டுமின்றி இந்தியா போன்ற நாடுகளில் நடைபெற்ற அனுபவங்களின் அடிப்படையில் வசதியற்ற திறமையானவர்கள் பாதிக்கப்படுவதுடன், சுரண்டல் நிலையங்களாக மாற இங்கு வாய்ப்புள்ளது. நீதித்துறையின் பலமற்ற தன்மை நீதி கோர முடியாத தன்மையையும் ஏற்படுத்தும்.

தொகுத்து நோக்கின் முதலீடுகளை உள்ளீளுக்கும் கல்வி தொடர்பிலும்,பாரிய நிறுவனங்களுக்கான நிரம்பல் தேவையை பூர்த்தி செய்யும் கல்வி முறை பற்றி அதிகம் பேசியுள்ளது.மற்றும் கண்டு பிடிப்பாளர்களின் பற்றாக்குறை பற்றியும் தொட்டு சென்றிருக்கிறது.இங்கு பற்றாக்குறைக்கு காரணம் எமது கல்வியில் காணப்படும் Banking concept. அதாவது ஏற்பது,நிரப்பிக்கொள்வது,தேக்கிவைப்பது என்ற அளவில் மாணவர்களின் வாய்ப்பு எல்லைகள் சுருக்கப்படுகின்றன. சற்று யோசித்து பார்த்தால் இதன் மூலம் மாணவர்களின் படைப்புத் திறனில்லாது மழுங்கடிக்கப்படுவதை உணரலாம்.

இலங்கையின் கல்விச் சாதனை என்பது பொருளாதார நோக்கு நிலைக்கு அப்பால் பார்க்கப்படவேண்டிய ஒன்று. அதுமட்டுமன்றி மேலத்தேய சுட்டிகள் மற்றும் புள்ளியிடல் என்ற நிலைகளிலும் அது தங்கியிருப்பதில்லை. காரணம் மேலைத்தேய சுட்டியிடல் அவர்களின் தேவையின் அடிப்படையில் நேர்த்தியாக வடிவமைக்கப்படும் வியூகங்கள். இவற்றை கடந்து எமது கல்வியை பார்க்கவேண்டும்.

எவ்வாறாயினும்,இக்கட்டுரை ஒரு கருத்து பரிமாற்றத்திற்கான களத்தைத் திறந்துள்ளது என்பது மறுப்பதற்கில்லை என்பதுடன் வணிக மற்றும் முதலாளித்துவ நோக்கு நிலையில் கல்விப்புலம் எவ்வாறு அமையவேண்டும் என்பதை தெளிவாகக் கோடிட்டுள்ளது.

■

# பழக்கூடு சிறகின் கவிதை





## பிரான்சிஸ் திமோதிஸ்

எல்லோரும்...
கரும்பலகையில் எழுதப்பட்டிருந்த
வினாக்களுக்கு
விடை எழுதிக்கொண்டிருக்க,
அவன்;
ஆசானிடம் வினா தொடுத்தான்.!
மழை எங்கிருந்து வருகிறது.?
எப்படி இடியோசை எழுகிறது.?
இப்படியாக...

ஆசானுக்கு
இது வழக்கமான சலிப்பூட்டும் நிகழ்வு.
ஆகையால்,
அமைதியாய் இருக்கும்படி
முறைத்தார்.

அவன்
எழுத்தறியாதவன்,
எப்போதும் எதையோ
சிந்தித்துக்கொண்டிருப்பான்.
வாசிப்பு...
மனனம்...
இவைகள் என்றதுமே அழுவான்.

வகுப்பறையில் இருப்பதுவும் இல்லை.!

இலைகளின் வர்ணங்களை ரசிப்பான்.
பூக்களில் வண்டுகள் அமர்வதை
ஒளிந்திருந்து பார்ப்பான்.
குருவிகளோடு
பேசிக்கொண்டிருப்பான்.
மழையில் நனைகின்றதென்று
எறும்புகளுக்கு குடை பிடிப்பான்...

“இயற்கை தான் அவனுக்கு புத்தகம்”

ஆயிரம் விடை தெரியாத வினாக்கள்
அவனிடத்தில் உண்டு.
ஆயினும்,
அனுதினமும் ஆய்வு செய்யும்
அவன் குறித்து
ஆசான்கள் சொல்வது,

இவன் படிக்கமாட்டான்.

# நாங்கள் பிஸி



பிரவீணன் விழிமைந்தன்



"எவனுமே தனித்தீவு அல்லன்"

"No man is an island" — John Donne.

இன்றைக்குத் தமிழர் மத்தியில் பொதுவாகவும், புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் குறிப்பாகவும் மிக வேகமாகப் பரவிவரும் தொற்று நோய் ஒன்று உண்டு. அதுதான் "பிஸி" யாக இருப்பது.

இன்னும் குறிப்பாகச் சொல்லப்போனால், "பிஸி" யாக இருப்பதாக அடிக்கடி சொல்லிக் கொள்வது.

நீர்வெறுப்பு நோய் வந்தவர்கள் நாய் மாதிரிக் குரைப்பது போல, "பிஸி" நோய் தொற்றியவர்கள் அடிக்கடி "பிஸி, பிஸி" என்று "குரைப்பார்கள்".



"நீர் கோல் பண்ணினநீர் அப்பா, சரியான பிஸியாய் போச்சு, திரும்ப எடுக்க முடியவில்லை"

"உங்கடை வீட்டை வருவம் வருவம் எண்டு நினைக்கிறது, பிறகெங்கை பிஸியாய் போயிடும்"

"பிள்ளைகளோடை ஒரே பிஸி"

"இப்ப நாங்கள் பிஸி, திரும்ப எடுக்கட்டே"

இப்படி, இப்படி.

ஒருவர் எல்லாநேரமும் வேலை வெட்டி இல்லாமல் இருக்க வேண்டுமென்பதில்லை. மற்றவர்களுக்காக ஒதுக்க வேண்டும் என்பதுமில்லை. சிலநேரங்களில் நாங்கள் எல்லோருமே பிஸி தான். அது ஒரு நோயல்ல. உண்மையிலேயே பிஸி யாக இருப்பதற்கும் பிஸி நோயால் பீடிக்கப்பட்டிருப்பதற்கும் வித்தியாசங்கள் என்னவென்று பார்த்தால்:

பிஸி என்பது உண்மையில் ஒரு ஒப்பீட்டளவிலான சொல். சில நேரங்களில் பிஸி என்றால் சில நேரங்களில் பிரீ ஆகவும் இருக்க வேண்டும். ஆனால், பிஸி நோயால் பீடிக்கப்பட்டவர்கள் வருடம் முழுவதும் பிஸி. நாளின் எல்லா நேரமும் பிஸி.

உண்மையாக கடினமாக உழைப்பவர்கள் அநேகமாக ஒரு நேரத்தில் பல வேலைகள் செய்வார்கள். நான்கூட வேலை முடிந்து வீட்டுக்குப் போகும் போது புகையிரதத்தில் இருந்து தான் இதை எழுதுகிறேன். ஆனால் பிஸி நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு நேரத்தில் இரண்டு வேலை செய்ய மாட்டார்கள்.

'சாதாரண' மக்கள் சிறிய விடயங்களில் தங்கள் நேர அட்டவணையைக் கொஞ்சம் மாற்றிக் கொள்ளத் தயங்குவதில்லை. அதாவது காலை பல் துலக்கும்போது ஒரு வேண்டப்பட்டவர் தொலைபேசினால் தொலைபேசியை எடுப்பார்கள். ஆனால் பிஸி நோய் உள்ளவர்கள் எடுக்க மாட்டார்கள். பிறகு ஒரு நேரம் "ஐயோ போன கிழமை நீர் கோல் பண்ணின போது பிஸி யாக இருந்தநான். எடுக்க முடியேல்லை" என்பார்கள். அவர்கள் "பிஸி" யாக இருந்தது என்று சொல்வது பல் துலக்கிக் கொண்டிருந்ததை!

சில தமிழர்கள் "தமிழ் தெரியாது" என்று சொல்வதை பெருமையாக நினைப்பது போல பிஸி நோயாளர்களுக்கு "நாங்கள் பிஸி" என்று சொல்வது பெருமை. இது அவர்களுடன் பேசிப்பார்த்தால் புரியும். உலகில் எல்லா மனித ஜீவன்களுக்கும் ஒரு நாளில் 24 மணி நேரம்தான் என்பது இவர்களுக்கு உறைப்பதில்லை. தாங்களும் "பிஸி" என்று சொல்லாவிட்டால் மற்றவர்கள் தங்களைக் குறைவாக நினைத்து விடுவார்கள் என்ற பயம் அவர்களுக்கு உள்ளூர இருக்கும். இதனால் பல் துலக்குவது, வீடு கூட்டுவது முதலிய விடயங்களையும் தங்கள் "மாற்ற முடியாத நேர அட்டவணை" யில் போட்டாவது "நாங்களும் பிஸி" என்ற பிம்பத்தை உருவாக்கிக் கொள்வார்கள்.

சாதாரண மக்கள் கூட "பிஸி" நோயாளிகளை ஓரளவு சகித்துக் கொள்வார்கள். ஆனால் ஒரு "பிஸி" நோயாளிக்கு இன்னொரு "பிஸி" நோயாளியைச் சகித்துக் கொள்ளவே முடியாது. பொத்துக்கொண்டு வந்து விடும்!

பிஸி நோய்க்குப் பல காரணங்கள். சில பேரால் உண்மையாகவே வாழ்க்கையின் பல பரிமாணங்களைச் சமாளிக்க முடிவதில்லை. மன அழுத்தத்திற்கு உள்ளாகிறார்கள். இதற்கு, பல விடயங்களில் அவர்களின் திறமையின்மையும், வெளிநாட்டு வாழ்வின் அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க முடியாதவர்கள் கூட "ஆசை பற்றிப்" புலம்பெயர்வதும் காரணங்கள் ஆகலாம்.

ஆனால், பெரும்பாலானவர்களின் "பிஸி" நோய்க்கு வரட்டுக் கௌரவமே காரணம். மற்றவர்கள் முன்பு தாங்கள் படு "பிஸி" என்று காட்டிக்கொள்ளாவிட்டால் தங்களை மற்றவர்கள் குறைவாக நினைத்து விடுவார்கள் என்ற எண்ணத்தினால் தங்களை மிக "பிஸி" யாகக் காண்பித்துக் கொள்வார்கள். தூங்குபவனை எழுப்பலாம், தூங்குவதாக நடிப்பவனை எழுப்ப முடியாது என்பதுபோல உண்மையாகப் பல

வேலை உள்ளவர்களிடமும் பேசி விடலாம், இந்த "பிஸி" யாக நடிப்பவர்களைப் பிடிக்கவே முடியாது.

நான் பார்த்தளவில் வாழ்க்கையிலே பல சாதனைகளைச் செய்பவர்களும் உண்மையாகவே பலதரப்பட்ட கருமங்களில் முன்னின்று உழைப்பவர்களும் இந்த "பிஸி" என்ற வார்த்தையைப் பாவிப்பது குறைவு. அப்படிச் சொன்னாலும் அவர்கள் தாங்கள் வழக்கத்தை விட

"பிஸி" என்கிற போதுதான் அந்த வார்த்தையைப் பாவிப்பார்கள். வருடம் முழுவதும் அதையே சொல்லிக்கொண்டிருக்க மாட்டார்கள். ஏனென்றால், பெரும் கருமங்களை ஒப்பேற்றுவதற்கு மனிதர்களுடனான நல்லுறவு முக்கியம் என்பதையும் சக மனிதனுக்கு நேரம் ஒதுக்காமல் எதையும் சாதித்து விட முடியாது என்பதையும் அவர்கள் புரிந்து வைத்திருப்பார்கள். இவர்கள் தொலைபேசி அழைப்பை முடிந்தவரை எடுப்பார்கள். எடுக்க முடியாவிட்டால் திரும்ப அழைத்து மன்னிப்புக் கேட்பார்கள். செய்திகளுக்கு உடனே பதிலளிப்பார்கள். பொது இடங்களில் மனிதர்களைத் தேடிச்சென்று பேசத் தயங்க மாட்டார்கள். இவர்களே வாழ்க்கையிலே வெல்கிறார்கள்.

மாறாகக் கடுமையான "பிஸி" நோய் பிடித்தவர்கள் – அதாவது நாங்கள் "பிஸி" என்று எப்போதும் சொல்லிக்கொண்டிருப்பவர்கள் – தாய்நாடுகளிலோ புலம்பெயர் தேசங்களிலோ பெரிதாக எதுவும் செய்து கிழித்ததாக நான் கண்டது மிகவும் அருமை. அப்படி ஏதாவது செய்திருந்தாலும் அது பணம் சம்பாதிப்பதாக மட்டும்தான் இருந்திருக்கும். சமூகத்துக்கோ நாட்டுக்கோ உருப்படியாக எதுவும் செய்திருக்க மாட்டார்கள். தங்களது குடும்பத்துக்குக் கூட பணம் சம்பாதித்துக் கொடுப்பது தவிர வேறேதும் உருப்படியாகச் செய்திருக்க மாட்டார்கள். இதனால் இவர்களின் வாழ்வு சந்தோஷமாக அமைவது அருமை. பணம்கூட இவர்களிடம் அதிக நாள் நிற்காது.

மனிதன் ஒரு சமூக விலங்கு. எந்த மனிதனும் ஒரு தனித் தீவாக இருக்க முடியாது. "பிஸி" நோய் பிடித்தவர்கள் வரட்டுக் கௌரவத்திற்காக சக மனிதர்களுடன் உறவாடும் சந்தர்ப்பங்களை இழக்கிறார்கள். இது நாளைடைவில் அவர்களது உளவியலைக் கடுமையாகப் பாதிக்கிறது. மேலும் பெற்றோரின் "பிஸி" நோயால் கடுமையாகப் பாதிக்கப்படுபவர்கள் குழந்தைகள். மேல்நாடுகளில் "பிஸி" யான பெற்றோரின் பிள்ளைகள் அநேகமாக நாள் முழுவதும் கணனி, தொலைக்காட்சி, ஐபாட், கைத்தொலைபேசி இவற்றோடு செலவழித்துக் கண்பார்வையையும் உள, உடல் ஆரோக்கியத்தையும் பழுதாக்கிக் கொள்கின்றன. தனிமையாக உணர்கின்றன. இது நாளடைவில் பெற்றோரையும் பாதிக்கும்.

இவ்வளவு நேரமும் நான் எழுதியதை வாசித்த பலர் உங்களுக்குள் நான் சொன்னதெல்லாவற்றையும் ஆமோதித்து இருப்பீர்கள். "பிஸி" நோய் பிடித்த பலரை உங்களுக்குத் தெரியும் என்று கூட நினைத்திருப்பீர்கள். நான் எழுதுவது அதற்காக அல்ல. "பிஸி" நோயை மற்றவர்களிடம் காண்பது சுலபம். ஆனால், நமக்குள்ளே கூட நமக்குத் தெரியாமல் அது இருக்கலாம். எனக்குக் கூடக் கொஞ்சம் இருக்கலாம். முடிந்த வரை அதைத் தவிர்க்கப் பார்க்கிறேன். இம்மாதிரி நாங்கள் எல்லோரும் சுய பரிசோதனை செய்துகொள்வதே "பிஸி" நோயை ஒழிப்பதற்கான நல்ல வழி.

உங்களது "பிஸி" யான "ஷெடூல்" இற்குள்ளும் நேரத்தை ஒதுக்கி இவ்வளவு வரை இதை வாசித்த உங்களுக்கு நன்றி! உங்களுக்கு "பிஸி" நோய் அவ்வளவு இல்லையென்பதே இதன் பொருள். வாழ்த்துக்கள்!

■

# நமது அந்நியத்தின் சாட்சியம்



**சிவ சேகரன்**


பூமிமுழுதும்
மரணம் உலாத்திக் கொண்டிருக்கும்
இந்த துயரீயும் இரவுகளிலெல்லாம்
என்னுள் விழுகிறது
எங்கோ நடந்துகொண்டிருக்கும்
சாவின் விம்பம்...

பயத்தின் கொடுங்கைகள்
என்னை தழுவிக் கொள்ளும்
ஒவ்வொரு கணத்திலும்
வெட்கத்தோடு நினைவு மீட்டுகிறேன்
உனக்கு நானிழைத்த
துரோகத்தின் கொடுமுகத்தை..

அப்போதெல்லாம்
மரணத்தின் வாசலில் உன்னை விட்டு
தொலைந்துபோன எனது
வஞ்சிப்பின் வாடை
காற்றில் வருவதாய்
நீ எழுதிய கவிதை
எனக்கு நினைவு வருகிறது...

நான் பேசாத உனது இரவுகளையும்
நானின்றிய உனது பகல்களையும்
எப்படிக் கடந்திருப்பாய் என்று
எண்ணிக் கொண்டிருக்கையில் தான்
என்னுள் விழுமந்த சாவின் விம்பம்..

இதோ..
சாவின் விம்பத்தை பார்த்தபடியே




நான் நிம்மதியின்றி உறங்கி விழிக்கும்
தனிமை இரவுகள்
எனது துரோகத்தினதும்
நமது அந்நியத்தினதும் சாட்சியாவதை
உனக்குச் சொல்லிவிடும் வழியை
யோசித்துக் கொண்டிருக்கும்
இந்த இரவும்
நீண்டு கொண்டே இருக்கிறது
விடிவே இல்லாமல்...

# புலம்பெயர்தல் உருவாக்
# புதிய சமூக



# …க்கும்
# …கவியல் கட்டமைப்பு





**பேராசிரியர் மா.சின்னத்தம்பி**

அறிமுகம்

உலகம் முழுவதிலும் மாற்றங்களை உருவாக்கும் சக்திகளும் அவற்றின் பாதிப்புக்களும் சமூகவியல் ரீதியில் மிகவும் முக்கியமானவை. புலம்பெயர்தல் இத்தகைய ஒரு வலுவான சக்தியாகும். தங்கள் பாரம்பரிய வாழிடங்களிலிருந்தும் வாழ்க்கை ஒழுங்கு முறைகளிலிருந்தும் வெளியேறுவதும் புதிய சமுதாய சக்திகளையும் அவற்றினால் ஏற்படும் மாற்றங்களையும் ஏற்றுக் கொள்ளத் தயாராவதும் உலகின் புதிய ஒழுங்குகளை ஏற்படுத்தி

வருகின்றன. இதில் புலம் பெயர்தல் என்பது முடிவில்லாத குடியியல் பண்பாக வலுவுடன் செயற்படுகின்றது.

சமூகம் பற்றிய விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை வழங்குவதாக சமூகவியல் அடிப்படைகள் வளர்ச்சி பெற்றன. புலம்பெயர்தல் மனிதர்களின் சமூக நடத்தைகளை வெகுவாக மாற்றியமைத்து வருகின்றது. சமூகத்தின் புதிய ஒழுங்கு மற்றும் ஒழுங்கின்மைகளை உருவாக்குவதில் புலம் பெயர்தல் முக்கியமான விசையாக விளங்கி வருகின்றது.

கைத்தொழில் புரட்சிக்குப் பின்னுள்ள காலப்பகுதியில் தொழில்நுட்பவியல் புத்தாக்கங்கள் அதிக ஆற்றல் மிக்கனவாக விளங்கின. நுகர்வுச் சமுதாயம் (Consumer soceity) வளர்ச்சி பெற்றதால் நவீனத்துவம் வளர்ச்சி பெறலாயிற்று. இதில் புலம் பெயர்தல் தொடர்ந்து செயற்படும் உலக நிகழ்வாக விளங்குகிறது.

புதிய தொடர்பாடல் ஆற்றல்களும்; அதிவிரைவான போக்குவரத்து முறைகளும் இணைய வழித்தொடர்பாடல் நுட்பங்களும் புதிய சமூக வலையமைப்பை உருவாக்கும் போது புலம் பெயர்தலை எளிமைப்படுத்துவனவாயும், துரிதப்படுத்துவனவாயும் அவை விளங்குகின்றன.

புலம்பெயர்தல் பல்வேறு தள்ளு விசைகளினாலும் இழுவிசைகளினாலும் உயிர்ப்புடன் விளங்குகின்றன. இத்தகைய இரு திசைப்பட்ட விசைகளும் வரலாறு முழுவதும் செயற்பட்டனவாயுள்ளன.

### புலம்பெயர்தலை தூண்டிய காரணிகள்

ஜேர்மனியில் பிறந்த கார்ல் மாக்ஸ் சமூக விஞ்ஞான சிந்தனைகளின் மூலகர்த்தாவாக இருந்தார்; அவர் பிரான்சுக்கும் பின்னர் இங்கிலாந்துக்கும் புலம் பெயர்ந்தார். இவரைப் போலவே ஐரோப்பிய அமெரிக்க சிந்தனையாளர்களும் புலம் பெயர்ந்து புதிய சமூகங்களில் வாழ்ந்து வந்தனர்.

வறுமை, சமூக அடக்கு முறை, யுத்த அபாயம், இயற்கை பேரழிவுகள், முன்னேற்றுவதற்குரிய வாய்ப்புக்கள் மறுக்கப்படுதல், கொடூரமான வரட்சி போன்ற பலவும் மக்களை தமது பாரம்பரிய வாழ்க்கையிலிருந்தும் பண்பாட்டு முறைமையிலிருந்தும் வெளியேறும்படி நிர்ப்பந்தித்து வந்துள்ளன.இப்போதும் கட்டாயப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன.

சில நாடுகளில் அபரிமிதமான இயற்கை வளங்களை அபிவிருத்திக்கு மாற்றுவதற்கு மக்கள் கூட்டம் தேவைப்பட்டது; அவர்கள் புலம் பெயர்ந்த மக்கள் தம் நாட்டுக்குள் வருவதை ஊக்குவித்தார்கள்.

உலகின் தனியான ஒரு கண்டம், ஒரு தீவு ஒரே நாடாக இருக்கும் சிறப்புப் பெற்றது அவுஸ்திரேலியா. அவர்கள் தமது வளங்களை உற்பத்திக்கு கொண்டு செல்ல குடிபெயர்ந்து மக்கள் வருவதை விரும்பினார்கள். அவுஸ்திரேலியாவில் பிரதமராயிருந்த அல்பிரட் டேகின் (Alfred Deakin) (1856—1919) அவுஸ்திரேலியாவின் விவசாய வளங்களையும் கனிய வளங்களையும் பூரணமாக பயன்படுத்துவதற்குரிய மனிதவளம் தமக்கு தேவையென்று 1906 இல் கூறியிருந்தார். மக்கள் தொகை இல்லாதது துரதிர்ஷ்டம் என்றும் கருதினார்.

அங்கு தற்போதும் கூட (2021ல்) சுகாதாரத்துறை, உணவுற்பத்தித்துறை போன்றவற்றில் திறன்மிக்க பணியாளர்கள் 20,000 பேர் தேவைப்படுகிறார்கள். பத்து இலட்சம் இந்தியர்கள் அங்கு குடியுரிமை பெற்று வாழ்கின்றனர்.

ரஷ்யா— உக்ரேயின் யுத்தம் நாற்பது இலட்சம் மக்கள் பல நாடுகளுக்கும் சிதறி ஓடுவதற்கு காரணமாயுள்ளது. இந்தியாவில் காஷ்மீர் இந்துக்களும் இலங்கையில் வடக்கு கிழக்கு தமிழர்களும் யுத்தம் மற்றும்

குடியேறிகளின் புதிய, சமூக, பண்பாட்டு ஒழுங்குகள் வறிய நாடுகளில் மிகவும் பின்தங்கிய விவசாயக் கிராமங்களில் பிறந்து வளர்ந்தவர்கள், அச்சமூகத்தினரின் கட்டுக்களிலிருந்தும் தொழிற்பகுப்பு அடுக்கு முறைக்குள்ளிருந்தும் வெளியேற முடியவில்லை; சாதி ஒடுக்கு முறைகள் பெண்கள் மீதான மேலாதிக்க சமூக நியதிகள் என்பவற்றிலிருந்தும் வெளியேறுவதென்பது கற்பனை செய்ய முடியாத வேட்கையாக இருந்து வந்துள்ளது. இப்போதும் அந்த நிலை தொடர்கிறது.

சமூக அமைதியின்மைகளினால் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்துள்ளனர். பல அரபு நாடுகளிலிருந்தும் இவ்வாறு மக்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் குடியேறியுள்ளனர்.

இவற்றால் புதிய சமூக ஒழுங்குகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மூன்று தசாப்தங்களுக்கு முன்பு குடியேறிகளாக வந்த மக்கள் இந்த நாடுகளின் தவிர்க்க முடியாத பொருளாதார, சமூக, அரசியல் சக்திகளாக மாறியுள்ளனர். குடியேறிய நாடுகளின் நவீனத்துவம் மற்றும் பண்பாட்டு குகைகளில் அவர்கள் தஞ்சமடைந்து விட்டனர்.

குடியேறிகளின் புதிய, சமூக, பண்பாட்டு ஒழுங்குகள் வறிய நாடுகளில் மிகவும் பின்தங்கிய விவசாயக் கிராமங்களில் பிறந்து வளர்ந்தவர்கள், அச்சமூகத்தினரின் கட்டுக்களிலிருந்தும் தொழிற்பகுப்பு அடுக்கு முறைக்குள்ளிருந்தும் வெளியேற முடியவில்லை; சாதி ஒடுக்கு முறைகள் பெண்கள் மீதான மேலாதிக்க சமூக நியதிகள் என்பவற்றிலிருந்தும் வெளியேறுவதென்பது கற்பனை செய்ய முடியாத வேட்கையாக இருந்து வந்துள்ளது. இப்போதும் அந்த நிலை தொடர்கிறது. வன்முறை எதிர்ப்பு, இடதுசாரி அரசியல் சக்திகள் சார்ந்த செயற்பாடுகள் கொண்டுவர முடியாத பல சமுதாய மாற்றங்களையும் தனிமனித சுதந்திரங்களையும் புலம் பெயர்தல் உருவாக்கிய புதிய வாழ்க்கை முறை வழங்கி வருகின்றது.

இவற்றில் பங்கு வகித்த காரணிகளாக அரசின் கொள்கைகளும், தொழில்நுட்ப செயற்திறன்களும் புதிய அடையாளங்களைச் சுமந்த தனி மனிதர்களாகவே வாழக் கிடைத்த வசதிகளும் முக்கியமானவை.

குடியேறிய நாடுகளில் வாழ்ந்த முன்னேறிய சமூகங்கள் புதிய பண்பாடுகளை கையளித்தனர் புதிய சமூக வலையமைப்புக்களில் உள்வாங்கினர். ஏற்றுக் கொள்ளத்தக்க பன்முகத்தன்மையையும் சமமின்மையையும் பரவ விட்டனர். புதிய மாதிரி தொழில்கள், தொழில் உறவுகள், பொருளாதார வாய்ப்புக்கள் குடியேறியவர்கள் மீது புதிய மேகங்களாக படியத் தொடங்கியிருந்தன.

நுகர்வை மையப்படுத்திய வெளிப்பகட்டு விளைவுகள் எல்லாவற்றையும் கடந்து மேலாதிக்கம் செலுத்தின. ஒற்றை மனிதர்களாக இனங்காணக் கூடிய வாழ்வியல் முறையும் பண்பாட்டு பெருவெளியும் தலைமுறை தலைமுறைகளாக விடுபட முடியாத சமூக அடக்கு முறைகளிலிருந்து பல மோசமான சமூகங்களை மீட்டெடுத்துள்ளன. பிரித்தானிய சமூகவியலாளர் ஜோன் உறி (John Urry) 17ம் நூற்றாண்டிலிருந்தே இத்தகைய புதிய பண்பாடுகளதும் வாழ்வியல் போக்குகளதும் புலம் பெயர்தலை ஊக்குவித்ததாக விளக்குகிறார்.

புதிய கலாசார பண்டங்கள், அவை சார்ந்த நிறுவனங்கள் உலக மயமாதலில் அதிக

புதிய கலாசார பண்டங்கள், அவை சார்ந்த நிறுவனங்கள் உலக மயமாதலில் அதிக விசையுடன் வளர்ச்சி பெற்றன. இவை புதிய பண்பாட்டு மனிதர்களாக குடியேறிகளை மாற்றத் தொடங்கின. ஒடுக்கப்பட்ட குடும்பங்களின் தொடர்ச்சியாக அல்லது எச்சங்களாக தனிமனிதர்களை இனங்கண்டு முத்திரை குத்தி உளவியல் ரீதியில் துன்புறுத்தல் என்ற கிராமிய பண்பாட்டு வலையைக் கிழித்துக் கொண்டு வெளியேறுவதற்கு புலம்பெயர் வாழ்வு துணை செல்கின்றது.

விசையுடன் வளர்ச்சி பெற்றன. இவை புதிய பண்பாட்டு மனிதர்களாக குடியேறிகளை மாற்றத் தொடங்கின. ஒடுக்கப்பட்ட குடும்பங்களின் தொடர்ச்சியாக அல்லது எச்சங்களாக தனிமனிதர்களை இனங்கண்டு முத்திரை குத்தி உளவியல் ரீதியில் துன்புறுத்தல் என்ற கிராமிய பண்பாட்டு வலையைக் கிழித்துக் கொண்டு வெளியேறுவதற்கு புலம்பெயர் வாழ்வு துணை செல்கின்றது.

இந்தியாவின் சமூக கட்டமைப்பில் நான்கு பிரதான சாதிகள் மூவாயிரம் சாதிகளாக பிரிந்ததாகவும் அவை இருபத்து ஐயாயிரம் துணைச்சாதிகளாக மேலும் கிளை விட்டு பிரிந்ததாகவும் அவை தனிமனிதர்களின் வாழ்வியல் ஒழுங்கு, சுதந்திரம், முன்னேற்றம் என்பவற்றை நெடுங்கோட்டில் பாதித்து வருவதாகவும் சமூகவியலாளர்கள் நம்புகின்றனர்.

இந்த ஆயிரம் ஆண்டு கால சமூக கட்டமைப்பும் அதன் செயற்பாடும் ஒழுங்கும், தொழில், தொழில்முறை மாற்ற உரிமை, உணவு, திருமணம், சமூக வளங்கள் மீதான அவர்களது உரிமைகள் என்பவற்றை அசுரத்தனமாக அடக்கியிருந்தன.

புலம்பெயர்ந்த போது இதிலிருந்து வெளியேறுவதற்கும் தமக்குரிய வாழ்வியல் மாதிரியை தாமே தீர்மானிப்பதற்கும் வாய்ப்புக்கள் அதிகம் கிடைத்தன. கல்வி வாய்ப்பு, தொழில்நுட்ப உதவிகள், தொழில் வாய்ப்பின்மை பன்முக வளர்ச்சி வாய்ப்புக்கள், திருமணம் தொடர்பான சுயாதீனம் என்பன கிடைத்த போது அவர்கள் இதிலிருந்து விடுதலை பெற்றனர் புதிய சமூகவியல் அடையாளங்களுடன் மேற்கிளம்பி வந்தனர்.

இது அவர்களது உள்ளடங்கிய உளவியல் துயரங்களை அடித்துத் துரத்தியது. இவை மிகப் பெரிய வரலாற்று சமூகவியல் விளைவுகள் என்பது முக்கியமானது. அம்பேத்கரின் வாழ்க்கை மாதிரியும் துணிவும் தலைமைத்துவமும் அமெரிக்காவுக்கு உயர் கல்விக்காக புறப்பட்டதுடன் தொடங்குவதாகவும் கருத முடியும். சுவாமி விவேகானந்தரின் சமூகவியல் சிந்தனைகள் அல்லது சர்வமத அரங்குக்காக அமெரிக்காவுக்கும் பிற நாடுகளுக்கும் பயணம் செய்தவற்றுடன் தொடங்குவதாகவும் கருத முடியும். பிராமணர் மற்றும் திராவிடர் பற்றிய இவர்களது சிந்தனைகளும் கருத்துக்களும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கன.

### கனேடிய முன்மாதிரி

உலகில் அகதிகளை விரும்பி ஏற்பதிலும் புலம்பெயர்ந்து வருபவர்களை ஊக்குவித்து உதவுவதிலும் கனடா முன்மாதிரியாயிருந்து வருகிறது. பன்மைக் கலாசாரம், தூய தனிமனித சுதந்திரம் பொதுத் துறைகளில் மத அடையாளங்களின்றி பணியாற்றுவது, அதி உயர் சுகாதார மற்றும் நலத்துறை வசதிகள் போன்றன புலம் பெயர்வதற்கு உரிய தூண்டுதல்களையும் நம்பிக்கைகளையும் ஏற்படுத்தி வருகின்றன.



இரண்டு ரில்லியன் (Trillion) டொலர் தேசிய உற்பத்தியையும் முப்பத்தியேழு மில்லியன் மக்களையும் கொண்டுள்ள கனடா வருடாந்தம் குடித்தொகையின் ஒரு சதவீதத்தினரை தமது நாட்டில் குடியேறுவதற்கு அனுமதி வழங்குகிறது. அவர்களில் 90 வீதமானோர் எளிமையாக குடியுரிமை பெற முடியும்.

இங்கு இந்தியர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டவர், சீனர், சிரிய நாட்டினர், அதிகம் புலம்பெயர்ந்து குடியேறியுள்ளனர்.

தொழில் பெறுதல், உயர்கல்வி கற்றல், சொத்துக்கள் வாங்குதல், வாழிடங்களை சுயவிருப்பத்தின்படி தீர்மானித்தல், திருமண உறவுகளில் பரிபூரண சுதந்திரம் பெறல், அதிகூடிய பாதுகாப்பை பெண்கள் அனுபவித்தல் என்பன ஆசிய மக்கள் புதிய சமூக பண்பாட்டு வாழ்வியலை வடிவமைக்க துணை நிற்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

ஆசிய நாடுகளின் குடிமக்கள் தலைமுறை தலைமுறையாக அனுபவித்து வருகின்ற சமூகவியல் ஒடுக்கு முறைகளிலிருந்து விடுதலை பெறுவதற்குரிய உலகளாவிய கதவைத் திறந்து விடுவதாக புலம்பெயர்தலைக் காண முடியும்.

குடியேற்றவாத காலத்தில் ஒப்பந்தக் கூலிக்காரர்களாக கூட்டம் கூட்டமாக மக்கள் பல நாடுகளுக்கும் புலம்பெயர்ந்ததும் உண்டு.

ஆனால் இருபதாம் நூற்றாண்டில் உலகமயமாதல் புதிய வகை புலம்பெயர்தலை ஊக்குவிக்கும் போது விளிம்பு நிலை மக்கள் தாமாக புதிய சமூக, வாழ்வியல், கட்டமைப்பை உருவாக்கி வளர்ச்சி பெறுவது புதிய உலக பண்பாட்டு ஒழுங்கமைப்பாக நோக்கப்பட வேண்டும்.

■

# நிலம் கொண்ட கடல்

அன்றொரு பின்னிரவில்
ஆவேசமாய் நிலம் நீண்டு
கடலைக் காவுகொண்டது

நிலக்காலில் நசியுண்ட
கணக்கில்லா உயிர்களின்
ஓலக்குரல்களை
நிலநீதியும் கைவிட்டுவிட
கடலின் மடியினில்
பொழுதுகள் கனத்தன

கடல் கதறி அழுதது
கடல் அலையெறிந்தது
கடல் ஆர்ப்பரித்து நுரைதள்ளி
அடங்காது ஒப்பாரிவைத்தது


இப்போது கடல்
அமைதியாகத் தூங்குகிறது

நிலம் ஆர்ப்பரிக்கிறது
நிலம் அலையாய் எழுகிறது
நிலம் அடங்காத ஓசையோடும்
அலையலையாய்த் தலைகளோடும்
அங்குமிங்கும் அசைகிறது


வரிசைகளில் அலைந்து
நிலம் நுரைதள்ளுகிறது

நிலம் கூத்தாடுகிறது
நிலம் குதூகலிக்கிறது
நிலம் கொண்டாடுகிறது
நிலம் கொஞ்சங் கோபமாக
குரலெடுத்துக் கூவுகிறது


இப்போது கடல்
அமைதியாகத் தூங்குகிறது



சடா











வங்கியை விட்டு வேகமாக வெளியே வந்தார் தனபாலன் விதானை. சட்டைப் பையினுள் கையை விட்டு, உள்ளே கிடந்த வங்கிப் புத்தகத்தை, அவசரமாக வெளியே எடுத்துப் பிரித்துப் பார்த்தார். அவரை அறியாமலேயே அவரது வாய் “எண்பத்தைந்து” என முணுமுணுத்துக் கொண்டது. பின்னர் ஏதோ சிதம்பர ரகசியம் வெளியாகி விட்டதைப் போன்ற உணர்வுடன் சுற்றும் முற்றும் பார்த்தார். தன்னை யாரும் கவனிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, மீண்டும் அதனை காற்சட்டைப் பையினுள் அமுக்கிவிட்டு, ஒரு குதூகலமான உணர்வுடன் தனது பழைய மோட்டார் வண்டியில் ஏறி ஓங்கி உதைத்தார். ஆரம்பத்தில் பிகு பண்ணி விட்டு, நான்காவது முயற்சிக்குப் பின்னர், உறுமியவாறு அவரைச் சுமந்து கொண்டு ஓடி மறைந்தது அந்த வண்டி.



மறு நாள் காலை. நேரம் பத்து முப்பது. கிராம சேவையாளர் அலுவலகம். ஏதோ பிஸியாக இருந்த விதானையார், மெதுவாக நிமிர்ந்து, தனக்கு முன்னால் இருந்தவர்களை, மண்டைக் கண்ணால், கம்பீர மீசையை தடவியவாறு நோட்டம் விட்டார். பின்னர் என்ன நினைத்தாரோ மீண்டும் குனிந்து எதையோ எழுதத் தொடங்கினார். மேசையின் மீது சில கோப்புகள், ஸ்டப்லர், பஞ்சர், ஸ்மார்ட்போன், காகிதாதிகள் என இத்தியாதி வகையறாக்கள் சிதறிக் கிடந்தன. இடையிடையே அவரது தொலைபேசி அலறுவதும் பின்னர் அடங்கிக் கிடப்பதுவுமாய் இருந்தது. அவர் ஒவ்வொரு முறையும் நிமிர்ந்து பார்க்கும் போதெல்லாம், சிலர் அடக்கத்துடன் ஒரு கும்பிடு போட்டார்கள். பெரும்பாலும் பரட்டைத் தலை முடியும் பழைய உடுப்புகளும் அவர்களின் வறுமையைப் புலப்படுத்தின. இன்னும் சிலர் மேட்டுக்குடி மனப்போக்குடன் தென்பட்டார்கள். அவர்களும் தமது பங்குக்கு, மெதுவாகப் புன்னகைத்து தமது இருப்பைக் காட்டிக் கொண்டார்கள். ஏதோ கடுமையான வேலையில் மூழ்கி இருந்த விதானை, பின்னர் நிமிர்ந்து பாராமலேயே “என்ன ரெட்டியார்” என்றார். உடனே ரெட்டியாரும் தனது தோளில் கிடந்த துண்டை எடுத்து கமக்கட்டுக்குள் வைத்துக் கொண்டு, “ஒன்னுமில்லீங்கையா முத்திரை எடுக்கலாமுன்னு வந்தேனுங்க” என்றான். “நேற்றோடு முத்திரை எல்லாம் கொடுத்து முடிஞ்சுது வராதவையளின்ர முத்திரை எல்லாம் திருப்பி அனுப்பியாச்சு. ஊரிலதானே இருக்கிறாய். இவ்வளவு நாளும் எங்க போனனீ” என்று எகிறினார் விதானையார். இதற்குமேல் பேசுவதற்கு ரெட்டிக்கு வார்த்தைகள் வரவில்லை. அவனை அறியாமலேயே கண்கள் குளமாகின. அதனை மறைப்பதற்காக கீழே குனிந்து கொண்டான் ரெட்டி.

ரெட்டியார் ஒரு கிட்னி வருத்தக் காரன் என்று விதானைக்கு நன்றாகவே தெரியும். நான்கு நாட்களாக வைத்தியசாலையில் இருந்து விட்டு, இன்று தான் துண்டு வெட்டிக்கொண்டு வீட்டுக்கு வந்திருந்தான். வந்தவன் வேறு எங்கும் செல்லாமல் முத்திரை எடுப்பதற்காக நேராக விதானையிடம் தான் வந்தான். பதினைந்து நாட்களுக்கு முன்பு தான் வறட்சி நிவாரணத்துக்கான சகாய வேலை நடந்தது. முதியவர்கள், தீராத வியாதியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, சகாய வேலையில் இருந்து விதிவிலக்கும் இருந்தது. ஆனாலும் வேலை செய்யாதவர்களுக்கு முத்திரை இல்லை என்று விதானை கூறியதோடு, ரெட்டியின் விடயத்தில் கொஞ்சம் கடுமையாகவும் நடந்து கொண்டார். இதனால் ரெட்டியும் கிட்னி வருத்தத்தோடு சகாய வேலை செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளானான். கடுமையான வெயில். எட்டு மணித்தியால வேலை. விளைவு ரெட்டியை வைத்தியசாலையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டது.

தனபாலன் விதானை வேலையில் சேர்ந்து பத்து வருடங்கள் ஓடி மறைந்துவிட்டன. அவரது குடும்பத்தில் அவர்தான் முதலாவது விதானை என்று இல்லை. அவரது தந்தையும் தாத்தாவும் வெள்ளைக்காரன் காலத்தில் விதானை வேலை பார்த்து விருது வாங்கியவர்கள். இதை அடிக்கடி சொல்லிக்கொள்வதில் தனபாலன் விதானைக்கு ஒரு பெருமிதம் இருக்கத்தான் செய்தது. அவர்கள் எல்லோரும் ஒரு குறுநில மன்னர்களைப் போலவே கிராமத்தை நிர்வகித்த அதிகாரிகள். குற்றவாளிகளை மிரட்டவும், அவர்களைப் பிடித்து விலங்கு போடவும், கூண்டுக்குள் அடைத்து வைக்கவும் அதிகாரம் பெற்றிருந்தவர்கள். இதனைவிட ஏவலாளர்கள், காவலாளர்கள் எடுபிடிகள் என ஒரு கூட்டம் சூழ்ந்து வர கிராமத்தை பவனி வந்தவர்கள். இவ்வாறு வருகின்ற போது நான்கு பேர் அவர்களைக் கண்டு குனிந்து கும்பிடு போடுவார்கள். சிலர் நெடுஞ்சாண்கிடக்கையாக விழுந்து கிடப்பதையும் கண்டு மனம் பூரித்து வாழ்ந்தவர்கள். தனபாலன் விதானை

தனபாலன் விதானை வேலைக்கு வந்து பத்து வருடங்கள் முடிந்து இருந்த போதிலும் இருபது வருட சிறை அனுபவம் அவரிடம் தெரிந்தது. விவரம் தெரிந்த காலத்தில் இருந்தே அவர் தந்தையின் தொழிலுக்கு உதவியாளராக இருந்து வந்திருக்கிறார்.

வேலைக்கு வந்த கெட்ட நேரம். அது போன்ற அதிகார போதை அனுபவிக்க அரசாங்கம் இடம் கொடுக்கவில்லை. அதை அனுபவிக்க அவரும் கொடுத்து வைக்கவில்லைத்தான். ஆனாலும் பரம்பரை விதானை என்ற கௌரவமும், வழி வழியாகக் கடத்தப்பட்டு அவருக்குப் பரிசாக கிடைத்த ஆஜானுபாகுவான தோற்றமும், முறுக்கேறிய மீசையும், மிடுக்கான நடையும், காண்பவர்களை கொஞ்சம் அஞ்சவும் தேவையின் நிமித்தம் அவரிடம் கெஞ்சவும் வைத்தது. அவரும் அந்த வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்டவர் போல, ஒரு முடிசூடா மன்னராகவே இதுவரை தன்னைக் கருதி வந்திருக்கிறார்.

ரெட்டியின் தந்தை ராமரெட்டி இந்திய வம்சாவளி வந்த மலையக பிரதேசத்தைச் சேர்ந்தவன். தனபாலன் விதானையின் தந்தை வீரகத்தி விதானையார் வீட்டில் முப்பது வருடங்களாக கணக்குப் பிள்ளையாக வேலை பார்த்தவன். தனது சொத்தில் சிறு பகுதியினை அவனுக்கு எழுதிக் கொடுக்கும் அளவுக்கு விசுவாசியாக வாழ்ந்தவன். வீரகத்தி விதானையும் தன் பெண்டாட்டிக்குப் பின்னர் நம்பிக்கைக்கும் விசுவாசத்திற்கும் உரியவனாக ராம ரெட்டியைத்தான் கருதி வந்தார். தனது மனைவி மங்கம்மாவுக்குத் தெரியாத வருமானம், கந்து வட்டி, கணக்கு வழக்கு, கொடுக்கல் வாங்கல், சின்ன வீடு சமாச்சாரம் முதற்கொண்டு எல்லாவற்றையும் தனது அந்தரங்கக் காரியதரிசி ராம ரெட்டியிடம்தான் போட்டு வைத்துக் கொள்வார். அவனும் எல்லா ரகசியங்களையும் புதைத்து வைத்த புதையலைப் போல தனக்குள்ளேயே பூட்டி வைத்து தனது விசுவாசத்தைக் காட்டியவன். விதானையார் இறந்து சில நாட்களின் பின் அந்த துயரம் தாங்காமல் தானும் இறந்து போனான்.

தனபாலன் விதானை வேலைக்கு வந்து பத்து வருடங்கள் முடிந்து இருந்த போதிலும் இருபது வருட சிறை அனுபவம் அவரிடம் தெரிந்தது. விவரம் தெரிந்த காலத்தில் இருந்தே அவர் தந்தையின் தொழிலுக்கு உதவியாளராக இருந்து வந்திருக்கிறார். அதனாலோ என்னவோ வேலை தொடர்பான சட்ட திட்டங்களையும் அதில் உள்ள சந்து பொந்துகளையும் நன்றாகவே தெரிந்து வைத்திருந்தார். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கும், எந்த கல்லெறிந்தால் எந்த மாங்காய் விழும் என்ற சங்கதி எல்லாம் அவருக்கு அத்துப்படி. கட்டப் பஞ்சாயத்தும் கந்து வட்டியும் அவருக்குக் கைவந்த கலை. கொஞ்சம் அரசியல் செல்வாக்கும் மேல்மட்ட ஆதரவும் அடாவடிப் போக்கும் ஆடம்பர வாழ்க்கையுமாய் இன்றுவரை அவர் ஒரு குறுநில மன்னரைப் போல காலத்தை ஓட்டி வந்து இருக்கிறார்.

ரெட்டி இன்னும் மௌனமாகத் தான் இருந்தான். கையறு நிலையில் இருந்த அவனுக்கு உலகமே ஒன்று சேர்ந்து சதி செய்வது போலத் தோன்றியது. எவ்வளவு முயன்றும் அவனால் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அது கட்டுப்பாட்டை மீறி மடை திறந்த வெள்ளமெனப் பெருக்கெடுத்திருந்தது. விதானையிடம் வந்து அவன் அவமானப்படுவது இது முதல் முறை அல்ல. ஒரு மாதத்திற்கு முன்னரும் கிட்னி வருத்த கொடுப்பனவுக்காக விண்ணப்பிக்க வந்து விதானையிடம் அவமானப்பட்டு போனான்.

உள்நாட்டுப் போரினால் இராஜ புரத்து மக்கள் பெட்டி படுக்கைகளுடன் இடம் பெயர்ந்து இருபது வருடங்கள் கடந்திருந்தது. இப்போது சமாதானம் நிலவத் தொடங்கியதால் தாம் பிறந்த மண்ணை நோக்கி மக்கள் மீளவும் சாரை சாரையாகப் படையெடுக்கத் தொடங்கி இருந்தனர். மேற்படி மக்களை குடியமர்த்துதல், காணி வழங்குதல், வீட்டுத்திட்டம், வாழ்வாதாரக் கொடுப்பனவு, மின் விநியோகம், பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பதிதல் என விதானையின் தலைக்குமேல் வேலைகள் குவிந்து கிடந்தன.

வைத்திய அத்தாட்சிப் பத்திரத்தைக் காட்டிய போதும் கூட, மேற்படி கொடுப்பனவை பெறுமளவுக்கு வருத்தம் சீரியஸாக இல்லை என்று போலிக் காரணம் காட்டி ரெட்டியை திருப்பி அனுப்பியதில் ஏதோ ஒரு உள்நோக்கம் இருக்கிறது என்பதை ரெட்டியும் உணராமல் இல்லை.

உள்நாட்டுப் போரினால் இராஜ புரத்து மக்கள் பெட்டி படுக்கைகளுடன் இடம் பெயர்ந்து இருபது வருடங்கள் கடந்திருந்தது. இப்போது சமாதானம் நிலவத் தொடங்கியதால் தாம் பிறந்த மண்ணை நோக்கி மக்கள் மீளவும் சாரை சாரையாகப் படையெடுக்கத் தொடங்கி இருந்தனர். மேற்படி மக்களை குடியமர்த்துதல், காணி வழங்குதல், வீட்டுத்திட்டம், வாழ்வாதாரக் கொடுப்பனவு, மின் விநியோகம், பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பதிதல் என விதானையின் தலைக்குமேல் வேலைகள் குவிந்து கிடந்தன. அந்தப் பகுதியில் முன்னர் வாழ்ந்த நான்கு குடும்பங்களுக்கான, எண்பது ஏக்கர் ஜப்பான் உறுதி காணிகள் இரத்து செய்யப்பட்டன. அவற்றை அரசுடைமையாக்கி துண்டு போடப்பட்டன. பின்னர் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு பங்கு போடப்பட்டன. இவை தொடர்பான அதிகாரம் முழுவதும் விதானையிடமே இருந்தது. தலா ஒவ்வொரு குடும்பத்திற்கும் அரை ஏக்கர் என பிரித்து ஒரு குடும்பத்திற்கு இருபத்தையாயிரம் ரூபா என நூற்று ஐம்பது குடும்பங்களிடம் இருந்து அவர் வாங்கிய இலஞ்சப் பணம் முப்பத்தைந்து இலட்சம் வரை எட்டியிருந்தது. இதனைவிட அரசினால் முதற்கட்டமாக விதானை மூலம் வழங்கப்பட்ட நூறு வீடுகளுக்கும் தலா முப்பதாயிரம் ரூபா மூலம் முப்பது இலட்சத்தை சம்பளத்துக்கு மேல் கிம்பளமாக பெற்றுக் கொண்ட மகிழ்ச்சியில் திளைத்துக் கிடந்தார் விதானையார். அத்தோடு வாழ்வாதாரக் கொடுப்பனவுகள், வெளிநாட்டில் உள்ளவர்களின் காணிப்பதிவுகள் காணிமாற்றங்கள் என்று கிடைத்ததில் இருபது இலட்சம் வரை தேறி இருந்தது. சும்மா மென்று கொண்டிருந்த வாய்க்கு அவல் கிடைத்த மகிழ்ச்சி அவருக்கு. தனது பதினைந்து வருட சேவைக்கால முடிவுக்குள் ஒரு கோடியை வைப்பிலிட வேண்டும் என்ற வெறியில் இருந்தவருக்கு எண்பத்து ஐந்து இலட்சத்தை வங்கியில் போட்டது ஒரு இமாலய சாதனைதான்.


தனது தந்தையைப் போலவே ரெட்டியும் தனபாலன் விதானையார் வீட்டில் இருபது வருடங்களாக மாடாக உழைத்து தனது விசுவாசத்தை நிரூபித்து இருக்கிறான். தனது கட்டிய மனைவியைக் கூட ரெட்டியின் பாதுகாப்பில் விட்டு விட்டு வெளியூர் சென்று வரும் அளவுக்கு அவரது விசுவாசமும், நம்பிக்கையும் எல்லையை தாண்டி இருந்தது. ஆனால் சமீபகாலமாக அந்த உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கி உள்ளதை ரெட்டியும் உணராமல் இல்லை.

விதானையார் மகனும் ரெட்டியின்

மகனும் ஒரே வகுப்பில் விஞ்ஞானப் பிரிவில் படித்தார்கள். ஒரு வருடத்திற்கு முன்னர் நடந்த உயர்தரப் பரீட்சையில் ரெட்டியின் மகன் மாவட்டத்தில் முதலாம் இடம் பெற்று மருத்துவப் படிப்புக்குத் தெரிவானான். விதானையின் மகன் பரீட்சையில் கோட்டை விட்டு வீட்டுக்குள் முடங்கிப் போனான். விதானைக்கு வெளியில் தலைகாட்ட முடியவில்லை. அவரைப் பொறுத்தவரையில் தனது மகன் கோட்டை விட்டதைக் காட்டிலும் ரெட்டியின் மகன் மருத்துவப் படிப்புக்கு தெரிவானதுதான் பெருத்த அவமானமாகப் பட்டது. அன்றிலிருந்து உள்ளத்தில் பொறாமைத் தீ கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. எனவே தான் தனது வீட்டுக்குப் பணிவிடை செய்ய வரும் ரெட்டியை ஒரு நண்பனைப் போல் அல்லாமல் உளவாளியைப் போல் பார்க்கத் தொடங்கினார். நாளடைவில் ரெட்டியுடனான நெடுங்காலத் தொடர்பை துண்டித்ததோடு அவனுக்கு வேலை கொடுப்பதையும் நிறுத்தி தனது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டார். ஆனாலும் ரெட்டி மீது இருந்த வெறி அடங்கியதாகத் தெரியவில்லை. இதன் உச்சகட்டமாகத் தனது தந்தை ரெட்டியின் தந்தைக்கு கொடுத்திருந்த காணிப் பத்திரத்தை தனது பெயருக்கு மாற்றியதோடு, காணி இல்லாதவருக்கு வீடு இல்லை என்று என்று கூறி, ரெட்டிக்கு கிடைக்க இருந்த 10 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டையும் இரத்துச் செய்து விட்டார். இந்த செய்தியை கேட்ட ரெட்டியின் மனைவி படுத்த படுக்கையாகி மாரடைப்பால் இறந்த செய்தி கேட்டும், விதானையின் கோபம் அடங்கியதாகத் தெரியவில்லை. இதன் வெளிப்பாடாகத்தான் இன்று ரெட்டி நியாயமாகத் தனது கிட்னி வருத்தத்துக்குக் கிடைக்கவேண்டிய மாதாந்த உதவிப்பணம் ஐயாயிரம் ரூபாவை இழந்து, படிப்படியாக வறட்சி நிவாரண முத்திரையையும் இழந்துவிடும் ஆபத்தான நிலையில் வந்து நிற்கின்றான்.

பங்குனி வெயில் சுட்டெரித்துக் கொண்டிருந்தது. மனித வெக்கை அதனையும் தோற்கடித்து விடுமளவிற்குத் தகித்துக் கொண்டு கிடந்தது. கிராம சேவையாளர் அலுவலகம் மக்கள் வெள்ளத்தால் மூழ்கிக் கிடந்தது. வீட்டுத் திட்டத்திற்காகவும், வறட்சி நிவாரண முத்திரை எடுப்பதற்காகவும் வந்த கூட்டம் தான் அது. ரெட்டி இன்னும் அங்கே தான் இருந்தான். கோபம், அவமானம் எல்லாம் மாறி மாறி அவனை ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தன. வீட்டுக்குத் திரும்புவோமா? அல்லது கொஞ்சம் பொறுத்திருந்து பார்ப்போமா? என இரு வேறுபட்ட மனநிலைக்குள் சிக்கித் தவித்துக் கொண்டிருந்தான் அவன். கடைசி நேரத்திலாவது விதானையின் கடைக்கண் பார்வை கிடைக்காதா? என்ற நப்பாசை அவனை மேலும் பொறுமை காக்கும்படி எச்சரித்துக் கொண்டு இருந்தது. நேரம் மதியம் 12.45 நெருங்கியிருந்தது. சூரியன் உக்கிர தாண்டவம் ஆடிக் கொண்டிருந்தான். அலுவலகத்துக்கு வெளியே கண்ணுக்கெட்டிய தூரம் வரை சன நடமாட்டத்தைக் காணமுடியவில்லை. எங்கேயோ தொலைவில் புள்ளியாய் தோன்றி காற்றைக் கிழித்துக் கொண்டு, மின்னல் வேகத்தில் பாய்ந்து வந்து நின்றது அந்தக் கரும் பச்சை நிறம் கொண்ட ஜீப் வண்டி. அதிலிருந்து சுமார் எட்டுப் பேர் வரை இறங்கினார்கள். பின்னர் விதானையை நோக்கி வேகமாக வந்தார்கள். விதானையின் முகத்தில் கலவரம் தெரிந்தது. வந்தவர்கள் “நாங்கள்இலஞ்சக் குற்றத் தடுப்பு இலாகாவை சேர்ந்தவர்கள் “ என்றார்கள். தமது அடையாள அட்டையைக் காட்டியவர்கள். “இலஞ்சம் வாங்கிய குற்றத்துக்காக உங்களை கைது செய்கிறோம் வீடியோ ஆதாரம் எங்களிடம் இருக்கிறது என்றார்கள்” பின் பதிலுக்கு காத்திராமல் விதானையின் கையில் விலங்கை மாட்டினார்கள். எங்கும் நிசப்தம் நிலவியது. இப்போது ரெட்டி மெதுவாக தனது முகத்தை நிமிர்த்தினான். அவன் பார்வையில் ஆயிரம் கேள்விகள் தெரிந்தன. அதன் அர்த்தங்களைப் புரிந்துகொள்ள விதானைக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

■



# ஈழசினிமாவும் அதன் தேவையும்



**மதி சுதா**

**நடிகர், திரைப்பட நெறியாளர்**

உலகில் படைக்கப்பட்ட அனைத்தும் தனது இருப்பையும் உரிமையையும் நிலைநிறுத்த போராடிக் கொண்டே தான் இருக்கும் ,இருக்க வேண்டும். அதற்குத் தயாரில்லாத ஒன்று தனக்கான சான்றை மட்டுமல்ல தன்னையே இழந்துவிடும்.

தனக்கு என்றான தன் நிலத்தை வரையறுத்துப் போராடிய எமது இனம் பல்வேறு நாடுகளில் தன் இருப்பை நிலைப்படுத்திக் கொண்டாலும் தனது எதிர் வரும் சந்ததிக்குத் தன்னைக் கடத்துவது போதாமை என்ற நிலை உருவாகி வருகின்றது.

ஈழத்தமிழன் என்ற இனம் தன் தாய் மண் வேண்டி 3 தசாப்தம் போராடியது என்ற வரலாறு உலகழியும் வரை இருக்கும் என்பது உறுதியானது. ஆனால் எமது இனம் தனது வாழ்க்கை, கலை, பண்பாட்டைத் தன் சந்ததிக்குக் கடத்தியதா? என்ற கேள்வியை ஒரு அந்நிய மொழிக்காரன் கேட்டால் நாம் என்ன பதிலை சொல்லப் போகின்றோம் ?

எம்மிடம் இருந்த கலை, பண்பாட்டு விடயங்கள் அனைத்தும் சந்ததி ,சந்ததியாகக்கடத்தப்பட வேண்டியவையாகும். இந்தப் பத்தியை வரையும் நான் ஒரு முழு நேர சினிமாக்காரனாக இருப்பதால் மேற்குறிப்பிட்ட விடயங்களைச் சினிமாவுக்காகப் பேச விழைகின்றேன்.

நிகழ்காலத்தில் புதிய சந்ததியினரில் பெரும்பாலானவர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் தாய், தந்தையர் மட்டுமே ஈழத் தமிழர்களாக இருந்தாலும் தம் குழந்தைகளின் பேச்சு, நடை, உடை, பாவனை அனைத்தையும் தமிழகத்திற்கு தத்துக் கொடுத்து விட்டோம்.


நம் வரலாறை ஆயுதத்தால் எழுதிய காலம் முடிந்துவிட்டது. இனி பேனையால் மட்டும் எழுதிக் கொண்டிருக்க முடியாது. கேமராவாலும் எழுதலாம் என்பதே என் தீர்க்கமான நம்பிக்கையாகும்.



எம் பேச்சு மொழி ,வாழ்வியல் பண்பாடு அனைத்தையும் கேமராவால் எழுதி அந்நிய மொழிக்காரனுக்குக் கடத்த வேண்டும். இந்த டிஜிட்டல் யுகத்தில் கேமரா என்பது மிகப்பெரும் ஆயுதமாகும். இவ் ஆயுதத்தைப் போராட்டக் காலத்திலேயே நாம் பயன்படுத்தி வெளியிட்டிருந்தாலும் இன்னும் அதன் பெறுமதி பலருக்குத் தெரியாமலேயே உள்ளது.

சினிமாவை வெறும் ஜனரஞ்சக ஊடகமாகப் பார்க்கும் மனநிலையில் இருந்து நம்மில் பலர் வெளியே வரவேண்டும். இன்று பல நாடுகள் சினிமாவை தமது அடையாளமாகவே











பார்க்கின்றது. ஒரு விளையாட்டு தனது நாட்டை சர்வதேச அரங்கில் எந்த அளவுக்கு பிரதிநிதித்துவப்படுத்துகின்றதோ அதேபோலத்தான் சினிமாவும்,அது இயங்கும் நாட்டை பிரதிநிதித்துவப் படுத்துகின்றது.

உடனே ஒரு கேள்வி எழலாம் எமது சினிமாவை ஈழ சினிமா எனக் கூறிக்கொள்ளும் நாம் அது ஒட்டுமொத்த இலங்கையையும் பிரதிநிதித்துவப்படுத்தப் போகின்றதா ?

நியாயமான கேள்விதான்.ஆனால் சர்வதேச அரங்கில் எமது படம் தமிழ் மொழி பேசிக்கொண்டு ஆங்கில உப தலைப்புடன் திரையிடப்படும் போது அங்கு அடையாளப்படுத்தப்படப் போவது எமது மொழி தானே.ஒரு நாடு சிறுபான்மை இனமாகக் கருதும் ஒரு சமூகத்தின் படம் சர்வதேச அரங்கில் பேசப்படும்போது அப்படைப்பானது நமக்கான அடையாளத்தையும் அங்கீகாரத்தையும் எந்தளவு வலிமையாக பெற்றுத் தரப் போகின்றது.



நான் ஜனரஞ்சக சினிமாக்களைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்தை முன் வைக்கவில்லை. அதை ரசித்துக் கொண்டு தமக்கான அடையாளங்களையும் தேட வேண்டும், அதற்கும் நேரம் செலவழிக்க வேண்டும். உதாரணத்திற்கு கேரள தேசத்தின் மலையாள மக்களை எடுத்துக் கொள்வோம் . அத்தேசத்தில் அதிக வசூலை அள்ளுவது தென்னிந்தியப் பெருநட்சத்திரப் பட்டாளங்களின் படங்களே ஆனால் திரைப்படத்திற்கு அவ்வளவு பணம் கொடுத்துப் பார்க்கும் மக்கள் தமது வாழ்வியல் பேசும் படங்களை தோற்க விடுவதில்லை காரணம் சர்வதேசத்தில் கேரளத்துக்குரிய அடையாளத்தைக் கொடுப்பது மலையாளப் படங்கள் தான்.

இதே எமது இனத்தை எடுத்துக் கொள்ளுங்கள். எமது மொழி பேசும் திரைப்படங்களை எடுத்தாலும் தென்னிந்திய தமிழ் பேசும் படங்களாக எடுங்கள் என்று கட்டாயப்படுத்துகின்றனர் ஐந்தாறு தரம் அத்திரைப்படங்களைப் பார்ப்பவர்கள் நமது படங்களைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை.

தயாரிப்பாளர்கள் என்ற பெயரில் கோடி கோடியாக இறைத்து நட்டப்படும் ஒருவர் கூட இங்கு 10 லட்சம் ரூபாய் இடக்கூடத் தயாரில்லை தமிழகத்தில் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்படும் ஒரு திரைப்படத்தை நிலத்தில் 50 லட்சத்தில் செய்து முடிக்க முடியும் என்பது உங்களில் எத்தனை பேருக்கு தெரியும் ?

சினிமா என்பதும் எமது இனத்தின் ஒரு ஆயுதம் தான் அதன் மூலம் நம் இனத்தை உலக அரங்கில் அடையாளப்படுத்த முடியும் போராடுவோம் வாருங்கள்

■

# பாட்டனின்
# அடத் தடங்களற்ற
# வரைபடம்




**சண்முகம் சிவகுமார்**

காதலுற்ற குவேனி நூற்ற
நூல் சிக்குபட்டு
அறுந்து போன காலத்திலும்
தேசத்திற்கொரு வரைபடம் இருந்தது,
அது அடர்ந்த வனாந்தரமாய் இருந்தது.

என் பாட்டன் வந்திறங்கிய போது
அவரைக் கண்டு காதல் கொள்ள
குவேனி இங்கு இல்லை,
தேசத்தின் வரைபடம்
அதே அடர்ந்த வனாந்தரமாகவே
இருந்தது.

எனது பாடப்புத்தகத்தில் அச்சாகி
இருந்த
தேசத்திற்கு பாதைகள் இருந்தன,
பாலங்கள் இருந்தன,
பயிர்கள் இருந்தன,
மாபெரும் கட்டிடங்கள் இருந்தன.





நவீன குவேனிகள் தனது
வெள்ளைக்காரக் காதலர்களோடு
இன்புற்றிருந்தனர்,

மண்படாத தேசப்பற்றாளர்கள்
அதிகாரத்தைச் சீனி மிட்டாயாய்
சட்டைப் பைக்குள் திணித்துக் கொண்டனர்,

ஒளியால் நிரம்பிய தலைநகரில்
தின்று குடித்து முயங்கி பிள்ளை பெற்று,
தேசத்தைக் குடும்ப சொத்தாக்கி கொண்டனர்.

பின்,
புதிய தேச வரைபடத்தை
மாற்றி மாற்றி பிய்த்து தின்று முடித்தனர்.

தன் உதிரம் தொட்டு
உழைப்பின் தூரிகையால்
வரைந்த தேசத்தின் வரைபடத்தில்
பாட்டனின் அடித்தடங்கள் மட்டும்
இன்றும் காணவில்லை

ஏன் எனும்
காரணம் புரிந்தோர்...
அறிவைக் கொழுத்தி,
இந்த வனாந்தரத்தில் வைத்துவிடுங்கள்...

எல்லாம் பற்றியெரியட்டும்...
நம் பாட்டனின் பாதை தெரியட்டும்...

# சொல்லிழை 2

## போட்டி இல-

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 3 | | | 6 | 7 | |
| | 10 | 11 | | 13 | | | ■ |
| 17 | | 19 | | | | 23 | 24 |
| | | | ■ | 29 | 30 | | |
| 33 | | | | 37 | | | 40 |
| 41 | 42 | | | | | 47 | |
| ■ | 50 | | | | | | |
| 57 | 58 | | | | 62 | | |

இடமிருந்து வலம்

1.சிதம்பரத்துக்கு இப்படி ஒரு பெயரும் உண்டு. (எட்டெழுத்துச் சொல் )

10. பொழுதுபோக்க இதைச்செய்யலாம் . உடல் நலமும் உண்டாகும். (ஐந்தெழுத்துச் சொல் )

17. இதை மூட்டி விடலாம் (இரண்டெழுத்துச் சொல் )

19. பத்தையும் பறக்க வைப்பது (இரண்டெழுத்துச் சொல் )

23. தூக்கி (இரண்டெழுத்துச் சொல் )

29. இவையிரண்டும் இல்லையெனில் இயங்குவதே கடினம் (மூன்றெழுத்துச் சொல் )

33.இலங்கையின் தமிழ் மாவட்டங்களில் ஒன்று (எட்டெழுத்துச் சொல் )

42.தனித்திருத்தல் (மூன்றெழுத்துச் சொல் )

47.சாப்பிடு(இரண்டெழுத்துச் சொல் )

50 எந்த ஊர்வலத்திலும் இவற்றைக்காணலாம் (மூன்றெழுத்துச் சொல் )

57.இரந்து கேட்பதை இப்படியும் சொல்லாம் (இரண்டெழுத்துச் சொல் )

58.இது இல்லாத மலை இல்லை (நான்கெழுத்துச் சொல் )

62.நறுமணம் வீசும் மலர்களில் ஒன்று (மூன்றெழுத்துச் சொல் )

வெல்லுங்கள்

ரூபா

5000.00

மேலிருந்து கீழ்

1.உலகப்புகழ் பெற்ற இலங்கைத்துறைமுகம் (ஐந்தெழுத்துச் சொல் )

3.புகழ்பெற்ற காதல் ஜோடிகளில் ஒருவர் (இரண்டெழுத்துச் சொல் )

6.இதன் ஒலிக்கே சோதிடம் உள்ளது. (மூன்றெழுத்துச் சொல் )

7.இலங்கையின் சிங்களப்பெயரில் ஒரு பகுதி (மூன்றெழுத்துச் சொல் )

10.வாய்வைப்போக்கும் இயற்கையின் கொடை (மூன்றெழுத்துச் சொல் )

11.இது வரவில்லையெனில் வியாபாரத்தை நிறுத்துவதே மேல் (மூன்றெழுத்துச் சொல் )

13.மிக நெருங்கிய பெண் உறவு(மூன்றெழுத்துச் சொல் )

24.காலம் காட்டி நிற்கும் சொல் (இரண்டெழுத்துச் சொல் )

30.எந்தப்படைப்பாளிக்கும் இது கிடைக்க வேண்டும் (மூன்றெழுத்துச் சொல் )

37.தங்கம் எனப் பொருள் தரும் ஒரு பெண் பெயர் (நான்கெழுத்துச் சொல் )

40.இரண்டாயிரம் ஆண்டுகளாய்த் தமிழர் பாடிய ஒரு மரம் (மூன்றெழுத்துச் சொல் )

42.முனிவனின் இன்னொரு பெயர் (மூன்றெழுத்துச் சொல் )

47.இலங்கையில் தொடர்ந்து போராட்டம் நடக்கும் இடத்தின் பிற்பகுதி (மூன்றெழுத்துச் சொல் )

சொல்லிழை போட்டியில் வெற்றிபெறும் அதிர்ஷடசாலிக்கு 5000 ரூபா பரிசு வழங்கப்படும். அடுத்த வெற்றியாளர்கள் இருவரின் பெயர், விபரங்கள் இங்கே பிரசுரிக்கப்படும்.

சரியான பதில்களை sollilai@ullamm. Com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் பெயர், தொலைபேசி இலக்கம், முகவரி, புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் விபரங்களுடன் அனுப்பி வையுங்கள்.

# சொல்லிழை ஒன்றிற்கான விடைகள்

இடமிருந்து வலம்

1. சேதனப்பசளை
6. வாட்ஸ்
8. வையாபுரி
10. சிலம்பு - ஒரு சொல் குறைந்துள்ளது
13. காதி
15. அம்சவர்த்தினி
16. தாம்பத்தியம் - குழம்பியுள்ளது

மேலிருந்து கீழ்

1. சேவாக் 2. தட்பவெப்பம்
3. வீனஸ்- குழம்பியுள்ளது
4. பறவை 5. சன்யாசி
7 இனியபுத்திரி - குழம்பியுள்ளது
9. வன்சினம் - குழம்பியுள்ளது
12.சூர்தார்- குழம்பியுள்ளது
15 .அணி

## சொல்லிழை போட்டி இல 01 வெற்றி பெற்றோர்

## முதலாம் பரிசான 5000 ரூபாவினைத் தட்டிச்செல்லும் அதிர்ஷ்டசாலி

மலர்விழி செல்வராஜா
செங்கலடி, மட்டக்களப்பு

சரியான விடைகளைத்
தந்த மற்ற இருவர்

தேனுகா ராமசாமி
நாவலப்பிட்டி

சுலோச்சன் கெங்காதரன்
கொக்குவில்







## OFFICE FEATURES

- Broadband
- Contemporary design
- Furnished
- Network
- Reception
- Meeting Rooms
- Virtual Offices
- Tea and coffee making facilities

Call Satkin on: 07766562557
now for booking or viewing

SATKIN'S
THE BUSINESS HUB

# காசு... பணம்...

# money-Matt





**ரகுராஜ்**

**நிதித்துறை நிபுணர்**

*எமது பணம் உண்மையில் பாதுகாப்பாக இருப்பது எங்கே?*

*தங்கத்தின் விலை வரலாறு இதுவரை காணாத உச்சத்தை எட்டுமா?*

### அறிமுகம்

கடந்த இதழில் இலங்கை ரூபாவின் ஏற்றத் தாழ்வுகள் பற்றிய விளக்கங்களை தந்து இருந்தோம். இந்த இதழில் வரைபடங்கள் உதவியுடன் தங்கத்தின் விலை ஏற்றத் தாழ்வுகளை வங்கி நிறுவனங்கள் எவ்வாறு முன்கூட்டியே கணக்கிடுகின்றன என்பதனைப் பற்றி ஆராய்ந்து பார்ப்போம்.

### தங்கத்தின் விலை மாற்றங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்

மற்றைய விலைமதிப்புள்ள பொருட்களைப் போன்று தங்கத்தின் விலை ஏற்றத் தாழ்வுகளுக்கும் அதனுடைய தேவை மற்றும் வழங்கல் (demand and supply) முக்கிய காரணங்களாக இருக்கின்றது. அதுமட்டுமன்றி மத்திய வங்கிகளின் கொள்கைகள், பணவீக்கம், நாட்டு வட்டி வீதங்கள், ஊகங்கள் போன்ற காரணங்களையும் கூற முடியும்.

தட்டு...


ters?

பல முதலீட்டாளர்கள் உதாரணமாக அமெரிக்க மத்திய வங்கி வட்டி வீதத்தை அதிகரித்தால் (கடந்த சில மாதங்களாக நடப்பது போல்) அது தங்கத்தின் விலையை குறைவடையச் செய்யும் எனக் கருதுகின்றார்கள். ஆனால் கடந்த கால

| வட்டி வீத அதிகரிப்பு காலம் | தங்க விலை அதிகரிப்பு |
|---|---|
| 1993—1994 | 24% |
| 1998—1999 | 28% |
| 2004 | 21% |
| 2015—2016 | 26% |


வரலாற்றை உன்னிப்பாகப் பார்த்தால் அது எதிர்மாறான முடிவுகளையே தருகின்றது. அதாவது வட்டி வீத அதிகரிப்பின் பின்னர் தங்கத்தின் விலையிலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

**தங்கத்தின் கடந்த 15 வருட கால விலை வரலாறு**




தங்கத்தின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஊகமும் (Speculation) ஒரு காரணமாக இருப்பதை பலர் அறியாமல் இருந்திருக்கலாம். வங்கிகளும் அரசாங்கமும் அடுத்ததாக என்ன நடவடிக்கையை செய்வதற்கு தயார்ப்படுகின்றார்கள் என்பதனை முன்கூட்டியே ஊகித்து தங்கத்தை முதலீட்டாளர்கள் கொள்வனவு செய்யும் பொழுது தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படலாம்.

தங்கத்திற்கான தேவை என்பது பெரும்பாலும் நகைகள் கொள்வனவு மற்றும் தங்கத்தை ஒரு முதலீட்டு அடிப்படையில் வாங்குவதனாலும் தூண்டப்படுகின்றது. கடைசியாக கிடைக்கப் பெற்ற தகவல்களின்படி தங்கத்தின் கொள்வனவில் 50வீதம் முதலீட்டாளர்கள் தங்கத்தை கட்டிகளாக (Gold coin bar) மற்றும் E.T.F (Exchange Traded Fund) ஆக முதலீடாக வாங்குவதாலும் 30 வீதம் இந்தியா, சீனா போன்ற நாட்டு மக்கள் நகைகளாக கொள்வனவு செய்வதனாலும் ஏற்படுகின்றது.




2009ம் ஆண்டு ஆரம்பத்தில் $900 டொலராக இருந்த தங்கத்தின் விலையானது அடுத்த 36 மாதத்திற்குள் அதாவது ஆவணி 2011ம் ஆண்டு அதி உயர்ந்த விலையான $1925 டொலரை அடைந்தது. அதன் பின்னர் தொடர்ச்சியாக வீழ்ச்சி அடைந்த தங்கத்தின் விலையானது ஆவணி 2018ம் ஆண்டு $1150 ஆக குறைவடைந்து பின்னர் அதிகரித்து தற்பொழுது $1850 டொலராக நிர்ணயிக்கப்பட்டுள்ளதை கீழ்வரும் வரைபடம் மூலம் அவதானிக்க முடியும்.

எதிர்காலத்தில் அதாவது அடுத்த 12 மாதத்திற்குள் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்படும் என்பதனை பின்வரும் காரணங்களை அடிப்படையாக கொண்டு கூற முடியும்.

தற்பொழுது நிலவும் பொருளாதார நிச்சயமற்ற காலங்களில் பல முதலீட்டாளர்கள் ஆபத்து குறைந்த முதலீட்டு வழிகளை தேடுவதனாலும், 2008ம் ஆண்டு ஏற்பட்ட கடன் நெருக்கடி, நிதி நெருக்கடிகளைத் தொடர்ந்து முதலீட்டாளர்களுக்கு வங்கி முறைமைகள் மீதான நம்பிக்கை சரி செய்ய முடியாத அளவிற்கு சேதமடைந்துள்ளதாலும் உலகின் பொருளாதாரம் கொவிட் தொற்று நோய் வெடித்ததால் பல அதிர்ச்சியை சந்தித்து இருப்பினும் அளவிற்கு அதிகமான பண அச்சிடும் அரசின் கொள்கைகள் பங்குச் சந்தை வீழ்ச்சியை ஒரு குறுகிய காலத்திற்கு காப்பாற்றி இருந்தாலும் எதிர்வரும் ஆண்டுகளில் அது பணவீக்கத்தை இன்னமும் அதிகரிக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதனால் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்பட அதிகளவு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

அரசாங்கங்கள் தொடர்ச்சியாக தங்களது கடன் தொகைகளை வருடா வருடம் அதிகரித்து வருகின்றன. இந்த மாதிரியான நிகழ்வுகள் நீண்ட நாட்களுக்கு தாக்குப் பிடிக்க இயலாத ஒரு செயலாகும். கீழே உள்ள வரைபடமானது 40 வருட கால அரசாங்க கடனுக்கும் தங்கத்திற்கும் இடையில் இருக்கும் விகிதத்தை குறிப்பிட்டு காண்பிக்கின்றது. தற்பொழுது காணப்படும் மிகவும் குறைந்தளவு வீதம் இதற்கு முன்னைய உயர்ந்த விலைச் சந்தை (Bull Market) ஏற்படுவதற்கு முன் இருந்ததுபோல இருப்பதால் அடுத்த சில வருடங்களில் தங்கத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தங்கத்தின் விலையில் ஏற்பட இருக்கும் அதிகரிப்பை எந்தக்காரணி தடுக்கலாம்?


தங்கத்தின் விலை பொதுவாக அமெரிக்க டொலர்களில் குறிப்பிடப்படுகின்றது. எனவே தங்கத்தின் விலைக்கும் டொலருக்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதினால் டொலரின் மதிப்பில் உயர்வு ஏற்படும் பொழுது தங்கத்தின் விலையில் குறைவை ஏற்படுத்தினாலும் தங்கத்தின் விலை உயர்விற்கு நாம் முன்னே கூறியது போல் மற்றைய பல காரணங்களும் ஏதுவாக இருப்பதனால் டொலர் மதிப்பு உயர்வு என்பது ஒவ்வொரு தடவையும் தங்கத்தின் விலை உயர்வை தடுப்பதில்லை.

## முடிவுரை

மேலே உள்ள தங்கத்தின் 15 வருட கடந்த கால வரைபட வரலாற்றை பார்த்தால் 2009ம் ஆண்டில் ஏற்பட்ட உயர்ந்த விலை சந்தை (Bull Market) தங்கத்தின் விலையை இரட்டிப்பாக அதாவது $900 இல் இருந்து $1900 ஆக அதிகரித்தது போல் 2019இல் ஏற்பட்டு இருக்கும் உயர்ந்த விலைச் சந்தை தங்கத்தின் விலையை ஆகக் குறைந்தது $2200 வரை அதிகரிக்கும் எனக் கருதப்படுகின்றது.

தங்கத்தை சேமிப்பாக வைத்திருப்பது தற்பொழுது தென்படும் அரசியல் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற காலத்திற்கு ஒரு காப்பீடாக (Ultimate Insurance for turbu—lent time) இருக்கக் கூடியது. பல நூற்றாண்டுகளாக மக்கள் கேட்டு வரும் ஒரு பழைய கேள்வி எங்கே எனது பணத்தை பாதுகாப்பாக முதலீடு செய்யலாம் என்பது தான். மக்கள் இப்பொழுது பழமையான பதிலைத்தான் தேர்ந்து எடுக்கின்றார்கள் அதற்கான விடை “தங்கம்” என்பது எனது கணிப்பு.

■



# பறக்கப் பிறந்த சிறுமி



கவிதா லட்சுமி

உடல் முழுதும் இறக்கைகளோடு
முதலாம் நூற்றாண்டின் சிற்பிகள்
வசிக்கும்
நகரத்திற்குள் அவள்
பிரவேசித்தாள்




அவளது ஆக்கும் திறனோடு மோதி
பெருமதில்கள் உடைந்தன
ஆங்காங்கே நின்ற விருட்ச
மரங்களின்
கிளைகளோடும்
இலைகளோடும் அவள் பாடினாள்
நட்சத்திரங்களை சலங்கையாக்கி
சிறுமி ஆடிக்கொண்டிருந்த பொழுதில்
சிற்பிகள் வந்தார்கள்

சிறுமியின் ஆற்றலிலும், ஆடலிலும்
வனப்பிலும் அவளை தம் பெண்தெய்வங்கள்
வீற்றிருந்த கோவில்களில்
வாஞ்சையோடு மீண்டும் சிற்பம் வடிக்கத் தொடங்கினர்

பெரும் பாறைகளின்று பெயர்த்து
தன்னிலிருந்த துகள்களைத் தட்டியபடி


உங்கள் உளியை என்னிடம் தருவீர்களானால்
எனது ஆற்றலையும் சிந்தனையையும் நான் தருகிறேன்
என அவள் பேசத்தொடங்கினாள்

# அட்டை முனைக் கீறல்கள்



**நிலா மதிவண்ணன்**

Toronto வில் வசிக்கும் எட்டாம் வகுப்புக் கல்லூரி மாணவியான நிலா மதிவண்ணன் தனது மூன்றாவது வயதிலேயே வரைதலைத் தொடங்கியவர். அண்மையில் Toronto வில் நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் வைக்கப்பட்டிருந்த நிலாவின் ஓவியங்களைக் கண்ட இலக்கியத்துறையைச் சார்ந்த பலரும் அவற்றைப் பார்த்துப் பிரமிப்பு அடைந்ததோடு நிலாவைப் பாராட்டியும்,வாழ்த்தியும் சென்றமை குறிப்பிடத்தக்கது.கட்டிடக் கலைஞராக வேண்டுமென்பது இவரது கனவு. அகராவின் கவிதைகளுக்கான ஓவியங்கள் நிலாவினுடையவை என்பதும் ,முதல் முதலாக உள்ளம் சஞ்சிகையில் இவரது ஓவியங்கள் வெளி வருவதும் குறிப்பிடத்தக்கவை.




**அகரா**

Toronto வின் Henry Hudson Public School ன் ஏழாம் ஆண்டு மாணவியான அகரா 'Tug A War' என்ற தனது கவிதைப் புத்தகம் ஒன்றினை 2021 ல் வெளியிட்டிருந்தார்.இவரது கல்லூரியின் gallery யில் இவரது கவிதைகள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அகராவின் கவிதை புத்தகத்தை விட சஞ்சிகை ஒன்றில் இவரது கவிதை முதல் முதலில் உள்ளத்தின் இந்த இதழில் வருவது குறிப்பிடத்தக்கது.




**கயாழினி தேவராஜன்**

முல்லைத்தீவின் தர்மபுரம் மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவி கயாழினி .கடந்த இதழில் இருந்து உள்ளம் சஞ்சிகையில் இருந்து இவரது ஓவியங்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த இதழின் விழித்தெழும் மனிதம் கவிதைக்கான ஓவியம் இவருடையது.





**அகமது ஃபைசல்**



# சிறுவர் கதை







“இன்று ஞாயிற்றுக் கிழமை” என்றால் பிலாலி நம்புவதாக இல்லை. யார் சொல்லியும் நம்ப மறுத்தான். வீட்டில் இருந்த உம்மா, ராத்தா எல்லோருமாகச் சொல்லிப் பார்த்தார்கள். அப்போதும் அவன் நம்ப மறுத்தான். ஏன் தெரியுமா? சென்ற ஞாயிறு,அவன் காலையில் எழுந்து முற்றத்திற்கு வந்து கண்ட அந்த அதிசயம் இந்த ஞாயிறு நிகழவில்லையே என்ற கோபம்தான் அவனை இன்று ஞாயிற்றுக் கிழமை என்பதை நம்ப மறுத்தது. பூச் செடிகள், மற்றும் கண்களில் படுகின்ற மரங்கள், கொடிகள் அனைத்தினதும் இலைகள் அன்று நல்ல நீல நிறமாக மாறியிருந்ததைக் கண்டான். ஆனால் இன்று அப்படி எதுவும் மாறவில்லை. அனைத்து மர இலைகளும் வழமை போன்று பச்சை நிறமாகவே இருந்தன. பிலாலி கோபம் தீராமல் வாசலில் வந்து நின்றான். மர இலைகளை திரும்பத் திரும்ப உற்றுப் பார்த்தான். அவைகள் பச்சையாகவே இருந்தன.

பிலாலி வசிக்கும் ஊரின் பெயரை நீங்கள் கேட்டால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள். பன்னிரெண்டு மாதங்களில் ஆறாவது மாதத்தின் பெயர்தான் பிலாலி வசிக்கும் ஊரின் பெயர். பிலாலியின் ஊரிலுள்ள வீதிகளுக்கு, வாரத்தில் இருக்கும் ஏழு நாட்களின் பெயர்களை ஒவ்வொன்றாக வைத்துள்ளார்கள். சனிக்கிழமை வீதி, திங்கட்கிழமை வீதி என்றும் மற்றொரு வீதிக்கு திங்கட்கிழமை 2வது வீதி எனவும் வரும் . அந்த வீதிகள் மிக விசாலமாகவும் அழகாகவும் இருந்தன. பிலாலியின் வீட்டுக்குப் போகும் வீதி வியாழக்கிழமை வீதி என்ற பெயரில் இருந்தது. அந்த வீதியோரக் கடைக்காரரின் மகனுக்கும் இவனைப்போல் பதினொரு வயதுதான். இவர்கள் இருவரும் இணைந்தே எப்போதும் விளையாடுவார்கள்.

“வாடா, கடற்கரைக்குப்போய் வருவோம்” என்றான் பிலாலி. அதற்கு அவனும் தாமதமே இல்லாமல் தலையை ஆட்டிக்கொண்டு கடற்கரை நோக்கி வேகமாகச் சென்றான்.

அப்போது கடல் பார்ப்பதற்கு எங்கிலும் நீல நிறமாக இருந்தது. கடற்கரை ஓரமாகக் கிடந்த வெறும் தண்ணீர்ப் போத்தலை எடுத்து பிலாலி கடலில் வீசினான். அப்போதுதான் கடலுக்குள் இருந்து அது தன் தலையை வெளியே எடுத்து நின்றது. அது ஒரு சிவப்பு நிறத் தவளை போலவே இருந்தது. அது மிகப் பெரியதாகத் தெரிந்தது. இத்தனை பெரியதாக ஒரு தவளையை இதற்கு முன்பு ஒரு போதும் கண்டதில்லை என்பதால் இது தவளைதான் என இருவரும் நம்பாமல் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அந்த தவளையின் வாய் குறைந்தது நூறு அடிக்கும்மேல் இருக்கலாம். “இது உண்மையாக தவளைதான்டா” என்றான் பிலாலியின் நண்பன். “ஆமாம்டா இதுதான் உலகிலே மிகப் பெரிய தவளை” என்றான் பிலாலி. அந்த சிவப்பு நிறத் தவளை கடல் நீரில் நீந்திக்கொண்டு கரையை நோக்கி வந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் பிலாலியும் அவன் நண்பனும் கூச்சலிட்டுக் கத்தத் தொடங்கிவிட்டனர். கரையை வந்தடைந்ததும் தவளை துள்ளிப் பாய்ந்து,



வாயை அகல விரித்து பிலாலியையும் அவன் நண்பனையும் விரட்டிக்கொண்டு போனது. தவளை மிகவும் பெரியதாக இருந்தபடியால் ஊருக்குள் வரும் வீதியால் துள்ளி வர முடியாமல் போனது. அது புதன் கிழமை வீதி. அந்த வீதியைத் தாண்ட முடியாமல் உடல் நசுங்குண்டுபோய்க் கிடந்தது தவளை. பிலாலியும் அவன் நண்பனும் கூச்சலிட்டுக் கத்தியதில் ஊரில் இருந்தவர்கள் தவளையைப் பார்க்கப் புதன் கிழமை வீதியில் கூடி நின்றார்கள். தவளை மெதுவாகப் பின் பக்கம் தனது உடலை வளைத்து,வீதியை விட்டு விலகி மீண்டும் கடலை நோக்கித் துள்ளி ஓடியது. பிலாலியும் அவன் நண்பனும் தவளையைப் பின் தொடர்ந்து மெதுவாக கடற்கரைக்குச் சென்று, அந்தப் பெரிய தவளை திரும்பவும் கடலுக்குள் மூழ்குவதைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

ஆனால் அந்த சிவப்புத் தவளை அங்கே நின்றவாறு பிலாலியையும் அவன் நண்பனையும் திரும்பிப் பார்த்தது. இருவரையும் தன் நண்பர்களாக்க விரும்பி கடற்கரையில் நீண்ட நேரமாகக் காத்திருந்தது. பிலாலியும் அவன் நண்பனும் அச்சம் தெளிந்து, மெது மெதுவாக அந்தச் சிவப்புத் தவளையின் அருகே சென்றார்கள். அதன் முதுகிலே மெதுவாக கைகளால் தொட்டுத் தடவி, ஏறி அமர்ந்தார்கள். அப்போது, அந்த சிவப்பு நிற கடற்தவளை ஆனந்தமாக நண்பர்கள் இருவரையும் தனது முதுகிலே சுமந்து கடலில் நீந்தி விளையாடத் தொடங்கியது.


■

# விழித்தெழும் மனிதம்



**வினாயகமூர்த்தி அபிவர்ணா**

மூங்கிலாறு வடக்கு, உடையார்கட்டு, முல்லைத்தீவு.



விளை நிலமெல்லாம் மனைநிலமாக்கி
வளமாய் வாழ்வதாய் நினைப்பவர் இங்கே

மழை வளமெல்லாம் மண்ணும் மறந்திட
மரங்களை அழிக்கும் பகைவரும் இங்கே

வருகின்ற காலம் வளமாய் அமைக்க
கரங்களை உயர்த்திப் பலம் கொடு தோழா

மதத்தின் பெயரால் மனங்கள் சிதைபட
வாழ்வின் வேர்கள் ஆட்டம் காணுது

உறக்கம் உனக்கு இனியும் வேண்டாம்
உந்தனை உணர்ந்து விழித்தெழு தோழா

மனிதம் இங்கே புனிதம் ஆவது
உன்னால் நிகழ்ந்திடும் உணர்வாய் இனிமேல்



## Akaraa

Grade 7 Student,
Henry Hudson Public School,
Toronto



### Dreams

Hold fast asleep.
For if dreams begin
Open your eyes
The real world returns
Stay awake,
Dreaming would be your biggest enemy.

**கனவுகள்**

ஆழ்ந்து தூங்குங்கள்.
கனவுகள் தொடங்கினால்
கண்களைத் திறவுங்கள்
உண்மையான உலகம் திரும்பும்

கனவு என்பது உங்கள்
மிகப்பெரிய எதிரி.
விழிப்பாக இருங்கள்.




Secretly empty

Your smile was the pill i'd take
at the darkest times.


But once it stopped curing
Is when I knew the bottle was empty.

**இரகசிய வெறுமை**

உனது புன்னகை
இருண்ட நேரங்களில்
நான் சாப்பிடும் மாத்திரை.

ஆனால்
ஒருமுறை அது
குணப்படுத்துவதை நிறுத்தியது.

அப்போதுதான் குப்பி
வெறுமையாக இருந்ததை
உணர்ந்தேன்.



மூத்த எழுத்தாளர் தெணியான் அவர்கள் அண்மையில் மறைந்து விட்டார்.உள்ளம் சஞ்சிகையைத் தொடங்கிய ஆரம்ப காலத்தில் அவரை அவரது வீட்டில் சந்தித்தது ஞாபகமிருக்கிறது. அவரது படைப்புக்களை எமது சஞ்சிகைக்காகத் தரும்படி கேட்ட சந்திப்பு இது. உயர்ந்த மனிதர், கணீரென்ற குரல் , உறுதியான பேச்சு. நாங்கள் சந்தித்த காலம் எழுத்தாளர்கள் அனைவரும் தமது பேனாக்களை மூடி வைத்திருந்த காலம். துப்பாக்கிகள் பேசிய காலம். துப்பாக்கிகள் எழுத்தாளர்களையும் விட்டு வைக்கவில்லை. யாரென்றே தெரியாத எங்களை வரவேற்று உபசரித்து அறிவுரை தந்து வாழ்த்தி அனுப்பிய தெணியான் அவர்களை நன்றியோடு நினைவு கூருகின்றேன். இன்னொரு ஆச்சரியமான விஷயம் .போரினால்நாங்கள் எல்லோரும் சிதறி ஓடி விட்டோம் .வளர்மதியும் பொலிவிழந்து அங்கிருந்த புத்தகங்கள் யாவும் பாவிக்க முடியாதபடி பழுதடைந்து விட்டன. உள்ளம் சஞ்சிகைகள் எதுவுமே எங்கள் கைகளில் இல்லை. நீண்ட காலத்தின் பின்னர்

நூலகம் இணையத்தளத்தில் உள்ளம் சஞ்சிகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அவற்றில் தெணியான் அவர்களின் கையெழுத்தைக் கண்டேன். உள்ளம் மட்டும் என்றில்லாது எத்தனையோ சஞ்சிகைகள் புத்தகங்களை அவர் பேணிப் பாதுகாத்து நூலகத்தினரிடம் ஒப்படைத்திருப்பார் என்று நம்புகிறேன். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தை அழிய விடாமல் பாதுகாத்த அவரது பணியும் போற்றுதற்குரியது.

இந்திய அமைதிப் படையின் ஆக்கிரமிப்புக் காலம்.. ஆலயங்கள், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் எல்லாம் அகதி முகாம்களாயின. எங்கள் கிராமத்தில் அருகருகே அமைந்திருந்த மாத்தனைக் கந்தசுவாமி கோவிலும், வளர்மதி சனசமூக நிலையமும் அகதி முகாம்களாயின. ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் ஓரளவு தணிய மக்கள் வீடுகளுக்குத் திரும்பினர். ஏற்கனவே பெரியதொரு இளைஞர் படையை தன்னகத்தே வைத்திருந்த வளர்மதி மேலும் பல



**தெணியான்**



இளைஞர்களைத் தன்னகத்தே ஈர்த்தது. இதன் விளைவாக வளர்மதியில் இரண்டு நிர்வாக குழுக்கள் இயங்கத் தொடங்கின. அவற்றில் ஒன்றான சனசமூக நிலையத்தின் பொறுப்பு எங்கள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தின் பிரபல அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள், கிரிக்கட் போட்டிகள் மற்றும் பொது அறிவுப் போட்டிகள் எம்மால் அந்த நேரத்தில் நடாத்தப்பட்டது.அந்தக் காலத்தில் தோன்றிய ஒரு எண்ணக்கருதான் 75ல் ஆரம்பிக்கப்பட்டுப் பின்னர் நின்று போன 'உள்ளம்' கையெழுத்துப் பிரதியை மீண்டும் வெளிக் கொண்டு வந்தாலென்ன ? என்பது.

உள்ளம் ஆசிரியர் குழுவுக்காக செல்வன், சிவனேசன், மதனராஜன், தேவசிகாமணி, ரமணன், வாகீசன், மதி, சந்திரன், பிரபா என ஒன்பது பேர் கொண்ட குழுவொன்று உருவாக்கப்பட்டது. இக்குழுவானது அதன் முதலாவது கையெழுத்துப் பிரதியை பிரபல எழுத்தாளர் அமரர் து. வைத்திலிங்கம் அவர்களின் மஞ்சவெண்ணாமரம் என்ற சிறுகதையுடனும் மேலும் சில ஆக்கங்களுடனும் 89 ம் ஆண்டு , மாசி மாதம் வெளிக்கொணர்ந்தது.


இக் கையெழுத்துப் பிரதிக்குக் கிடைத்த உற்சாகமான வரவேற்பும் , குழுவில் இருந்த பலரது ஆர்வமும் கையெழுத்துப் பிரதியில் குறிப்பிட்டதற்கிணங்க விரைவாகவே அச்சுப் பிரதியாக உள்ளம் சஞ்சிகையை வெளியிட வேண்டுமென்ற அவாவை எமக்குள் ஏற்படுத்தியது.

அடுத்த மாதமே (89 ம் ஆண்டு பங்குனி மாதம் ) உள்ளம் இதழினை அச்சுப் பிரதியாக கொண்டு வந்தோம். எமது கிராமத்தில் இருந்த சோழன் அச்சகத்தில் அச்சிடப்பட்ட உள்ளம் இதழுக்கு ஊரில் இருந்த பல பெரியோர்கள் தமது பரிபூரண ஆதரவை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

அந்த நேரத்தில் பிரபல எழுத்தாளர்களாக இருந்த அமரர்கள் கொக்கூர்க்கிழான் எனப்படும் கா. வை. ரத்தினசிங்கம் அவர்கள், து. வைத்திலிங்கம் அவர்கள், பேராசிரியர் மா. சின்னத்தம்பி உட்பட வை. சிவநேசன் போன்ற இளம் எழுத்தாளர்களின் ஆக்கங்களுடன் முதல் உள்ளம் அச்சு இதழ் வெளி வந்தது. உள்ளம் ஆசிரியர் குழுவில் இருந்தவர்கள்,இதில் எழுதியவர்களைத் தவிர எமக்குப் பின்னால் இருந்து எம்மை ஊக்குவித்தவர்களில் அமரர்கள் ஞா.சிங்கராயர், கொக்குவில் தபாலதிபர் அ. குணபாலசிங்கம் மற்றும் லண்டனில் தற்போது வசித்துவரும் முன்னாள் கல்வியதிகாரி ஆ.தங்கராஜா ஆகியோர் முக்கியமானவர்கள்.




சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளராக அந்த நேரத்தில் கடமை புரிந்த திரு சிங்கராயர் அவர்கள் அந்தப் பகுதிப் பிரபலங்களிடம் எங்கள் சஞ்சிகைக்கு ஆக்கங்கள்



உள்ளம்

உள்ளத்திலிருந்து....



கம்பியூட்டர் — ஓர் அறிமுகம்.

போதைவஸ்து — ஓர் அச்சுறுத்தல்.

பெற்றுத் தந்ததுடன் எம்மைப் பல்வேறு வழிகளிலும் ஊக்குவித்தார். கலையரசு ஏ. ரி. பொன்னுத்துரை , பிரபல சிறுகதை எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோரது படைப்புகள் இவர் மூலமாக கிடைத்தவையே. ஒவ்வொரு உள்ளம் இதழிலும் வெளி வரவிருந்த ஆக்கங்களை மீள அழகாக எழுதித் தந்தவர் இவருடைய மகள் அமரர் கோகிலா சிவநாதன் . இவ்வாறு இவரது குடும்பத்தின் பூரண ஆதரவும் , உழைப்பும் எமக்குக் கிடைத்ததை நாம் மறக்கமுடியாது.


பிரபல எழுத்தாளர் து. வைத்திலிங்கம் அவர்கள் எம்மை வழி நடத்தியவர்களில் முக்கியமான ஒருவர். இவரும், கொக்கூர்கிழானும் இருந்திருக்காவிட்டால் எம்மால் உள்ளம் சஞ்சிகையை அந்த நேரத்தில் தொடங்கியிருக்க முடியுமா தெரியவில்லை. ஒரு சஞ்சிகையை வெளியிட வேண்டுமென்ற ஆர்வமும்,வெறியும் எமக்குள் இருந்ததே ஒழிய இலக்கியம் பற்றிய அறிவோ, புரிதலோ எமக்கு இருந்ததில்லை. இவர்கள் வழி காட்டுவார்கள், நாம் அதனைச் செய்து முடிக்கலாம் என்ற நம்பிக்கையுடனேயே சஞ்சிகை வெளியீட்டில் இறங்கினோம். எமது நம்பிக்கை வீண் போகவில்லை. யாழ் மாவட்டத்தில் அந்த நேரத்தில்



**கா.வை.இரத்தினசிங்கம்**



**ஞா.சிங்கராயர்**



மஞ்சவண்ணமரம்.

சிந்தனைக் கிவியல்கள்.


சிறுகதை.

கழகச் செய்திகள்:

அறிவு. ஆக்கம். முயற்சி.

தீவிரமாக எழுதிக் கொண்டிருந்த அனைத்து எழுத்தாளர்களதும் பட்டியல் ஒன்றினை திரு வைத்திலிங்கம் அவர்கள் தயாரித்து எல்லோரையும் சந்தித்து ஆக்கங்கள் தரும்படி கேட்கும்படியும், சொந்த ஆக்கங்கள் தந்தும் எம்மை ஊக்கப்படுத்திக் கொண்டே இருந்தார்.

இலக்கிய உலகில் கொக்கூர்கிழான் எனப் பலராலும் அறியப்பட்ட கா.வை. இரத்தினசிங்கம் அவர்கள் லேக் ஹவுஸ் நிறுவனத்தில் பல காலம் பணி புரிந்தவர். தமிழ்,ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவர். தான் கொண்ட கொள்கையில் எந்தவித விட்டுக்கொடுப்புக்களையும் செய்யாது நேர்பட வாழ்ந்தவர். மிக எளிமையான மனிதர். இவரிடம் ஆங்கிலக் கல்வி பயின்ற எம்மூரவர்கள் ஏராளம்.



து.வைத்திலிங்கம்

மாணவர்கள் பணம் கொடுத்தால் மட்டுமே வாங்குவார். இவரால் பயனடைந்த ஏழை மாணவர்கள் ஏராளம். அல்லது ஆங்கிலக் கல்வி என்பது இவர்களுக்கெல்லாம் எட்டாத ஒன்றாகிப் போயிருக்கும்.முதல் இரு உள்ளம் இதழ்களிலும் பல்வேறு புனைபெயர்களில் பல ஆக்கங்களை எழுதியவர். இலங்கையில் வெளிவந்த பெரும்பாலான தமிழ் ,ஆங்கிலப் பத்திரிகைகளிலும் ,சஞ்சிகைகளிலும் இவர் எழுதியுள்ளார்.

அந்தநேரத்தில் எத்தனை உள்ளம் பிரதிகள் அச்சடித்தோம் என்பது ஞாபகமில்லை. ஆனால் முதலாவது இதழ் வெகு வேகமாக விற்றுத் தீர்ந்தது. சனசமூக நிலையப் பின்னணியில் ஒரு சஞ்சிகையை வெளியிடுவதில் உள்ள அனுகூலம் இதுதான். தரமான சஞ்சிகையை மக்களிடம் கொண்டுபோய் சேர்த்தால் அவர்கள் கட்டாயம் வாங்குவார்கள்.இன்றுவரை உள்ளம் பிரதிகளை விற்பதில் எமக்கு எந்தவிதமான சிக்கல்களும் இருந்ததில்லை என்பதனைக் கூறிக் கொண்டு அடுத்த இதழில் தொடர்வோம்.

— அகன்


■



பஷ்றி

# மரம் வளர்ப்போம்





மாலை ஆறுமணியை
நெருங்கிக்கொண்டிருக்கும் நேரம்
தாளில் மரங்களை வரைந்துகொண்டிருக்கிறேன்
இன்றிரவு, மரங்களில் தங்குவதற்கு
வரும் பறவைகளுக்கு புதியதொரு மரத்தை
உருவாக்க வேண்டி இதைச் செய்கிறேன்
வழக்கமாக பறவைகள் தங்கும் மரத்தை
குறிவைத்து,
வேட்டைக்காரர்கள் காத்திருக்கின்றனர்
பறவைகளுக்கு ஏதும் நடந்துவிடாமல்
காப்பாற்றிவிட வேண்டும்
வேட்டைக்காரர்களால் அடையாளம் காணமுடியாத
ஆனால், பறவைகளெல்லாம் கண்டுபிடிக்கக்கூடிய
அழகான மரமாக தாளில் வளர்ந்து நிற்கிறது
உடனே அதிகாலையையும் வரைந்துவிட்டேன்
காலையில் எழுந்த பறவைகள்
சிறகுலர்த்திப் பாடி,
மகிழ்வோடு பறவைகளின் புதியநாள்
ஆரம்பிக்கிறது
இந்த மரத்திற்கு நிழலில்லை
வேடர்களின் கண்ணுக்குப் புலப்படாத
நான் வரைந்த மரம்
என் மனதைப்போலவே பூத்துக் கிடக்கின்றது
ஒவ்வொரு நாளும் புதிதாக ஒரு மரத்தை
வரையவேண்டும் என நினைத்துக்கொண்டு
கவிதையிலுள்ள சொற்கள் மறைந்துவிடுகின்றன.

# கழகச் செய்திகள்



- கொக்குவில் வளர்மதி நிறை வாழ்வகத்தின் கீழ் இயங்கும் கொக்குவில் வளர்மதி முன்பள்ளியானது தொடர்ந்தும் மாணவர்களுக்கான பல நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்றது. கொரோனா இடரையும் தாண்டி முன்பள்ளி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு சிறார்களுக்கான கல்வி செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.



- முன்பள்ளி மாணவர்களுக்கான சிறுவர் தினமும், ஆசிரியர் தின நிகழ்வும் 2021.12.01 அன்று நடைபெற்றன.திருமதி யோகலட்சுமி திரவியநாதன் (அதிபர் C.C.T.M பாடசாலை) பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இந்நிகழ்வினைச் சிறப்பித்தார் . இந்நிகழ்வுகள் பெற்றோர், மாணவர்கள் இடையே பெரும் மகிழ்ச்சியினையும் வரவேற்பையும் பெற்றிருந்தன.



- 2021.12.04 அன்று முன்பள்ளி மைதானத்தில் 2021 மாணவர்களுக்கான விளையாட்டு விழா நடைபெற்றது. திருமதி பாலரஜனி குகனேசன் (உடற்கல்வி ஆசிரியர் – கொ.ஞான பண்டிதா பாடசாலை) அவர்கள் பிரதம விருந்தினராக சிறப்பித்தார். முன்பள்ளி மாணவர்களுக்கான பொங்கல் விழா வகுப்பு மட்டத்தில் பொங்கல் தினத்தன்று (14.01.2022) முன்பள்ளியில் கொண்டாடப்பட்டது. மேலும் முன்பள்ளியில் புதிதாக அலுவலக கட்டடம் 19.01.2022 அன்று திறக்கப்பட்டது.இவ் அலுவலகக் கட்டிடத்தை லண்டனில் வசிக்கும் எமது கழக அங்கத்தவர் மகாராஜா ரங்கராஜா

அவர்கள் தனது மனைவி அமரர் சௌதாமினி ரங்கராஜா அவர்களின் ஞாபகார்த்தமாக பெரும் பொருட் செலவில் கட்டித் தந்தமை குறிப்பிடத்தக்கது.




- 26.02.2022 முன்பள்ளி மாணவர்களுக்கான கற்றல் செயற்பாட்டை ஊக்கப்படுத்தும் முகமாக உடற்கல்வி திறன் வகுப்பறை ஆரம்பிக்கப்பட்டு அதன் மூலம் மாணவர்களுக்கு கற்றல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் மாணவர்கள் மகிழ்ச்சியாகவும் ஊக்கத்துடனும் கல்வி கற்று வருகின்றனர். இவ் வகுப்பறைகளை உருவாக்குவதற்கான செலவினை அவுஸ்திரேலியாவில் வசிக்கும் எமது மூத்த அங்கத்தவர் திரு பொ .குமாரதாஸ் அவர்கள் தனது பெற்றோர்களான அமரர்கள் பொன்னுத்துரை – இரத்தினம்மா தம்பதிகளின் ஞாபகார்த்தமாக வழங்கி வைத்தார்.



- முன்பள்ளியில் 2021 மாணவர்களுக்கான வருட இறுதி கலை விழாவும் மாணவர்களை பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ்வும் 17.03.2022 அன்று நடைபெற்றது. இவ்விழாவுக்கு திருமதி.கவின்யா நவஜீவா (அதிபர்– கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை) அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

- 08.03.2022 அன்று வளர்மதி மகளிர் அங்கத்தவரினால் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. இதில் மகளிர்களுக்கான விளையாட்டுக்கள் என்பனவும் சிறப்பாக நடைபெற்றன. 26.03.2022 அன்று முன்பள்ளியில் 2022 புதிய மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக திருமதி சித்திராதேவி ஞானசுப்பிரமணியம் (ஓய்வு நிலை ஆசிரியர்–கொ.இந்துக் கல்லூரி) கலந்து சிறப்பித்துக் கொண்டார்.



- மேலும் 29.04.2022 அன்று வகுப்பு மட்டத்தில் மாணவர்களுக்கான தமிழ் சித்திரை புத்தாண்டு கொண்டாடப்பட்டது.

- 01.05.2022 அன்று விக்ரம்–ராஜன்–கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் இறுதிச் சுற்றுப்போட்டி கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில் திரு P.பார்த்தீபன் (மக்கள் வங்கி முகாமையாளர்) பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். KCCC அணிக்கும் – Grasshoppers அணிக்குமிடையில் நடந்த இவ் இறுதிப்போட்டியில் , 2022ற்கான வெற்றிக்கிண்ணத்தினை Grasshoppers அணி சுவீகரித்துக் கொண்டது.




■




# பனம்பால்... பா!

**பனையடிப்பாடகன்**

1.

காால்மட்டை கங்குமட்டை
காஞ்ச ஊமல்க்கொட்டை
கண்ணறைப் பண்ணாடை
கனக்கிற கொக்கறை
குச்சிகள் தடிதண்டு
பொச்சுகள் எல்லாம்
கூட்டிக் குவிச்சு
கொளுத்தி எரி - பிறகு
நிண்டு மினக்கடாமல்
நேரத்தோட வெளிக்கிடு
உண்டோ தெரியாது
எரிவாயுக் குடுவைக்கு
ஏராளம் சனமாம்
வரிசை கைக்கெட்டுமோ !
வாயு வாய்க்கெட்டுமோ !

2.

வயித்தில மூண்ட நெருப்பு
வானர வாலில வைச்ச தீயாகி
வைச்சவர் நெஞ்சை
நஞ்சாக்க
களைகள்
வெளிக்கிட்டுக்
கண்டபடி
பயிர்களை மேய
பாத்தி பலதுக்குள்
நின்றும் புறப்பட்ட
புறத்திகள் சேர்ந்து
காத்துவாக்கில
கொள்ளிவைக்கக்
கைகட்டி வாய்பொத்தி
வேடிக்கை பார்த்துநிற்கும் -
காவல்
வேலிகளை
நினைச்சால்
வெடிக்காதோ
வெக்கம் !



# கட்புலக் கலைஞர்கள்

**பிரான்சிஸ் திமோதிஸ்**



“பாடசாலை காலத்தில் எனது சித்திரப் பாட ஆசிரியர் திரு. விக்னவினாயகம் அவர்களிடம் ஓவியம் பயின்றேன். பின்னர் ஆசியர் கல்லூரியில் கற்கும் போது சித்திரப்பாட விரிவுரையாளர் திரு. பிரஷாந்தன் அவர்களிடம் ஓவியம் பயின்றேன். குறியீட்டு ஓவியங்கள் வரையும் நுட்பத்தினை விரிவுரையாளர் திரு.பிரஷாந்தன் அவர்கள் கற்றுத் தந்தார்” என தனது ஆசான்களை நினைவு கூறுகின்றார் பிரான்சிஸ் திமோதிஸ். முதல் முதலாக இவரது கவிதை 2009 ல் வீரகேசரி பத்திரிகையில் வெளிவந்தது. தொடர்ந்து சூரியகாந்தி, உதய சூரியன், மித்திரன், Saturday மெயில் ஆகிய பத்திரிகைகளிலும் வெளிவந்திருக்கிறது. மலையகத்திலிருந்து வெளிவரும் காற்புள்ளி இலக்கிய இதழிலும், இந்தியாவிலிருந்து வெளிவரும் ஆக்கம் இலக்கிய மின்னிதழிலும், லண்டனிலிருந்து வெளிவரும் காற்று வெளி இலக்கிய இதழிலும் இவரது கவிதைகளும் ஓவியங்களும் இடம்பெற்றிருக்கிறது. இந்த உள்ளம் இதழில் அட்டைப்பட ஓவியம், பாட்டனின் அடித்தடங்களற்ற வரைபடம் - இரண்டு ஓவியங்களும் இவரது கைவண்ணங்கள்.

**டீன் கபூர்**

மொழியினையும் அழகியலினையும் கற்பிக்கின்ற ஆசிரியர்.எழுத்தையும் ஓவியத்தினையும் வாழ்வின் பெரும் பகுதியாய் வரித்துக் கொண்டவர்.குரோட்டன் அழகி(1994), திண்ணைக் கவிதைகள்(2007), சொற்களில் சுழலும் பிரபஞ்சம்(2020) என்கிற கவிதைப் பிரதிகளின் சொந்தக் காரர். நகரங்களின் கட்டிடக் காடுகளிடையே தொலைந்து போன கிராமங்களின் தொன்மத்தை மீட்டுருச் செய்யும் அவரது குரோட்டன் அழகி பெருங் குரலெடுத்துப் பேசப்பட்ட பிரதியொன்று. பதாகைகளை எழுதப் பயன்படும் ஒயில் வர்ணத்தோடு தனது ஓவியப் பயணத்தை ஆரம்பித்த டீன் பின்னர் தன் மாணவர்களுக்கான நீர் வர்ணத்தையும் மெழுகு வர்ணத்தையும் மிக நுண்வகை நுண்வகையாடல் செய்து பொருட்கூட்டம்,அலங்காரம், கருத்துருவாக்கச் சித்திரங்களென போதித்து, ஆரோக்கியமான சிஷ்ய உற்பத்திக்கு விதைப்புச் செய்தவர். தொடராய் நகர்ந்த நாட்களில் ஆங்காங்கே அவரது கேட்டோவியங்களும் காட்சியாக முளைத்திருக்கின்றன. சுயமியாய் கணிணியில் பரிட்சயத்தை உண்டு பண்ணிக் கொண்ட டீன்கபூர், டிஜிடல் வடிவத்தில் பெயின்றினை கலைத்து விளையாடும் எண்ணிம ஓவியங்களை முகப் புத்தகத்தில் தொடராக வரையத் தொடங்கி உரத்துப் பேசப்படவும் கவனம் பெறவும் தொடங்கினார். கற்பித்தல், எழுத்து, ஓவியம், வாழ்வியக்கம் என்ற எளிய சட்டகத்துள் தன்னைப் பொருத்தி நேர்த்தியாக இயங்குபவர்.டீன் கபூர் நல்ல எழுத்தாளர். அளவு கடந்து கவனிப்பு பெறத் தொடங்கியுள்ள ஓவியர். இந்த உள்ளம் இதழில் உள்ள எத்தனிப்பு, என்று சொன்னார்கள், கனவுகள், குளங்களை மூடி, நமது அந்நியத்தின் சாட்சியம், மரம் வளர்ப்போம் கவிதைளுக்கான ஓவியங்களும் குருடு, உயிர் என ஒன்று சிறுகதைகளுக்கான ஓவியங்களும் இவரது கைவண்ணங்களே.



**ரக்ஷானா ஷரிபுத்தீன் கோபிஹரன்**

கிழக்கிலங்கை மருதமுனையைப் பூர்வீகமாகவும், அக்கரைப்பற்றைப் பிறப்பிடமாகவும் கொண்டவர். அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியின் பழைய மாணவி. புலவர்மணி ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் பேத்தி, கவிஞர் ஃபாரூக் ஷரிபுத்தீனின் மகள், காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீனின் பெறாமகள் என்ற குடும்பப் பின்னணியைக் கொண்டவர். தனது குடும்பத்தினர் அனைவருமே பல்துறைப் புலமைத்துவத்திற்கும் அப்பால் ஓவியக் கலையிலும் தேர்ச்சியும் ஈடுபாடும் கொண்டவர்கள் எனவும், தனது குடும்பத்தின் கொடையே தனது ஓவிய ஆர்வமும் ஆற்றலும் என்றும் கூறுகின்ற ரக்ஷனா, கட்டடக்கலை, கலாசார அடையாளங்கள், வாழ்வியல் மற்றும் கருத்தாக்கம் சார்ந்த ஓவியங்களில் அதிக நாட்டமுள்ளவராக உள்ளார். இவரது வீடே ஒரு கலைக் கூடமாக "ஃபாரூக் ஷரிபுத்தீன் கலைக் கூடம்" என்ற பெயரோடு விளங்குகிறது. 2021 டிசம்பர் மாதம் இவர் படைத்த ஓவியங்களின்



கண்காட்சி ஒன்று, ஆரம்பகால 'உள்ளம்' சஞ்சிகைக்கும் ஓவியங்கள் வரைந்துள்ள பிரபல ஓவியர் கமலா வாசுகி அவர்களால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டு, சிறப்பாக நடந்தேறியது. இவரது ஓவியத்தை அட்டைப் படமாகத் தாங்கிய சிறுகதைத்தொகுப்பொன்று இந்த வருடச் சென்னைப் புத்தகக் கண்காட்சியில் காணப்பட்டதோடு இவரது ஓவியங்களைத் தாங்கிய அட்டைப் படங்களோடு இன்னும் பல புத்தகங்கள் வெளிவரக் காத்திருக்கின்றன. இந்த உள்ளம் இதழில் 'நிலம் கொண்ட கடல்' கவிதைக்கான ஓவியம் இவரால் வரையப்பட்டுள்ளது.

## அறிவு என்னும் ப. அறிவழகன்



மாவையில் பிறந்து, மகாஜனாவில் விளைந்த பல கலைமுத்துக்களில் ஒரு முத்து. பின்னாளில் தாய் நாடுவிட்டு ஜேர்மன் வந்து, பொழுது போக்கிற்காய் ஓவியம் வரையத் தொடங்கி, அது ஜேர்மனியர்கள் பலரின் பாராட்டுக்களை அள்ளித்தர, இவருக்குள் இருந்த ஓவியன் பிறப்பெடுத்து மழலை பேசத் தொடங்கினான். அன்றிலிருந்து இன்றுவரை, ஓவியமே இவரது பிரதான பொழுது போக்கு. கண்ணில் படும் காட்சிகள் எல்லாமே இவரது கைவண்ணத்தில் ஓவியமாகி இவரது வீட்டையும், இவரது நண்பர்களின் வீடுகளையும் அலங்கரிக்கின்றன. இந்த உள்ளம் இதழில் கூவாதே பாடு, பேசப்படா மௌனத்துள் கவிதைளுக்கான ஓவியங்கள் இவரது ஆக்கங்கள்.

## எஸ்.நளீம்

இலங்கை, வாழைச்சேனையைச் சேர்ந்தவர் ஓவியம், கவிதை .சிறுகதை ஆகிய துறைகளில் அயராது செயற்படுபவர். பாடசாலையில் கற்கும் காலத்திலேயே ஓவியத்தில் ஈடுபாடுகொண்ட இவர் தொடர்ச்சியாக அத்துறையில் இயங்கிவருகிறார். கொழும்பு துறைமுக அதிகார சபையில் கடமை புரிந்த சுமார் பதினைந்து வருட காலத்தில் கொழும்பு கலாபவனம் உட்பட பல்வேறு இடங்களில் இடம்பெறும் ஓவியக் கண்காட்சிகளை தவறாது பார்வையிடுவதன் மூலம் தன்னைத்தானே புடம்போட்டு வளர்த்துக்கொண்டதாகக் கூறுகின்றார். தத்ரூப, அரூப ஓவியங்களை வரையும் இவர் மிகக் குறுகிய சில கோடுகளிலேயே கருத்துக்களைப் பிரதிபலிக்கிறார். அத்தோடு கணினியை பயன்படுத்தி வரைவதில் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். ஈழத்து மூத்த,சமகால எழுத்தாளர்கள் பலரை தனது கோடுகளால் வடித்திருக்கிறார். இலங்கையின் முக்கிய பத்திரிகைகளான தினகரன்,வீரகேசரி, எங்கள் தேசம் என்பவற்றுக்கும் சிற்றிதழ்களான மூன்றாவது மனிதன், யாத்ரா, இலக்கு, மைனா போன்றவைகளுக்கும், இணைய இதழ்களான நடு, எதுவரை என்பவற்றுக்கும் ஓவியங்களையும் தலைப்பெழுத்துருக்களையும் வரைந்துள்ளார். இலங்கை ரூபவாஹினி தொலைக்காட்சியிலும் இவரது ஓவியங்கள் பலதடவைகள் ஒளிபரப்பப் பட்டுள்ளன. அத்தோடு பல நூல்களுக்கும் முகப்பு அட்டை வடிவமைப்பினையும்



உள்ஓவியங்களையும் வரைந்திருக்கிறார். இதுவரை இவரது மூன்று கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன, கவிதைகளுக்காக பல விருதுகளையும் பெற்ற இவர் குறிப்பிடத்தக்க சில சிறுகதைகளையும் எழுதியுள்ளார். அண்மையில் வெளிவந்த கிழக்கின் நூறு சிறுகதைகள் தொகுப்பிலும், “என்ட அல்லாஹ்” போர்க்கால சிறுகதைத்தொகுப்பிலும் இவரது சிறுகதைகளும் இடம் பெற்றுள்ளன. இந்த இதழில் உள்ள நியாயத்தராசு,தீர்க்கதரிசியம் சிறுகதைகளுக்கான ஓவியங்களும் ,இச் சிறுகதைகளுக்கான தலைப்புக்கள் ,படைப்பாளிகளின் எழுத்துருக்களும் இவரது கைவண்ணத்தில் வர பெற்றவையாகும்.

### இராசதுரை குணசீலன்



கனடாவின் Toronto நகரில் வசிக்கும் குணசீலன் கடந்த உள்ளம் இதழுக்கும் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்.இந்த இதழில் வெளிவந்துள்ள ரஷிய மொழிபெயர்ப்புச் சிறுகதையான கொடி, சிறுவர்களுக்கான கடற் தவளை சிறுகதை ,செங்குருதி கவிதைக்கான ஓவியங்கள் இவர் வரைந்தது. இந்த இதழில் உள்ள பல்வேறு புகைப்படங்களையும் மெருகுபடுத்தியதில் இவரது பங்களிப்பு உள்ளது.

### பிரியா தபீந்திரன்



உள்ளம் ஆசிரியர் குழுவில் ஒருவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரியா கடந்த இதழிலும் தனது கணிசமான உழைப்பை நல்கியிருந்தார்.இந்த இதழில் உறவும்,உணர்வும் தொடருக்கான ஓவியமும்,பிறக்கப்போகும் சிறுமி கவிதைக்கான ஓவியமும் சிறுவர் பக்கம்,எதிர்வினை, மற்றும் அஞ்சலிக் கட்டுரைகளுக்கான குறியீட்டுச் சின்னங்களும் இவரது தூரிகையில் துளிர்த்தவையாகும்.

### ஓவியர் அமளி



தொழிலாயோ பொழுது போக்காயோ கொள்ளாமல் விசேட தேவைகளிற்காய் மட்டும் நுட்பமாக ஓவியங்கள் வரைகின்ற அமளியின் குதிக்கால்களில், வசாவிளான் மண் வரைந்த செம்பாட்டு ஓவியம் எப்போதும் இருக்கும். இந்த இதழின் பனம் பால் பா தொடருக்கான ஓவியம் அமளியால் வரையப்பட்டது.

### அவந்த ஆட்டிகல (Awantha Artigala)

தென்னிலங்கையின் பிரபல கார்ட்டூனிஸ்ட் அவந்த நாட்டில் இன்று கொழுந்து விட்டெரியும் பிரச்சனைகளையும் ,அதற்குக் காரணமான அரசையும் ,அரசியல்வாதிகளையும் ,நிர்வாக அமைப்புக்களையும், பொருளாதார முறைமைகளையும் தூரிகையால் துவம்சம் செய்து வருகிறார். தன்னைப் பெரிதாக வெளிக் காட்டிக் கொள்ள விரும்பாத அவந்தவின் கார்ட்டூன்களை அவரது அனுமதியுடன் ஐயம் தெளி பகுதியில் பயன்படுத்தியுள்ளோம்.

## ஓவியர் ரமணி



யாழ்ப்பாணம் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஓவியம் மற்றும் சிற்பத் துறையில் ஏராளமான படைப்புக்களை உருவாக்கியுள்ளதோடு மட்டுமல்லாது தனக்கேயுரிய பாணியில் தடம் பதித்துத் தனியிடம் பெற்றவர்.

இவரது அநேகமான படைப்புக்கள் புத்தகங்களின் அட்டைப்பட ஓவியங்களாக உள்ளன. நீர் வர்ணம் முதற்கொண்டு பல்லூடக ஆக்கங்கள் வரை, பல்வேறுபட்ட ஊடகங்களிலும் மரபுகளிலும் ஓவியங்களைப் படைத்துள்ளார். ஈழத்தில் நவீன ஓவிய மரபில் படைப்புக்களை உருவாக்குபவர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர். பெயர் பெற்ற சிற்பங்கள் பலவற்றைப் படைத்துள்ள ரமணி அவர்கள் அவற்றின் உருவ நேர்த்திக்காகவும் கூட்டொழுங்கமைவிற்காகவும் பெயர் பெற்றவர். யாழ் பல்கலைக்கழகத்தில் வருகை விரிவுரையாளராகப் பணிபுரியும் இவர், ஓய்வு பெற்ற ஓவிய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆவார். ‘தெணியான்’ – ஒரு சரித்திரம் என்ற அஞ்சலிக் கட்டுரைக்கான தெணியானின் ஓவியங்கள் இவரால் வரையப்பட்டவையாகும்



## சாந்தன் எஸ் சாந்தகுணம்

லண்டனில் வசிக்கும் சிறந்த புகைப்படக் கலைஞரும் ,நாடகக் கலைஞரும், சமூக சிந்தனையாளருமாகிய சாந்தன் அவர்களின் புகைப்படம் ஒன்று இந்த இதழின் கவிதை போட்டியில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

## தங்கவடிவேல் சௌந்தர்



இடதுசாரிச் சிந்தனை கொண்ட பின்புலத்தில் வளர்ந்த சௌந்தர் அவர்கள் பெரும்பாலும் இடதுசாரிச் சிந்தனைகொண்ட அப்பழுக்கற்ற ,தன்னலமற்ற தலைவர்கள், சிந்தனாவாதிகளின் ஓவியங்களை வரைவதிலேயே நாட்டமுள்ளவர். ஓவியம் வரைவதில் நிறைந்த அனுபவமுடைய இவர் தமிழ் திரை இசையில் ராகங்கள் ,தமிழ் சினிமா இசையில் அகத் தூண்டுதல் என தமிழ் திரை இசை பற்றிய மிக நுணுக்கமான பல கட்டுரைகளை எழுதி வருபவர். தற்போது லண்டனில் வசித்து வரும் சௌந்தரின் அனுமதியுடன் அவர் வரைந்த மறைந்த எழுத்தாளர் தெணியான் அவர்களின் ஓவியத்தை நினைவழியா உள்ளம் தொடர் -2 ல் பாவித்துள்ளோம்.



# கவிதைப் போட்டி

இந்தப் புகைப்படத்துக்குப் பொருத்தமான கவிதை ஒன்றினை எழுதுங்கள். சிறந்த கவிதைக்கான பரிசாக 5000 ரூபா பரிசு வழங்கப்படும். அத்துடன் தரமான கவிதைகள் உள்ளம் இதழ்களில் அவ்வப்போது பிரசுரமாகும். உங்கள் கவிதைகளை kavithaigal@ullamm.com என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். கவிதைப் போட்டிக்கான கவிதை என்பதை மறக்காமல் குறிப்பிடுங்கள். நன்றி!

# செங்குருதி



**சபீர் அலி**

பட்டாம்பூச்சியின் அகண்ட
இறக்கையில் நின்று கொண்டு
கவிகளால் ஓவியம் தீட்டினான்
ஒரு காதல் கலைஞன்.

காற்றோடு அன்பு கொண்ட
பட்டாம்பூச்சியோ படபடவென
இறக்கையை அடித்து
காற்றின் சந்தத்தோடு
இணையத் துடித்தது.


இறக்கையில் நின்ற கலைஞன்
சட்டெனக் கீழே விழுந்தான்.
செங்குருதி நிலமெங்கும் படர்ந்தது.
இறக்கையில் வரைய மீதமிருந்த
ஓவியம் நிலத்தில் கடும் சிவப்பு
நிறத்தில் உறைந்திருந்தது.

யாதுமறியாப் பட்டாம்பூச்சியோ
கலைஞன் வரைந்த ஓவியத்தோடு
காற்றில் அலையத் தொடங்கியது.

பாவம் அதற்குக் கலைஞனின்
மரணமும் தெரியாது.
தன் மேல் வரையப்பட்ட
வண்ண ஓவியமும் தெரியாது.



# கொடி





**வாலெந்தின் கத்தாயெவ்**

வாலெந்தின் கத்தாயெவ்

வாலெந்தின் கத்தாயெவ் (பிறப்பு 1897) ருஷ்ய சோவியத் எழுத்தாளர். மக்களால் மிக மிக விரும்பப்படும் சோவியத் உரை நடை ஆசிரியர்களில் கத்தாயெவ் ஒருவர். அவருடைய இலக்கியத் தொண்டைப் பாராட்டி மிக உயர்ந்த அரசாங்க கௌரவமான லெனின் விருது அவருக்கு வழங்கப்பட்டது. “தனியே ஒளிரும் வெண் கப்பற்பாய்” என்ற அவரது நவீனம் மிகப் பிரசித்தி பெற்றது. புரட்சி நிகழ்ச்சிகள் என்ற உக்கிரமான கடற்சுழலில் அகப்பட்டுக் கொண்ட கவ்ரீக், போத்யா என்னும் இரண்டு சிறுவர்களைப் பற்றியது இந்தக்கதை.

“குழந்தைகள் சம்பந்தமான சுவை ததும்பும் அழகிய நவீனம் என்று எழுத்தாளர் அலெக்ஸேய் தல்ஸ்த்தோய் இதைப் பாராட்டியிருக்கிறார். “காலமே முன்னேறு” “நான் உழைப்பாளி மக்களின் மைந்தன்” “சோவியத் அரசாட்சிக்காக” முதலிய அவரது நவீனங்களும் புகழ் பெற்றவை.

1941-1945 ஆண்டுகளில் பாசிஸத்துக்கு எதிராக சோவியத் மக்கள் நடத்திய மாபெரும் தேசபக்திப் போரின் போது கத்தாயெவ் போர் முனையில் பணி புரிந்தார். போர் பற்றிய அவரது கோவை சோவியத் இலக்கியத்தின் தலை சிறந்த எழுத்தோவியங்களில் ஒன்றாகும்.

கத்தாயெவ் போர்க் கதைகளில் ஒன்றான “கொடி” என்பது ஒரு சிறுகதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பட்டு நன்றியுடன் இந்த இதழில் மறுபிரசுரம் செய்யப்படுகின்றது. இதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் மொழிபெயர்ப்பாளர் பூ.சோமசுந்தரம் ஆவார். அவருக்கும் எமது நன்றிகள்.

தீவிற்குள் வெகு தொலைவில் சில கற் பலகைக் சுரைகள் தென்பட்டன. அவற்றுக்கு மேலே கம்பீரமாக விளங்கியது. மாதா கோவிலின் குறுகிய முக்கோண வடிவான கூர்ங்கோபுரம் கோபுரத்தின் உச்சியிலிருந்த கருஞ்சிலுவை, மப்புப் போட்ட வானின் பின்னணியில் துலக்கமாகத் தெரிந்தது.

கற்பாங்கான கடற்கரை நிர்ஜனமாகக் காணப்பட்டது. கடலோ, நாற்புறமும் நூற்றுக் கணக்கான மைல்களுக்கு வெறுமையாயிருப்பது போலத் தோன்றியது. ஆனால் உண்மையில் அப்படியில்லை.

சிற்சில சமயம், கடலில் நெடுந்தூரத்தில் போர்க்கப்பல் அல்லது துருப்புக் கப்பலின் மங்கிய நிழலுரு புலப்படும். அந்தக் கணத்திலேயே கனவில் நடப்பது போல. கதைகளில் நிகழ்வது போல. ஒரு கற்பாறை பிலவாயைத் திறந்து கொண்டு சந்தடியின்றி நாசூக்காக ஒரு புறம் விலகும். பிலவாயின் அடியிலிருந்து மூன்று தொலை தாக்குப் பீரங்கிகள் சர்ரென்று மேலே எழும்பும். கடல் மட்டம் வரை வந்த பின் அவை முன்னே நகர்ந்து நிற்கும். அவற்றின் குழல் வாய்கள் எதிரிக் கப்பலின் போக்குக்கேற்ப, காந்தத்தால் கவரப்பட்டவை போலத் திரும்பும் கனத்த



உருக்கு மரைகளின் மேல் பிசுபிசுப்பான பச்சை எண்ணெய் பளபளக்கும்.

குத்துப் பாறைகள் ஆழத்தில் அமைக்கப்பட்டிருந்த காப்பரண்களில் காவற்படையினர் தளபாடங்களுடன் வைக்கப்பட்டிருந்தனர். துருப்புக்களின் இருப்பிடத்திலிருந்து ஒட்டுப் பலகைத் தடுப்பால் வேறுபடுத்தப்பட்டிருந்த குறுகிய ஒதுக்கிடத்தில் காவற்படைத் தலைவரும் கட்சிக் கமிஸாரும் வசித்து வந்தனர்.

அவர்கள் இருவரும், சுவர்களுக்குள் அகழப்பட்டிருந்த படுக்கையிடங்களில் அமர்ந்திருந்தனர். அவர்களுக்கு முன்பு சிறிய மேஜையிருந்தது. மேஜை மேல் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கு காற்றுப் போக்கியின் அலகுகளில் மின்னல் போலப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. வறண்ட காற்று, காகிதங்களைச் சலசலக்கச் செய்து கொண்டிருந்தது. குட்டைப் பென்சில் ஒன்று கடல் வரைப்படத்தின் மீது முன்னும் பின்னுமாக உருண்டு கொண்டிருந்தது.

வரைபடத்தில் எட்டாவது இலக்கமிட்ட சதுரத்தில் பகைவர்களின் நாசகாரிக் கப்பல் ஒன்று காணப்பட்டதாக அப்போதுதான் தலைவருக்குத் தகவல் கிடைத்திருந்தது. அவர் தலையை அசைத்தார்.

கண்களைக் குருடாக்கும் ஆரஞ்சு நிற நெருப்புப் பிழம்புகள் பீரங்கிகளிலிருந்து கிளம்பின. ஒன்றன் பின் ஒன்றாக மூன்று வெடியதிர்ச்சிகள் கடலையும் பாறைகளையும் கிடுகிடுக்கச் செய்தன. சலவைக்கல் மீது உருக்குப் பந்துகள் உருள்வது போன்ற ஓசையுடன் பீரங்கிக் குண்டுகள் விர்ரென்று பாய்ந்து நெடுந் தொலை சென்றன. சில வினாடிகளுக்கு அப்பால் மூன்று வெடிகளின் ஒலி கேட்டது.

படைத் தலைவரும் கமிஸாரும் மௌனமாக ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். சொற்களுக்குத் தேவையே இல்லை. தீவு பகைவர்களால் முற்றுகையிடப்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்குத் தெரிந்ததுதான். ஒரு மாதத்துக்கு மேலாகவே, கப்பல்களிலிருந்தும் விமானங்களிலிருந்தும் வந்த இடைவிடாத தாக்கைச் சமாளித்தவாறு அஞ்சா நெஞ்சர்களான ஒரு சில வீரர்கள் தீவைப் பாதுகாத்து வந்தார்கள். குத்துப் பாறைகள் மீது குண்டு மாரி தணியாத உக்கிரத்துடன் பொழிந்த வண்ணமாயிருந்தது. டார்ப்பிடோ படகுகளும் துருப்புப் படகுகளும் நாற்புறமும் கடலில் வேவுபார்த்துக் கொண்டிருந்தன. எதிரிகள் திடீரென்று தாக்கித் தீவைக் கைப்பற்றப் பலமுறை முயன்றார்கள். ஆனால் கருங்கற் பாறைகள் அசையாது எதிர்த்து நின்றன. பகைவர்கள் மீண்டும் மீண்டும் கடலில் நெடுந்தூரம் பின்வாங்கிச் சென்று, படைகளை மறுபடி அணிவகுத்து, இன்னொரு முறை தாக்குவார்கள். தற்காப்பில் எங்காவது பலவீனமான இடைவெளி தென்படாதா என்று தேடுவார்கள், ஆனால் அத்தகைய இடுக்கு எதுவும் அவர்களுக்குக் கிட்டாது.

இப்படியே நாட்கள் சென்றன.

இதற்கிடையே கோட்டையில் யுத்த தளவாடங்களும் உணவுப் பொருள்களும் குறைந்து கொண்டு போயின . தலைவரும் கமிஸாரும் தேவைப் பொருள்களை அதிக காலத்திற்கு நீடிக்கச் செய்யும் பொருட்டு மணிக்கணக்காக யோசனை செய்து எல்லாவிதமான வழிகளையும் தேடிப் பார்த்து விட்டார்கள். ஆனால் பொருள்கள் காலியாகிக் கொண்டு போயின. முடிவு நெருங்கிக் கொண்டிருந்தது.

“அப்புறம்”? என்றார் கமிஸார், கடைசியில்.

“அப்புறம் என்ன? அவ்வளவுதான்” என்றார் படைத்தலைவர்.

“அப்படியானால் நாட்குறிப்பு எழுது.”

படைத் தலைவர் நிதானமாக நாட்குறிப்புப் புத்தகத்தைத் திறந்தார். கடிகாரத்தைப்

பார்த்தார். பின்பு தெளிவான கையெழுத்தில் பின்வருமாறு எழுதினார்:

“அக்டோபர் 20. இன்று காலை முதல் எல்லாப் பீரங்கிகளாலும் சுட்டோம். பிற்பகல்

17. 45க்குக் கடைசிக் குண்டு சுடப்பட்டது. மேற்கொண்டு குண்டுகளே இல்லை. இன்னும்

ஒரு நாளைக்கு உணவு இருக்கிறது”

தலைவர் குறிப்புப் புத்தகத்தை மூடினார், சிறிது நேரம் அதை உள்ளங்கையில் எடை பார்ப்பது போலப் பிடித்திருந்தார். பின்பு அலமாரியில் வைத்தார்.

“அந்த வேலை முடிந்தது, கமிஸார்” என்று வறண்ட முகத்துடன் கூறினார்.

யாரோ கதவைத் தட்டினார்கள்.

“உள்ளே வாருங்கள்.”

பளபளப்பான கோட்டு நனைந்து சொட்ட ஒரு மாலுமி அறைக்குள் வந்து, அலுமினியக் குழல் ஒன்றை மேஜை மேல் வைத்தான்.

“செய்தியா ?”

ஆம்.

“யார் போட்டது ?”

“ஜெர்மானியப் போர் விமானம்.”

படைத் தலைவர் குழல் மூடியைத் திருகித் திறந்து அதற்குள் இரண்டு விரல்களை நுழைத்து ஒரு காகிதச் சுருளை வெளியில் எடுத்தார். அதைப் படித்ததும் அவர் முகம் கடுத்தது.

எண்ணெய்க் காகிதத்தில் பச்சை மையினால் தெளிவான, கொட்டை எழுத்துக்களில், தப்புந்தவறுமான ருஷ்ய மொழியில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

“சோவியத் கோட்டைக்கும் பீரங்கிப் படைக்கும் பொறுப்பான தலைவருக்கு. நீங்கள் முற்றுகையிடப்பட்டிருக்கிறீர்கள். உங்களிடம் மேற்கொண்டு போர்த் தளவாடங்களோ உணவோ இல்லை. அனாவசியமான இரத்தம் சிந்தலைத் தடுக்கும் பொருட்டு நீங்கள் பின்வரும் நிபந்தனைகளின் பேரில் உங்களை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்று யோசனை கூறுகிறேன் : தலைமை அதிகாரியும் மற்ற அதிகாரிகளும் உட்பட, கோட்டையின் காவற்படையினர் அனைவரும் பீரங்கிகளை நல்ல நிலைமையில் விட்டுவிட்டு, மாதா கோயிலின் அருகிலுள்ள மைதானத்துக்கு நிராயுதபாணிகளாகச் சென்று, அங்கே சரணடைய வேண்டும். மத்திய ஐரோப்பிய நேரப்படி காலை சரியாக 6 மணிக்கு, மாதா கோயிலின் கூர்ங்கோபுரத்தின் மீது வெள்ளைக் கொடி பறக்க விடப்பட வேண்டும். இவ்வாறு செய்தால் உங்களுக்கு உயிர்ப்பிச்சை அளிப்பதாக உறுதி கூறுகிறேன். தவறினால் மரணம்.

ஜெர்மானியக் கரையிறங்கு படைத்தலைவர்,

ரியர் அட்மிரல்வான் எவெர்ஷார்ப்”

சரணாகதி நிபந்தனைகளைத் தலைவர் கமிஸாரிடம் கொடுத்தார். அவர் அவற்றைப் படித்துவிட்டு மாலுமியிடம்,” சரி, நீங்கள் போகலாம்” என்றார்.

மாலுமி வெளியே சென்றான்.

“அவர்களுக்குக் கூர்ங்கோபுரத்தின் மேல் கொடி பறப்பதைப் பார்க்க வேண்டுமாம்” என்று சிந்தனையுடன் சொன்னார் தலைவர்.

“ஆம்” என்றார் கமிஸார்.

தலைவர் மேல் கோட்டை அணிந்து கொண்டே, அவர்கள் கட்டாயம் பார்ப்பார்கள். நீ என்ன நினைக்கிறாய், கமிஸார், அவர்களுக்கு அது தென்படுமா ? அவர்கள் தவறாமல் அதைப் பார்த்தாக வேண்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும் கொடி. நமக்குப் போதுமான நேரம் இருக்கிறதா ? என்று கேட்டார்.

குல்லாயைத் தேடியவாறே, “இருக்கிறது”

என்று பதிலளித்தார் கமிஸார். “இரவு முழுவதும் கிடக்கிறதே. தயாரித்து விடுவோம்.

வீரர்கள் கடுமையாக உழைப்பார்கள். கொடி பிரம்மாண்டமாயிருக்கும் என்று உறுதி கூறுகிறேன்."

தலைவரும் கமிஸாரும் வாழ்க்கையில் முதன் முறையாக ஒருவரையொருவர் மார்புறத் தழுவிக்கொண்டார்கள். மறுமுறை இதற்கு வாய்ப்புக் கிடைக்காது என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே அவர்கள் அவசர அவசரமாக, உணர்ச்சிப்பெருக்குடன் ஒருவரையொருவர் அணைத்து முத்தமிட்டார்கள்.

கமிஸார் வீரர்களின் இருக்கைக்குள் போய், சிறு மேஜை மேலிருந்த லெனின் சிலையை நகர்த்தி அதன் கீழிருந்து சிவப்பு வெல்வெட்டு விரிப்பை எடுத்துக்கொண்டார் . பிறகு முக்காலி மீது ஏறி, கோஷம் பொறித்த சிவப்புப் பாவட்டாவை அவிழ்த்தார்.

காவற்படை வீரர்கள் எல்லோரும் இரவு முழுவதும் கொடி தயாரிப்பதில் முனைந்திருந்தனர். தரை கொள்ளாதபடி பிரம்மாண்டமாயிருந்தது கொடி. கப்பல் பாய் தைக்கும் ஊசிகளில் மாலுமிகளுக்குரிய முரட்டு நூலைக் கோத்து, வீரர்களின் இராணுவ டிரங்க் பெட்டிகளிலிருந்த ஒவ்வொரு துண்டுத் துணியையும் ஒட்டுப் போட்டுத் தைத்தனர்.

பொழுது புலர்வதற்குச் சற்று முன்பு, சுமார் ஆறு துப்பட்டிகள் அளவான கொடி தயாராகிவிட்டது.

மாலுமிகள் கடைசித் தடவையாக முகஷவரம் செய்து கொண்டு, தூய சட்டைகளை அணிந்து கொண்டார்கள். பின்பு, கழுத்துக்களிலிருந்து ஸப் மெஷின் — கன்கள் தொங்க, பைகளெல்லாம் தோட்டாக்களால் நிறைந்து பிதுங்க, ஒருவர் பின் ஒருவராக நிலவறைக் கதவைத் திறந்து கொண்டு மேலே ஏறிச் சென்றார்கள்.

பலபல வென்று விடியும் தறுவாயில் ஜெர்மானியக் கப்பலின் பாரா அதிகாரி, அட்மிரல் எவெர்ஷார்ப்பின் அறைக் கதவைத் தட்டினான். எவெர்ஷார்ப் முழு இராணுவ உடை அணிந்து, கட்டிலில் படுத்திருந்தான். கதவு தட்டிய சத்தம் கேட்டதும் அவன் எழுந்து கழுவு தொட்டியருகே சென்று கண்ணாடியில் தன்னைச் சரி பார்த்துக்கொண்டு, முகத்தில் ஓடி கொலோன் தடவிக்கொண்டான். அதன் பின்பே அவன் பாரா அதிகாரியை உள்ளே வர அனுமதித்தான். அதிகாரி ஒரே கிளர்ச்சியுடன் இருந்தான். சலாம் செய்கையில் அவனுக்கு மூச்சுத் திணறியது.

"மாதா கோயில் மேல் கொடி பறக்கிறதா ?" என்று கேட்டான் எவெர்ஷார்ப்.

"ஆம். பகைவர்கள் சரணடைகிறார்கள்"

"ரொம்ப நல்லது. நீர் அருமையான செய்தி கொணர்ந்திருக்கிறீர். நான் உம்மை மறக்கமாட்டேன். சபாஷ். மாலுமிகளை எல்லாம் மேல் தளத்துக்கு வர உத்தரவிடும்."

ஒரு நிமிடத்திற்குப் பிறகு அட்மிரல் எவெர்ஷார்ப் கப்பலின் மேல் தளத்தில் கப்பித்தான் மேடைமீது கால்களை அகலப் பரப்பி நின்றான். அப்போதுதான் பொழுது புலர்ந்திருந்தது. சரத்கால முடிவில் காணும் கூதல் வீசும் இருண்ட காலை. தொடுவானத்தில் தெரிந்த பாறைத் தீவைத் தொலை நோக்கி வழியாகப் பார்த்தான் எவெர்ஷார்ப். அழகற்ற சாம்பல் நிறக் கடலின் நடுவே திகழ்ந்தது அத்தீவு. சலிப்புத் தரும் ஒரே தோற்றத்துடன் எழும்பிய அலைகள் கரையோரப் பாறைகள் போன்று உருமாறிக் காணப்பட்டன. கடல் முழுவதுமே கருங்கல்லால் செதுக்கியது போலத் தென்பட்டது.

செம்படவர் குடியிருப்புக்கு மேலே கம்பீரமாக விளங்கியது மாதா கோயிலின் குறுகிய முக்கோண வடிவான கூர்ங்கோபுரம். அதன் உச்சியிலிருந்த கருஞ்சிலுவை, மப்புப் போட்ட வானின் பின்னணியில் துலக்கமாகத் தெரிந்தது. பிரம்மாண்டமான கொடி யொன்று கூர்ங்கோபுரத்தின் உச்சியில் வீசிப் பறந்தது. காலையின் மங்கலில் அது முற்றிலும் இருண்டு,



அநேகமாகக் கறுத்துக் காணப்பட்டது.

"ஐயோ பாவம். இவ்வளவு பெரிய வெண் கொடி தயாரிப்பதற்கு அவர்கள் தங்களிடமிருந்த துப்பட்டிகளை எல்லாம் தத்தம் செய்திருக்க வேண்டும். வேறு வழி ஏது? சரணடைவதென்றால் அதற்குள்ள அசௌகரியங்களைப் பொறுத்துத்தானே தீர வேண்டும்!" என்றான் எவர்ஷார்ப்.

அவன் உத்தரவிட்டான்.

கரையிறங்கு துருப்புக் கப்பல்களும் நாச காரிகளும் தீவை நோக்கிப் புறப்பட்டன. தீவு வரவரப் பெரிதாகியது, நெருங்கியது. மாதாகோயிலின் அருகேயுள்ள மைதானத்தில் மாலுமிகளின் சிறு கும்பல் நிற்பது வெறுங் கண்களுக்கே தெரிந்தது.

இந்தக் கணத்தில் மேலெழுந்தது குங்குமச் செம்பரிதி. வானுக்கும் கடலுக்கும் நடுவே அது தொங்கியது. நீண்ட புகை நிற மேகம் அதன் மேல் விளிம்பை மறைத்திருந்தது. பரிதிக் கோளத்தின் அடிவிளிம்பு அலை பொங்கும் கடலை வருடியது. தீவில் காரொளி பரவியது. மாதா கோயில் மீது பறந்த கொடியோ, உருக்கிய எஃகுப் போலச் செக்கச் செவேலென்று தகதகத்தது.

"இவன்கள் நாசமாய்ப் போக , எவ்வளவு அழகான காட்சி" என்று வியந்தான்

எவெர்ஷார்ப். சூரியன் போல்ஷெவிக்குகளை நன்றாய் நையாண்டி செய்கிறான். வெள;ளைக் கொடிக்குச் செந்நிறம் பூசிவிட்டான். போகட்டும். விரைவிலேயே அதை மீண்டும் வெண்கொடி ஆக்கிவிடுவோம்"

காற்று பேரலைகளை எழுப்பியது. அலைகள் பாறைகள் மீது மோதின. அவற்றின் தாக்குதலைச் சிதறடித்த பாறைகள் வெண்கலம் போல் ஒலித்தன. மெல்லிய கணகணப்பு தூவானம் நிறைந்த காற்றில் நடு நடுங்கியது. நனைந்த கற்களை வெறுமையாக்கி விட்டு அலைகள் கடலில் கலந்தன. வலிமையைத் திரட்டிக்கொண்டு எழுந்து அவை மீண்டும் பாறைகளைத் தாக்கின. கற்களுக்கு இடையே இருந்த குறுகிய, கோணல் மாணலான இடுக்குகளுக்குள்ளெல்லாம் புகுந்து, ஆழ்ந்த வெடிப்புக்களுக்குள் கசிந்து, தற்காப்பில் எங்கேயாவது பலவீனமான இடம் கிடைக்காதா என்று அவை துருவித் தேடின. தண்ணீர் களகளத்தது, கண்ணாடி உடைந்து சிதறுவது போலக் கணகணத்தது, சீறியது. கண்ணுக்குத் தெரியாத தடையொன்றின் மேல் திடீரென மோதி, பீச்சும் ஊற்றைப் போல நுரைக்கும் ரோஜா நிறத் தூவானத்தை வாரிச் சிதறியவாறு பீரங்கி வெடி போன்ற அதிரோசையுடன் சடாலென்று பின்வாங்கியது.

துருப்புப் படகுகள் கரை தட்டின. கொந்தளிக்கும் நீரில் மார்புவரை ஆழ்ந்து, ஸப் மெஷின் — கன்களைத் தலைக்குயரே தூக்கிப் பிடித்துக்கொண்டு ஜெர்மானியர் கோட்டையை நோக்கி விரைந்து முன்னேறினர். அவர்கள் பாறைக்குப் பாறை தாண்டினர், சளப்பென்று தண்ணீரில் விழுந்தனர், மீண்டும் மேலேறினர். ஆயிற்று, அவர்கள் குத்துப் பாறையின் உச்சியை அடைந்துவிட்டார்கள். இதோ அவர்கள் பீரங்கிப் படையின் திறந்த நிலவறை வாயில்களுக்குள்ளே புகுகிறார்கள்.

அட்மிரல் எவெர்ஷார்ப், கப்பித்தான் மேடையின் கம்பிக் கிராதியைப் பற்றியவாறு அசையாது நின்று, கரையை வைத்த கண் வாங்காது பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளம் களி துள்ளியது. மகிழ்ச்சியால் அவன் கன்னங்கள் துடித்தன.

"முன்னேறுங்கள், வீரர்களே, முன்னேறுங்கள்!"

திடீரெனத் தரைக்கீழ் வெடியதிர்ச்சிகளால் தீவு கிடுகிடுத்தது. நிலவறைகளுக்குள்ளிருந்து இரத்தக் கறை படிந்த துணிக் கிழிசல்களும் சதைத் துண்டுகளும் வெளியே சிதறின. பாறைகள் ஒன்றாக நகர்ந்து வெடித்துச் சில்லுச் சில்லாய்ப் பறந்தன. அவை துடிதுடித்தன, தீவின் நெஞ்சுக் குழியிலிருந்து மேலே எகிறின. பின்பு, உடைந்த பீரங்கிகள் மேலெழும்பி மொத்தையாய்க் கிடந்த திறந்த கிடங்குகளுக்குள் மீண்டும் விழுந்தன.

"பீரங்கிகளை வெடிவைத்துத் தகர்க்கிறார்கள்!" என்று வீறிட்டான் எவெர்ஷார்ப்." சரணாகதி நிபந்தனைகளை மீறிவிட்டார்கள், கயவாளிப் பயல்கள்!"

இந்தக் கணத்தில் கதிரவன் மேகத்துக்குள் மெல்லென நழுவினான். மேகம் சூரியனை விழுங்கிவிட்டது. தீவு மீதும் கடல் மேலும் தண்ணொளி பரப்பிய செஞ்சுடர் மறைந்துவிட்டது. நாற்புறமும் எல்லாம் கருங்கல்லின் சலிப்புத் தரும் சாம்பல் நிறமாக மாறின. எல்லாம் — மாதா கோயில் உச்சியில் பறந்த கொடியைத் தவிர. தனக்கு எங்கேனும் மூளை பிசகிவிட்டதோ என்று எவெர்ஷார்ப் எண்ணினான். மாதா கோயில் மீது பறந்த பிரம்மாண்டமான கொடி, இயற்கை விதிகளுக்கெல்லாம் மாறாகத் தொடர்ந்து செந்நிறத்தில் திகழ்ந்தது. நாற்புறமும் நிலவிய கருஞ்சாம்பல் நிறத்தின் பின்னணியில் அதன் செவ்வண்ணம் முன்னிலும் ஆழ்ந்து பளிச்சிட்டது. அதன் பளப்பளப்பு கண்ணைப் பறித்தது. அப்போதுதான் அட்மிரல் எவெர்ஷார்ப்புக்கு எல்லா விஷயங்களும் புரிந்தன. கொடி ஒருபோதும் வெண்மையாயிருக்கவில்லை. எப்போதும் சிவப்பாகவே தான் இருந்திருக்கிறது. அது வேறுவிதமாக இருந்திருக்கவே முடியாது.

யாரோடு சண்டையிடுகிறோம் என்பதை எவெர்ஷார்ப் மறந்துவிட்டான், அது தான் விஷயம். இது ஒன்றும் கண் மயக்கல்ல. அவனைச் சூரியன் ஏமாற்றவில்லை. அவன் தான் தன்னையே ஏமாற்றிக்கொண்டான்.

அட்மிரல் எவெர்ஷார்ப் புதிய கட்டளை பிறப்பித்தான்.

குண்டு வீசும் விமானங்களும் தாக்கு விமானங்களும் போர்விமானங்களும் அணி அணியாக மேலே எழும்பின. நாசகாரிகளும் துருப்புப் படகுகளும் நாலாபுறமிருந்தும் தீவை நோக்கி விரைந்தன. கரையிறங்கு துருப்புக்களின் புதிய அணிகள் ஈரப்பாறைகள் மேல் தட்டித் தடவி ஏறின . பாரஷீட் துருப்புக்கள் செம்படவர் குடியிருப்பின் மீது பூவரசு மலர்கள் போலப் பொலபொல வென்று உதிர்ந்தன. வெடியதிர்ச்சிகள் வானைப் பிளந்தன.

இந்த நரகத்தின் நடுவே, மாதா கோயிலின் உதைசுவர்களுக்கு அடியே மறைவிலிருந்த முப்பது சோவியத் மாலுமிகளும் தங்கள் ஸப்மெஷின் — கன்களைத் தெற்கு, வடக்கு, கிழக்கு மேற்கு, நான்கு திசைகளிலும் தயாராகத் திருப்பிக் குறிபார்த்திருந்தனர். இந்த பயங்கரமான கடைசிக் கணத்தில் அவர்களில் ஒருவனது வாழ்வது பற்றி எண்ணவே இல்லை. வாழ்வுப் பிரச்சினைதான் தீர்ந்தாகி விட்டதே. சாகப் போகிறோம் என்று அவர்கள் அறிவார்கள். ஆனால் இறக்கும் முன்பு எத்தனை எதிரிகளைத் துடைத்தொழிக்க முடியுமோ ஒழித்து விடுவது என்று அவர்கள் உறுதி பூண்டிருந்தனர். இது அவர்களுடைய கடமை. அதை அவர்கள் முடிவுவரை நிறைவேற்றியே தீர்த்தார்கள். அவர்கள் குறி தவறாது சுட்டனர். ஒரு குண்டு கூட வீண் போகவில்லை. ஒரு எறி குண்டாவது இலக்குப் பிசகவில்லை. மாதா கோயிலின் அருகே நடந்த போரில் நூற்றுக் கணக்கான ஜெர்மானியத் துருப்பினர் மண்ணைக் கவ்வினர்.

ஆனால் இரு தரப்புக்களின் பலத்திலும் பெருத்த ஏற்றத் தாழ்வு இருந்தது.

குண்டுகளால் பெயர்க்கப்பட்டு மாதா கோயில் சுவர்களிலிருந்து சிதறிய செங்கல், காரைச் சுவர்கள் மேலெல்லாம் பொழிய, முகமெல்லாம் புகையேறிக் கறுத்து, வியர்வையும் இரத்தமும் வழிய, சொக்காய்களின் உட்புறமிருந்து கிழித்தெடுத்த பஞ்சைக் காயங்களுக்குள் திணித்துக் கொண்டு முப்பது சோவியத் மாலுமிகளும் கடைசி மூச்சு வரை குண்டு சுட்ட வண்ணமாயிருந்து விட்டு, ஒருவர் பின் ஒருவராக வீழ்ந்து பட்டனர்.

அவர்களுக்கு மேலே பறந்தது பிரம்மாண்டமான செங்கொடி, கப்பல் பாய் தைக்கும் ஊசிகளில் மாலுமிகளுக்குரிய முரட்டு நூலைக் கோத்து, வீரர்களின் இராணுவ டிரங்க் பெட்டிகளிலிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற பட்டுக் கைக்குட்டைகள், சிவப்பு லேஞ்சிகள், குங்கும நிறக் கழுத்துக் குட்டைகள், ரோஜா நிறப் புகையிலைப் பைகள், சிவப்புக் கம்பளிகள், ஜெர்ஸிகள், நிக்கர்கள் கூட உள்படப் பல வகைப்பட்ட சிவப்புத்துணிகளை எல்லாம் ஒட்டுப் போட்டு அவர்கள் தயாரித்திருந்த கொடி. "உள்நாட்டுப் போரின் வரலாறு" என்ற நூலின் முதல் தொகுதியின் செந்நிறக் காலிகோ அட்டையும், இந்த அழகிய ஒட்டு வேலையில் சேர்த்துத் தைக்கப்பட்டிருந்தது.

மிக மிக உயரத்திலே, ஓடுகின்ற மேகங்களுக்கிடையே வீசிப் பறந்த அந்தக் கொடி, கண்ணுக்குப் புலப்படாத மகாவீரன் ஒருவன் போர்ப் புகையினூடே அதைத் தாங்கி வெற்றியை நோக்கி அஞ்சாது முன்னேறிச் செல்வது போலத் தகதகத்தது.

(இரண்டாம் உலகப் போரின்போது சோவியத் ரஷ்யாவுக்குச் சொந்தமான தீவொன்றில் ஜேர்மனியப் படை இறங்க முயன்று தோல்வியடைந்ததை இக் கதை சொல்கிறது. தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ரஷ்ய — உக்ரைன் யுத்தத்திலும் உக்ரைனுக்குச் சொந்தமான இதே மாதிரியான தீவொன்றில் ரஷ்யப் படைகள் இறங்கியது குறிப்பிடத் தக்கது.) ■

# YA Smiles Dental Clinic

QUALITY | CARE | TRUST

**Dr. Yalini Aravinthan**
BDS, DDS
**Dentist**



# New Patients Welcome

## YOUR DENTAL HEALTH IS OUR FIRST PRIORITY!

### WHY CHOOSE US?

We provide quality and comprehensive dental care, We are committed to patients convenience providing dedicated service in a family friendly environment

## Call Us: (905) 554-5524


### CLINICAL SERVICES

- Routine Cleanings
- Braces/Invisalign
- Kids dentistry
- Oral surgery
- Full & partial dentures
- Bridges Crowns Veneers
- Root canal treatment
- Composite Fillings
- Teeth whitenings
- Implants

7475 McCowan RD, Markham, Ontario, L3S 3J6, Canada    www.yasmiles.ca

info@yasmiles.ca | fb.me/yasmilesdental

இந்த இதழ் பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான, ஆரோக்கியமான, பாரபட்சமற்ற விமர்சனங்களை முன்வையுங்கள்.எங்களால் தெரிவுசெய்யப்படும் சிறப்பான விமர்சனம் ஒன்றுக்கு 5000 ரூபா பெறுமதியான பரிசு வழங்கப்படும். மிகப் பொருத்தமான விமர்சனங்கள் எமது இதழில் கணைகள் பகுதியில் பிரசுரிக்கப்படும்.



# கணைகள்

**மீண்டும் புதிதாக உதித்த உள்ளம் சஞ்சிகை (மார்கழி 2021) குறித்த என் பார்வை**

நீண்ட காலத்தின் பின்னர் மீண்டும் வெளிவந்த உள்ளம் இதழானது மிகவும் சிறந்த துறைசார் நிபுணர்களின் ஆக்கங்களையும், சமூக சிந்தனைகளையும் இலக்கிய படைப்பாளிகளின் உயிரோட்டமான கவிதைகள், கதைகள், ஓவியங்கள் என்று ரசிக்கவும் சிந்திக்கவும் வைத்ததுடன் புலம்பெயர்ந்த மண்ணின் மைந்தர்களின் ஆக்கங்களையும் ஒன்று சேர எம் உள்ளங்களிலே சங்கமிக்க வைத்த உள்ளம் சஞ்சிகை ஆசிரியர் குழுவிற்கும் ,தளம் அமைத்துக் கொடுத்த கொக்குவில் வளர்மதி முன்னேற்ற கழகத்திற்கும் வாழ்த்துக்கள் பல பல...........

வானப்பெருவெளி வனப்பு – சடாவின் மண்வாசனை மிகுந்த கவிதைகள் .அழகிய ஓவியத்துடன் இனிய அனுபவம் தந்து என் எண்ணப் பறவை சிறகடிக்கச் செய்கிறது. மூச்சடங்கா நிலம் எனும் கவிதை வானவூர்தி இல்லாமலேயே என் வீட்டு முற்றத்தில் கொண்டு சென்று நிறுத்தியது.

காசு, பணம், துட்டு, money – திரு.த.ரகுராஜ் அவர்களின் நகைச்சுவை நயம்பட எழுதிய தலைப்பே தனிச்சிறப்பு! தற்போதைய நிலைமையில் நிதித்துறை சார்ந்த இவ்வாறான ஆக்கங்கள் வருவது சிறப்பு. துல்லியமான அவதானிப்பு ரகுராஜிடம் உள்ளது.

இலங்கையின் கல்விச்சாதனைகள் ஏன் கை கொடுக்கவில்லை? என்ற திரு. வை. சிவநேசனின் ஆக்கம் எம் அடுத்த சந்ததியினரின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்க

வைத்துள்ளது. தரவுகளின் படி விஞ்ஞான, தொழில்நுட்ப பட்டதாரிகளின் அளவு நாட்டின் தேவைக்கு குறைவாக உள்ளது. இவரது கட்டுரை கவனத்தில் கொள்ளப்பட்டு கல்விசார் துறைகளில் மாற்றங்கள் செய்யப்படுவது அவசியம்.

உள் நின்று ஒளிரும் சக்தி திரு தேவநாயகம் தேவானந்தின் சமுதாய மேம்பாட்டில் அரங்கங்களின் பங்கு முக்கிய இடம் வகிக்கிறது. குறிப்பாக சிறுவர்கள் மேடை நாடகம், பாட்டு, பேச்சு போன்றவற்றை மற்றவர்களின் முன் சிறப்பாக அரங்கில் பங்களிக்க அவர்களின் ஆளுமைகள் வெளிப்பட உதவுகிறது. எனக்கு ஒருமுறை வளர்மதி முன்னேற்றக் கழக மாணவர்களின் இயல்,இசை, நாடகம் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது சிறப்பாக செய்கிறார்கள். சகல கிராமங்களிலும் ஊக்குவிக்கப்படவேண்டிய ஒன்று.

நீலம் பாரித்த மனங்களின் திருப்தி: நல்ல மனிதர்கள் என்ற போர்வையில் வக்கிரம் பிடித்த மனிதர்களின் மனங்களை யதார்த்தமான கதை வடிவில் அமைத்த ஆக்கம் சிந்திக்க வைத்தது. சிறப்பு!

வைத்திய கலாநிதி மா.சுபேந்திரனின் நவீன உலகின் கைத்தொலைபேசிகள் பாவிக்கும் முறைகளையும் அவற்றின் பயன்பாட்டில் உள்ள நன்மை, தீமைகளையும் அழகாக வெளிப்படுத்தியுள்ளார். பாவனையாளர்கள் இக்கட்டுரையை வாசித்து சிந்தித்து செயற்பட வேண்டுகின்றேன்.

மகாகவி உருத்திரமூர்த்தியின் இலக்கியப் படைப்புக்கள் மிகவும் தெளிவாகவும் ஆழமாகவும் ஆய்வு செய்து தமிழின் தொன்மையை அழகாக சிறந்த சொல்லாடலுடன் படைத்த இளைய படைப்பாளி சாரங்கனுக்கு என் வாழ்த்துக்கள். உங்கள் பேச்சுத் திறனையும் காணொளி மூலம் பார்த்தேன். சிறந்த ஆளுமையாக ..... மேலும் வளர ஆசீர்வதிக்கின்றேன்.

திரு.க.சிறீகணேசனின் ஓர் இலக்கியகாரன் பற்றிய பதிவுகள் உள்ளத்தின் வளர்ச்சிக்குப் பெரிதும் பங்காற்றிய மறைந்த எழுத்தாளர் சிதம்பர திருச்செந்திநாதனுக்குச் செய்யப்பட்ட நல்லதோர் அஞ்சலி.

ஐயம் தெளி: நான்கு சமூக சிந்தனையாளர்களின் கருத்துக்கள் சிந்தனைகள் போன்றவற்றை அவர்களது ஆக்கங்களில் அறிந்தேன். நானும் ஒரு சமூக செயற்பாட்டாளர் என்ற முறையில் எழுதுகிறேன். கலங்கரை விளக்கு வெளிச்சம் தான் திக்கு தெரியாமல் இருக்கும் கப்பலோட்டிக்கு உதவும். அறிவுரைகளை யாரிடம் கேட்க வேண்டும் என்று தெரிய சில வழிகள் தேவையாகிறது.

சித்த ஆயுள்வேதம் சம்பந்தமான சிறீ நவரட்ணராஜாவின் கருத்துக்கள் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. .

எரிகிற வீட்டில் : திரு.அலெக்ஸ் பரந்தாமனின் ஆக்கம் மிகவும் ஆழமான வலிமிகுந்த 2009 முள்ளிவாய்க்கால் அவலங்களை கண்முன்னே சித்தரித்தது . மனித மனம் விசித்திரமானது. எரிகிற வீட்டிலே பிடுங்கியது லாபம் என்ற பெண்மணி மாதிரி பலர் உள்ளனர்.கடந்து செல்வோம்.

சஞ்சயனின் காலம் எனும் பெருவலையின் இழைகள் படைப்பு புலம்பெயர் நாட்டின்

விளிம்பு நிலை மக்களின் அனுபவங்கள் அவர்களின் சிறந்த மனவோட்டங்கள் நிழல் படங்களுடன் சித்தரிப்பது அற்புதம்.

விசும்பின் துளிகள்: எழுத்தாளர் சுதாகரின் வாழ்த்துரையில் இருந்து 89,90 களில் இல் வெளிவந்த உள்ளம் சஞ்சிகையின் மேலோட்டம் நான் வாசித்து அறியாத உள்ளம். மற்றைய படைப்பாளிகளின் கருத்துக்களும் மிகவும் சிறப்பானவை வாழ்த்துக்கள். உள்ளம் சஞ்சிகைக்கு கருத்தான அழகான தலையங்கங்கள் தந்த ஓவியர்களுக்கும் தொழில்நுட்ப கலைஞர்களுக்கும் வாழ்த்துக்கள்.

- ஆதிரா, லண்டன்

டிசம்பர் 2021 உள்ளம் இதழ் கிடைத்தது. நீண்ட காலத்தின் பின் மீண்டும் வருவது சிறப்பு. ஏராளம் எழுத்துப் பிழைகள் இனி வரும் இதழ்களில் கவனியுங்கள். கவிதைகள் இன்னும் கூடுதலாக வந்திருக்கலாம்.

- ஏகாந்தேஸ்வரன் கந்தசாமி உக்கலாங்குளம், வவுனியா

முதன் முதலாக ஒரு சஞ்சிகை ஓவியர்களின் படங்களையும்,அவர்களின் விபரங்களையும் பிரசுரிப்பது இதுதான் முதல் தடவையென நினைக்கிறேன். மகிழ்ச்சி. வடிவமைப்பு அழகாக உள்ளது.


- வினோதினி சிவப்பிரகாசம் ஆனந்தநகர், கிளிநொச்சி


இளையவர்களுக்கு களம் கொடுப்பது உங்கள் இலக்காக இருந்தாலும் படைப்புக்களின் தரம் குறையாமல் கவனிக்கவும் வேண்டும். பல வெளியீட்டு விழாக்களை இலங்கை முழுவதும் நடாத்தியுள்ளீர்கள். பாராட்டுக்கள்.


- மனோகரி சாம்பசிவம் கரவெட்டி

இலங்கையில் சஞ்சிகை வெளியிடும் ஒரே ஒரு சனசமூகநிலையம் வளர்மதி சனசமூகநிலையம் என்றுதான் நினைக்கிறேன். உங்கள் சஞ்சிகையில் வெளிவந்த வளர்மதி சனசமூக நிலையத்தின் புகைப்படத்தைப் பார்த்த பொழுது ஒருமுறை அங்கே சென்று அதனைப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஏற்படுகின்றது.வாழ்த்துக்கள்.

- மயில்வாகனம் தாமோதரன், பூவரசங்குளம், வவுனியா







இங்கே வெத்தில கூறு இருக்கி ஒரு கூரு முப்பது ரூவா. என்று கோணல் மாணலாக ஒரு போர்டு எழுதிப் போட்டது மட்டுமல்லாமல் இரண்டு “று,ரு” வேறு போட்டிருந்தான் கொட்டான் மௌலானா. இப்படியான காரணப் பெயரெல்லாம் அதிகம் பேருக்கு பொருந்தி வராது. மூனடி நீளமும், ரெண்டடி உயரமும்தான் அவன் முன்னால் இருந்த மேசை. இப்படி மேசைக்கு அளவு பார்த்தா போதுமா அதுக்கொரு மாப்பிள்ளையும் பார்க்கிறது என்று யாரும் இதுவரை செல்லவில்லை. மேசையின் ஓரமாக ஒன்பது ஆணிகளை மெள்ள அடித்து, ஒன்றுக் கொன்று சிறு இடைவெளி விட்டு எட்டு வெற்றிலைக் கூறுகளைச் செருகி வைத்திருந்தான். “அடசிப்போ” என்று யாரேனும் சொல்வதற்கு முன்பே தானும் தன் வெற்றிலை வியாபாரமும் என்று ஒதுங்கி வாழக் கற்றுக் கொண்டிருந்தான். எல்லோராலும் வாழக் கற்றுக்கொள்வது கடினம்தானே.

வெற்றிலைக்கு சரி நடுவில் சீவி சுத்தம் செய்யப்பட்ட இரண்டு துண்டுப் பாக்குகள், அளவாக ஒரு துண்டுப் புகையிலை, ஆட்காட்டி விரலால் எடுத்துப் பூசிய சுண்ணாம்பு, மணக்கும் பட்டை ஒரு துண்டு என இலக்கணம் மாறாமல் தன் காலை நீட்டி ஆணிக்கு இடுக்கில் படுத்திருக்கும் வெற்றிலைக்கூறுகள் அணிவகுப்பைப் பார்த்தால் பச்சைக் கிளிகள் வரிசையாக படுத்திருப்பது போலிருக்கும்.

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு மகளை பஸ் அனுப்பவென்று முதல் பஸ்ஸுக்கு வந்துவிட்டாள் பிஸ்மி. பஸ்ஸடியில் மகள் பௌசியாவை நிற்கச் சொல்லிவிட்டு கொட்டான் மௌலானாவின் கடைப்பக்கம் தலையைத் திருப்பி பார்த்தாள். முதலில் அவள் கண்களுக்குப் பட்டது பிரதான வீதி ஓரம் நிற்கிற அந்த ஆலமரம்தான். பார்த்த உடனே கண்களை நிரப்பும் மரம் ஆலமரம்தானே.

அந்த மரத்திற்கு கீழ் இருக்கும் மௌலானாவின் வெற்றிலைக் கடைக்குச் செல்வதென்றால், பஸ் தரிப்பிடத்திலிருந்து குறைந்தது முப்பது நாற்பது மீற்றராவது நடக்கவேண்டும். கால்களுக்கு மீற்றர் கணக்கு தெரியுமா என்ன.

பாதிக் காடு தன் கையில் இருப்பதாக எண்ணியபடி நிமிர்ந்து நிற்கிறது அந்த ஆலமரம். மௌலானாவின் தலைக்கு மேலே தொங்கும் விழுதுகள் தாங்கிக் கொண்டிருக்கின்றன அவனது கோணல் மாணலை.

பிஸ்மிதான் கை முழுத்தம் செய்தாள். "ஒரு கூறு தாங்க மௌலானா" என்றாள். வலது கையினால் வெற்றிலைக் கூறை வாங்கியெடுத்தாள், இடது கைக்கு மாற்றி விரித்தாள். ஒரு வண்ணத்துப் பூச்சியைத் தொடுவதுபோல் புகையிலையை தொட்டுத் தூக்கி வலது கைக்குள் மறைத்துக்கொண்டாள். இரு பாக்குத் துண்டுகளையும் ஐஸ்க் கட்டியைப்போல் தூக்கி வாயில் போட்டு கடித்து நொறுக்கினாள். ஒரு ஓரமாக சுண்ணாம்பு தடவியிருந்த வெற்றிலையை மணக்கும் பட்டையுடன் நான்காக மடித்து வாயை ஆ வென்று உள்ளே விட்டாள். பற்களால் அரைத்தாள். மௌலானா அத்தனை பதனமாக வெற்றிலையை தட்டில் அடுக்கிக்கொண்டிருந்தார் என்றால் அதுவும் ஒரு ஜாலம்தான்.

நாக்கில் நாக்கை வைத்து உரசுவதுபோல்தான் அதன் முதற்கட்ட சுவை. வாயில் வாய் வைத்து, கொடுப்புக்குள் அளவாக காற்றை ஊதிவிட்டாற்போலவும், காற்று எங்கும் அசையாமல் ஒரே இடத்தில் உள்ளே நிற்பதுபோலவும் அதன் இரண்டாவது சுவை. இப்படி வெற்றிலைக் கூறின் சுவையை வரிசைக்கிரமமாக சுவைத்தாள் பிஸ்மி. அவளின் இரண்டு பக்க கடவாயிலும் உமிழ் நீர் வந்து பொசு பொசுவென்று வெளியே எட்டிப் பார்த்தது.

"மௌலானா இது உங்களுக்கு பிறவியிலேயா? இல்ல" என்று இழுக்கும்போது மகள் பௌசியா வந்து, வந்த வேகத்தில் அவள் கையைப் பிடித்து இழுத்தாள். "பஸ் போகப்போகுது வா உம்மா" என்றாள். இலங்கை போக்குவரத்து பஸ்ஸுக்கு பிரத்தியேகமாக இருக்கும் குணங்கள் ஒவ்வொன்றையும் வெளிப்படுத்தினார் ரைவர்.

"இல்ல சின்னம்மா இது என்ட சின்ன வயசில ராத்தா புறக்கடைக்குள்ள குந்தி மூத்திரம் பேஞ்சா அத நான் வேலி ஓட்டையால பாத்துட்டன் என்டு உம்மா என்ன..." மௌலானா எடுத்த கதையை முடிக்கவில்லை பஸ் ஹாரன் சத்தம் அவன் காதுகளைப் பிய்த்தது. பிஸ்மி அங்கிருந்து போன சத்தம் கேட்டிருக்குமா அவனுக்கு? கதையை குறையிலே நிறுத்திவிட்டான். திடீரென, யாரும் எதிர்பாராவிதமாக சத்தமே இல்லாமல் அங்கு வந்து கீழே விழுந்த அந்த பழுத்த ஆலம் இலை வெற்றிலையை உற்றுப் பார்ப்பதுபோன்ற தோறணையில் கிடந்தது. அப்போது அங்கு வந்த ஆடு அந்த இலையில் வாய் வைத்தது.

இன்னும் சில நிமிடங்கள்தான் உள்ளன. அந்த ஆலமரத்தைத் தாண்டி பஸ் செல்வதற்கு. பழுத்த இலையின் கண்கள் கடைசியாக என்ன காட்சி பார்த்திருக்கும்? ஆட்டின் வாயுக்குள் பிதுங்கித் தெறித்தன இலையின் கண்களும், அது கடைசியாகப் பார்த்த காட்சிகளும்.

பஸ்ஸைத் தவறவிட்ட ஒருவர் பஸ்ஸின் பின்புறத்தை நோக்கி கையை நீட்டி ஏமாற்றத்துடன் ஓடினார். அவரின் வயதைப்போல பஸ்ஸும் நில்லாமல் அந்த ஆலமரத்தைக் கடந்து சென்றுவிட்டது.

ஏழாவது வெற்றிலைக் கூறை யாருக்கோ விற்றுவிட்ட காசை வாங்கி கல்லாவுக்குள் போட்ட மௌலானா மௌனிகாவை மனதில் நினைத்து தொங்கும் ஆலம் விழுதைப் பிடித்து சாய்ந்துகொண்டு கொஞ்சம் நனைவில் ஆழ்ந்தான்.

மௌலானாவுக்கு, அனீரா ராத்தா முறை. தலை முடியை வகிடெடுத்து அலங்கரிக்கும்போது அவள் தலை முடியிலிருந்து வரும் உருக்கெண்ணை வாசனை அவன் மூக்கின் கர்ப்பை அழிக்கும். வாசனை வெளியே எங்கும் போக விடாமல் மூக்கால் இழுத்து எடுத்துக்கொண்டு சிவப்பு பன் பாயில் அமர்ந்து சுவரில் சாய்ந்துகொள்வது மௌலானாவின் வழக்கம். "அனீரா மன்சில்" என்ற பெயர்ப் பலகை தொங்கும் சுவருக்குப் பக்கத்தில்தான் ஒரு நிலைக் கண்ணாடி. ஜன்னலில் இரண்டு சீப்புகள்,

அறபு எழுத்து லேபல் ஒட்டப்பட்ட

மௌலானாவின் நினைவில் இருந்து நீங்க முடியாத முகம் அந்த மௌனிகாவின் முகம்தான். அந்த மௌனிகா பாலுமகேந்திராவின் மௌனிகாதான். மௌலானா சின்னப் பராயத்தில் பாலுமகேந்திராவின் கதை நேரம் பார்த்துப் பழகியவர். பாலுமகேந்திராவின் கதாநாயகி மௌனிகாவை இவருக்குப் பிடிக்கும். பிடிக்குமென்றால் அதற்கு அளவே இல்லை. மௌனிகாவைப் பார்ப்பதற்காகவே வேலி புகுந்து பக்கத்து வீட்டுத் திண்ணையில் போய் அந்தக் கலர் டிவிக்கு முன்னால் இருப்பான். பாலுமகேந்திராவின் கதை நேரம் டிவியில் தொடங்கும்வரை டிவியைத் தவிர வேறு எங்கேயும் பார்க்க மாட்டான்.

எண்ணைப் போத்தல் ஒன்றும் நிரந்தரமாக அங்கு குடியிருக்கின்றன. அந்த எண்ணை உலுவரிசி கலந்த உருக்கெண்ணைதான்.

மௌலானாவின் நினைவில் இருந்து நீங்க முடியாத முகம் அந்த மௌனிகாவின் முகம்தான். அந்த மௌனிகா பாலுமகேந்திராவின் மௌனிகாதான். மௌலானா சின்னப் பராயத்தில் பாலுமகேந்திராவின் கதை நேரம் பார்த்துப் பழகியவர். பாலுமகேந்திராவின் கதாநாயகி மௌனிகாவை இவருக்குப் பிடிக்கும். பிடிக்குமென்றால் அதற்கு அளவே இல்லை. மௌனிகாவைப் பார்ப்பதற்காகவே வேலி புகுந்து பக்கத்து வீட்டுத் திண்ணையில் போய் அந்தக் கலர் டிவிக்கு முன்னால் இருப்பான். பாலுமகேந்திராவின் கதை நேரம் டிவியில் தொடங்கும்வரை டிவியைத் தவிர வேறு எங்கேயும் பார்க்க மாட்டான்.

நான்கு குமர் பெண்களும், வயதான கிழவியும்தான் அந்த டிவி இருக்கும் மண்டபத்தை நிறைத்து இருப்பார்கள். மண்டபம் பேரமைதியில் நிறைந்திருக்கும்போது அந்த வீட்டு அயன் டேபிளின் ஓரத்தில் இருந்த விளையாட்டு ஹெலிக் கொப்டர் சடுதியாக கீழே விழுந்து எழுப்பிய சத்தத்திற்குப் பிறகு டிவியில் அன்றைய கதை நேரம் தொடங்கிற்று.

ஒரு மேசையின் மேற்பரப்பில் இரண்டு மூன்று தாள்கள், தாள்களின்மேல் ஒரு பேப்பர் வெயிட், ஒரு அழகிய பேனாவுடன் டிவியில் கதை நேரம் தொடங்கும்


ஓ...ஓ...ஓ...ஓ என்ற பின்னணி இசையுடன் தொப்பி என்ற தலைப்பு டிவியில் தோன்றியது. கொப்பி என்று ஒரு குமர் அதை வாசித்தாள் மௌலானா சிரித்துவிட்டு அமைதியாக இருந்தான்.

அவன் சிரிக்கும்போது மார்புச் சதை குலுங்கும். வயிற்றுச் சதையும் குலுங்கும். அப்படி தெளிந்த தொப்பை உடம்பு அவனுக்கு. எல்லோரும் அவன் வயதைப் பிழையாகத்தான் கணிப்பார்கள். அவன் உடல் ஒரு வயதையும், முகம் ஒரு வயதையும் காட்டும். உயரமும் குறைவுதான். வெறும் மேலுடன் ஏனோ அன்று வந்து திண்ணையில் உட்கார்ந்திருந்தான். அந்தத் திண்ணையைப் பார்த்த யாரும் உடனே உட்கார்ந்துவிட துணிந்துவிடுவார்கள் அப்படி இருக்கும் திண்ணையும்கூட

சிவப்பு சீமெந்து இழுத்த திண்ணை. அதில் அடுகிடையும் படுகிடையுமாக கிடந்தால் அலாதியாக இருக்கும்.

இதற்கு முன் ஒரு போதும் அப்படி அவன் வெறும் மேலுடன் வெளியே எங்கும் வந்ததில்லை. அன்று ஞாயிறுதான். ஞாயிறு

என்றால் அதிகம்பேரு வெறும் மேலுடன்தான் இருப்பார்கள். பக்கத்து கதிரையில் இருந்த அந்தக் குமர் அவனை எட்டித் தொட்டு அவன் மார்பில் குனிந்து கிள்ளி வைத்துவிட்டாள். அப்போது சற்றுப் பெருத்த அவளின் முலைகள் அவளின் தொடையில் விழுந்து கிடந்தன. அவள் கிள்ளிவிட்டதும் அவனுடைய மார்பு பிறிஜ்சுக்குள் வைத்து வெளியே எடுத்த ஜெலி போன்று ஆடியது.



மௌலானா எதிலும் கவனம் கொள்ளாமல் மௌனிகாவையே பார்த்தான். மௌனிகாவின் சிரிப்பில் இந்த ஊரில் யாரோ இருக்கிறாள். அவளைப் பல முறை அவனுக்கு பார்த்த ஞாபகம். டிவிக்குள் மௌனிகா கண்ணாடி முன்னால் நின்று சிரித்தாள். அந்த நீண்ட கண்ணாடிக்கு அவள் பல் வரிசை மிகப் பொருத்தமாக இருந்தது. காலை 10 மணிக்கு தொடங்கிய நாடகம் 10:22க்கே முடிந்தது.

நாடகம் முடிந்த கையோடு வீட்டுக்கு ஓடினான் மௌலானா. வரும்போது அவன் புகுந்து வந்த கிடுகு வேலி ஓட்டையில் ஒரு உடும்பு நின்றிருப்பதைக் கண்டு ஒரு கணம் பயத்தில் மூழ்கினான். உடும்பு அங்கிருந்து ஓடி மறைய அந்த ஓட்டை வழியாகவே புகுந்து வீடு போய்ச் சேர்ந்தான். புறக்கடை வேலி ஓட்டையால் உடும்பை எட்டிப் பார்த்தான். “டேய் அங்க என்னத்தடா பாக்கிறாய் நாயே வேசி மகனே” என்று கத்தினாள் அவன் உம்மா. பயந்துபோய் வேகமாக உம்மாவை திரும்பிப் பார்த்தான் ஒரு கிடுகு ஈர்க்கு அவன் இடது கண்ணைக் குத்திப் பதம் பார்த்துவிட்டது. புறக்கடைக்குள் ராத்தா குந்தியிருந்தது அவனுக்கு அப்போது தெரியாது. வேலி ஓட்டையால், அவன் ராத்தா குந்தியிருப்பதைத்தான் பார்க்கிறான் என்று உம்மா நினைத்து அவனை அடிக்கப்போனாள். கையைப் பிடித்து இழுத்து கீழே போட்டாள்.

இரத்தம் வடிந்துகொண்டிருக்கும் கண்ணோடு அவன் வலியால் துடித்ததைக் கண்டாள். “என்ர ரகுமானே என்ட புள்ளட கண்ணுக்கு என்னாச்சோ யா அல்லா என்ர ரப்பே” கத்திக்கொண்டு வாசலெல்லாம் ஓடினாள். அவசர அவசரமாக அரசாங்க ஆஸ்பத்திரிக்குச் சென்றாள். ஆட்டோக்காரன் கண்கெட்ட கூலி கேட்பான் என்று நினைத்தாள் அவன் கூலியே வாங்கவில்லை. வோட்டில் ஒரு வாரம் இருந்து வைத்தியம் பார்த்து வீடு வந்தாள். வோட் பார்க்கும் ஆண் தாதி அவளைக் குழைந்து குழைந்து பார்த்ததை அவள் நினைவில் வைத்திருந்தாள். டாக்டர் பார்த்த குருட்டுத்தனங்களை நினைத்து திரும்பவும் சிரித்தாள்.

மகன் முகத்தில் ஒற்றைக் கண் இருப்பதும்; அந்த ஒற்றைக் கண்ணுடன் அவன் காலத்தை மீட்பதற்கு முடியாமல் இருப்பதும் அவளை நிம்மதியாக இருக்க விடவில்லை.

உம்மா ஏதோ பிடித்தவளாய் ஆனாள்.

மகனின் கண் இழந்த போட்டோவைக் காட்டி பிச்சை எடுத்து வந்தாள். அவள் பிச்சைத் தட்டு நெளிந்திருந்தது. அது போல் அவள் முகமும் நெளிந்திருந்தது. பிச்சை எடுக்கும் பணத்தைச் சேமித்து மகனுக்கு வைத்தியம் பார்க்கலாம், கண் வைக்கலாம் என்று நம்பினாள். கடை கடையாக பிச்சை கேட்டு ஏறி இறங்கினாள்.

“இப்புடி கடை கடையா பிச்ச எடுக்கிறாய் பேசாம வெளிநாடு ஏறு ஷேக்மார் நல்ல காசி தருவானுகள்” என்று கடை முதலாளிகள் சொல்லிக் கொண்டு கிடந்தார்கள். அவள் மனதில் ஒரு யானை இருந்தது. எல்லா வேதனைகளையும் அந்த யானைதான் சுமந்தது. அந்த யானை இரவு நேரங்களில் பிளிறுகிற சத்தம் அவள் காதில் மட்டும் கேட்கிறது. பிச்சை கொடுப்பவர்களில் சிலர் அவளைச் சும்மா விடுவதில்லை. “வேற தொழிலும் செய்யலாம்” என்று அவள் தோளில் கை வைத்து தொழிலுக்குத் தூண்டிலிடுவர்.

புல்மோட்டையிலிருந்து மேசன் வேலைக்கு இரவில் வந்து சேர்ந்தவன் இவள் புரிசன்காரன் ஆகிவிட்டான். கல்யாணத்திற்குப் பிறகு அனீரா பிறந்து ஏழு வயசு இருக்கும் புல்மூட்டைக்குப் போனவன் திரும்பல்ல. ஆறு வருசத்துக்குப் பிறகு ஒரு நாள் கதவு தட்டும் சத்தம் கேட்டது. அது ஆறு வருடத்தின் மொத்த சத்தம்போல் அது இருந்தது. அனீரா நல்ல உறக்கத்தில் இருந்தாள். அன்று இரவு வாசலில் உம்மாவும், மகளும் சப்பிய வேர்க்கடலையின் கோதுகள் வாசலில் கிடந்து அவன் கால்களில் மிதிபட்டிருந்தன. இரவு நேரம்தான் சத்தத்திற்கு சுதந்திரம் கிடைத்துவிடுகிறது.

புல்மோட்டைக்காரன் வந்து நான்கு மாதங்கள்தான் இருந்தான். அடுத்த பிள்ளை வயிற்றில். அவள் வீட்டில் இருக்கும்போது துப்பட்டா இல்லாமல் பெருத்த மார்பின் கவர்ச்சியுடன் இருப்பாள். அந்தக் கவர்ச்சி அவனை சும்மா இருக்க விடவில்லை. கூனி வறுத்து, பழப்புளி போட்டு, மணக்கும் மிளகாய்த்தூள் தூவிப் பிசைந்த தேங்காய்ச் சம்பலுக்கு கோதுமை ரொட்டி சுட்டு மாலை நேரத்தில் கொடுப்பாள். கொஞ்சமும் அவனைக் குறையில்லாமத்தான் பார்த்தாள். அப்படி இருந்தும் அவன் திரும்பவும் வீட்டை விட்டு ஓடிப்போனபோது வானம் நீலமாகத்தான் இருந்தது.

சில நேரம் அவள் பிச்சை எடுக்காமலே ஊர் சுத்திக்கொண்டு வீட்டுக்கு வந்ததுண்டு. தெருவால் போகேக்க வாய் கூசாமல் கூப்பிடுகிற ஆளுகளுக்கு மத்தியில் அவள் மனதுக்குள் இருக்கும் அந்தப் பெரிய யானை துதிக்கையை உயர்த்திச் சீறும். இப்போது துணைக்கு மகனையும் கையோடு இழுத்துக்கொண்டு பிச்சை எடுத்தாள். ஒரு நாள், தான் ஓய்வு எடுத்துப் பழகிய அந்த ஆலமரத்திற்குக் கீழே சிறு வெற்றிலைக் கடையைத் தொடங்கினாள்.

கொஞ்சக் காலம் கழிந்தது அவளும் படுத்தவள்தான். மனதுக்குள் இருந்த அந்த யானை அவளைக் கால்களால் மிதித்தது என்னவோ அவள் உயிரை விட்டாள். அவள் உயிரை விட்டு ஏழு கழியல மௌலானாவின் அடுத்த கண்ணும் விளங்காமல் போச்சு. உலகின் கருணை கருப்பு நிறமானது. இருட்டு எவ்வளவோ கருணையானது என்பதை அவன் உணர்ந்தான். பிறகு சத்தங்களை நேசிக்கத் தொடங்கினான். உறக்கம் கூட ஒரு கருணைதான். என்றும் அவன் நன்கு அறிந்துகொண்டான். ராத்தாவுக்காக உழைத்தான்.

வெற்றிலைக் கடையைத் தொடர்ந்து மௌலானாதான் நடத்தினான். கடைக்கு வரும் வாடிக்கையானவர்களுடன் விகடகவி போல் பேசி அவர்களை வாடிக்கை பிடித்தான். அவன் கடைக்குப் போறது வாரது எல்லாம் ஆட்டோவில்தான். ஆட்டோவில் ஏறியமர்ந்ததும் “ஒளிமயமான எதிர் காலம் என் உள்ளத்தில் தெரிகிறது” என்று பாடுவான். அது நடிகர் சிவாஜியின் காதில் கேட்டிருக்கும்.

அனீரா வீட்டில் தனிமையில் இளமையில் வாடத் தொடங்கினாள். அல்லையில் இருக்கும் யாரும் எட்டியும் அவளைப் பார்க்கிறவர்கள்

இல்லை. என்னதான் நடந்தாலும்.

"ராத்தா கேற்றத் தொற" கடை முடிந்து வந்த தம்பியின் கையைப் பிடித்து உள்ளே கூட்டிப் போனாள். சாப்பாடு போட்டாள். அவன் அசைவு கொடுக்காமல் பாயில் கிடந்தால் தூங்கி விட்டான் என்று அனீரா நினைத்துக் கொள்வாள். வீடே உருக்கின எண்ணை மணத்தது. அனீரா அடிக்கடி இரவில் குளிக்கத் தொடங்கினாள். கிணற்றில் தண்ணீர் அள்ளும் சத்தத்தைக் கேட்டபடி மௌலானா உறங்கிவிடுவான். உம்மாதான் இந்த நேரம் வந்து தண்ணி அள்ளுவா. வேற ஆருக்கு இந்த வூட்டு நெனப்பு வரும். என்று நினைப்பான். கண்கள் குருடு என்றால் உறக்கம் வராமல் போகுமா என்ன. கருப்புக் கண்ணாடி அவன் முகத்திற்கு சொல்லி வைத்தாற்போல் பொருந்தியுமிருந்தது.

அதைக் கழற்றி தலைமாட்டில் வைத்தான். மௌனிகாவைப் பார்த்து எத்தன வருசமாச்சு. சில வேளை அந்த மௌனிகாவை உறங்கும்போது நினைத்தே ஒரு காதல் வாழ்வை அவன் முன்னகர்த்தலாம். அப்படித்தான் இருக்கட்டுமே அவன். கண் கெடத்தான் அந்தத் தொப்பி குறும் படத்தில் மௌனிகா அப்படிச் சிரித்தாளா? அதுவும் தெரியாது. அந்த உயரமான கண்ணாடி மௌனிகாவை நினைத்து உருகுமா இப்போது? என்று நினைத்து, உறங்கி எழுந்தான்.

தொப்பையும், உயரம் குறைந்த உடலும், கருப்புக் கண்ணாடியும் பளீரென சிரித்துவிடும் அழகும் மௌலானாவின் முகத்திற்கு வேறொரு ஒளியைக் கொடுத்தது. ரூபாக்களை தடவிப் பார்த்தே எண்ணி முடித்துத் தருவான். அவன் உம்மா பிச்சை எடுக்கும்போது ரூபாக்களைப் பார்த்திருக்கிறான்.

அன்று விடிந்தது அவனது இருள் வாழ்வின் எத்தனையாம் நாள் என்று தெரியாது. வியாபாரத்திற்குப் போக புறப்படத் தொடங்கினான். கையில் ஒரு செம்புக் கைப்பிடி போட்ட தடியுடன் தன் வேலையை ஆரம்பித்தான்.

மொத்தமாக குசினியையும் சேர்த்து நான்கு அறைகள் கொண்ட சிறிய வீடது. எத்தியோப்பிய கிராம வாசியின் வீடுபோல். அனீராவும் எத்தியோப்பிய கருப்பு அழகி மாதிரியே இருக்கிறாள். அவள் அறையிலிருந்து இடுப்பில் பாவாடையோடு மார்புத் துணி எதுவுமில்லாமல் வெளியே வந்தாள். அவள் இரவில் உறங்கும்போது வெறும் மார்புடன் இடுப்பில் பாவாடை ஒன்றுடன் பெட்சீட்டால் போர்த்திக்கொண்டே உறங்குவாள். திடீரெனக் குனிந்து தன் மார்பைப் பார்த்தாள். கதவுநிலையடியில் சாய்ந்து நின்றாள். எந்த அவசரமோ, பதட்டமோ கொள்ளாமல் கையில் இருந்த புடவைத் துண்டை மார்பில் தூக்கிப்போட்டு கொண்டு குசினிக்குள் வந்து நின்றாள். விறாந்தையில் படுத்துக் கிடந்த மௌலானா எழுந்து நின்றவாறு வாளியில் பிடித்து வைத்திருந்த தண்ணீரில் முகம், கை, கால் கழுவிக்கொண்டு படுத்த பன் பாயையும் தலையணையையும் சுறுட்டி சுவரோடு ஒட்டி வைத்தான். சுவரில் இருக்கும் எந்த ஆணியில் எந்த நிற சட்டை தொங்குகிறது என்ற எல்லா நுட்பங்களையும் தெரிந்து வைத்திருந்தான். குருடனுக்கு மனம்தான் கண் என்பது அவனைப் பார்த்ததும் புரிந்தது.

வீடென்றால் யாருடைய சத்தமாவது கேட்டுக்கொண்டே இருக்கும். பிள்ளைகளின் சத்தம் அல்லது உம்மாவின் சத்தம் வாப்பா, வாப்பாட வாப்பாவின் சத்தமாவது கேட்கும். அல்லது கோழிகளின் சத்தம். சரி ஒரு பூனையின் சத்தம் கூட கேட்க முடியவில்லை. ரேடியோவின் சத்தம் கேட்க இன்னும் தாமதமாகும். குசினியில் கரண்டி விழும் சத்தம், சட்டி பானை முத்தமிடும் சத்தம் என்றால் எந்நேரமும் கேட்கும். மௌலானா சாப்பிட்ட பிறகு தலையை மேலே உயர்த்திப் பார்ப்பான். கண்கள் இல்லாமல் அவன் எதைத்தான் பார்க்கிறான். இறைவனைப் பார்க்கிறானோ என்னவோ. இறைவனைப் பார்ப்பதற்கு கண்கள் தேவையில்லைதானே. மாற்று உடுப்பை எடுத்து தோளில் போடுவான். பக்கத்திலிருக்கும் பெரியவன் ஆற்றுக்குக்

குளிக்கப் போவான். அன்று அதே போல் கைத் தடியால் தட்டித் தட்டி "உழைக்கும் கைகளே உருவாக்கும் கைகளே உலகைப் புதுமுறையில் உண்டாக்கும் கைகளே" என்று பாடிக்கொண்டே ஆற்றுக்கு நடந்தான். அந்த தெருவில் ஒட்டகம்போல் நீளமான ஊத்தை மஞ்சள் நிற நாய் ஒன்று தினமும் உலாவும். அந்த நாய்க்கு மௌலானாவை நன்கு தெரியும்.

அந்தப் பெரியவன் ஆறு காலை நேரத்துக்கான இரகசியத்தைப் பேசியபடி ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றுக்குப் பக்கத்து வீட்டுக்காரன்தான் பெரியவன். அவன் செலவில் அங்கு ஒரு கக்கூஸ் கட்டி தண்ணி வசதியும் செய்து வைத்திருந்தான். ஊரில் இருக்கும் குருடன்கள், செவிடன்கள், பைத்தியகாரன்கள், வந்து மலம் கழிப்பது அங்குதான். அந்தக் கக்கூஸை தினமும் சுத்தம் செய்வதற்கு சம்பளத்திற்கு ஆளும் வைத்திருக்கிறான் பெரியவன். அந்த நன்றிக்காக ஓடும் ஆற்றை அவன் பெயரில் எழுதிவைத்துவிட்டார்கள். "பெரியவன் ஆறு" என்று சொல்வதைக் கேட்க ஏகப்பட்ட சந்தோசம் அவனுக்குள் துள்ளும். மௌலானா கக்கூஸுக்குள் போய்க் குந்தியதும் அடிக்கடி இருமிக்கொள்வான். ஆற்றை எட்டித் தொடும் தூரத்தில் இரண்டு கல் மலை. அந்த மலையைத் தொட்டுத் தடவிவிட்டு அதில் உடுப்பை வைத்திருந்தான். மலம் கழித்து வெளியேறி வந்து அந்தக் கல்லில் கொஞ்சம் அமர்ந்து பார்த்துவிட்டு மெள்ள இழுகிப்போய் ஆற்றின் ஆழமில்லாத அந்த இடத்தில் முதலில் கால் இரண்டையும் நீட்டி இறக்கி நீரின் குளுமையை அனுபவித்து, இடுப்புக்கு கொஞ்சம் மேல் நீர் வரும்போது பாடத் தொடங்குவான். "நீ மட்டும் மெதுவாக நான் மட்டும் பலமாக ஆற்றைத் தொடுவோம்"


நீர் மெதுவாக ஓடும். அதில் இறங்கி முங்கி முங்கிக் குளித்தான் அவன். சத்தம் போட்டு சிரித்தான். தண்ணீரோடு இப்படித்தான் உறவு கொள்வதோ! என்னவொரு ஆனந்தம். வெளியே மெள்ள இழுகி வந்து உடலுக்கு லைப்போய் சவர்க்காரமிட்டு மேலைத் தேய்த்துக்கொண்டு மீண்டு இறங்கிக் குளித்தான். என்னவொரு புத்துணர்ச்சி. ஈர உடுப்பைப் பிழிந்தெடுத்து இடது கையில் போட்டுக்கொண்டு, எடுத்துவந்த உடுப்பை உடுத்துக்கொண்டு கைத்தடியால் அந்த மணல் ஒழுங்கையில் குத்திக் குத்தி "ஆண்டவன் மொகத்தப் பாக்கணும் நா அவனிடம் ஒன்னே ஒன்னு கேக்கணும்" பாடல் வரிகளைப் பாடிக்கொண்டு வீடு திரும்பினான். அப்போது அந்த நாய் அங்கே நின்றது.

கேற்றைத் தடியால் தட்டித் திறந்து வாசலில் வந்தபோது வாசலில் என்றுமில்லாத ஒரு புது வாசனை பரவியது. அவன் உணர்ந்தான். அவன் நெஞ்சுக்குள் ஒரே இடியாய் இடித்தது. "ராத்தா ராத்தா வீட்டுக்கு யாராச்சும் புது ஆளு வந்தாங்களா? ராத்தா" என்றான். அனீரா எதையும் காதில் வாங்கவில்லை. "ராத்தா ராத்தோ ஆம்புள வாசன வீசுது. சிகரெட்டும் ஒரு சாதி செண்டு மணமெல்லாம் வருது யாரு வந்தது ராத்தா"


"ஆரு வந்தா ஒனக்கென்ன?" என்றாள் அனீரா மிரட்டும் குரலில். "எனக்கு என்னமோ மனசு இடிக்குது. நீ யாரயாச்சும் விரும்பினா அவர கல்யாணம் பண்ணிக்கோ அதுதான் சொல்றன். வீட்டுக்கு வர வச்சி தனியா யாரோடயும் இருக்காத பாவமான காரியத்தில எறங்கிடாத" என்றான் மௌலானா. கோபத்தின் அளவைக் கூட்டிக்கொண்டு, உடல் இறுக்கமான சோட்டியோடு நின்ற அனீரா "எனக்கு நீ ஒன்டும் புத்தி சொல்லத் தேவயில்ல என்ன எதுவும் நீ கேட்கத் தேவயுமில்ல. விரும்பினா இந்த வூட்டுல இரு இல்ல இப்போவே வெளியேறிப் போயிடு குருடனுக்கு இவ்வளவு கத தேவல" என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு உள்ளே திரும்பி போய்விட்டாள். தன் எதிரில் ராத்தா நிற்கிறாள் என்று நினைத்து அவன் அழுதான் கண்கள் இல்லாமல். கண்கள் இல்லாமல் எப்படி அழுவது?

■

# பேசப்படா மௌனங்கள்



**அலெக்ஸ் பரந்தாமன்**



திருத்தப்படாத வரலாறுகளாலும்…
தீர்க்கப்படாத பிரச்சினைகளாலும்…
அநியாயமாக
எரிந்து… தணிந்து போனது அன்றொரு
நகரம்.

எரிதணல் மனவெக்கைகளோடும்
சரீர இயலாமையின்
வெளிப்பாடுகளுமாக
ஒரு நகரத்து மக்கள்
தம்மேல்
மௌனத்தைப் போர்த்துக்
கடந்து கொண்டிருந்தபோது…
தமக்குள்

சிரித்துச் சிலாகித்துக் கொண்டன
அதிகாரம்மிக்க சிம்மாசனக்
கதிரைகள்.

நகரம் எரிந்த களிப்பினில் ; அவைகள்
கூடிக் குடித்தன… கும்மாளமடித்தன…
வெற்றிமுரசுகளை நாற்றிசையும் பரவ
அடித்தன…
ஆராவாரப்பட்டன…
அகமகிழ்வெய்தின…
சந்தோஷமிகுதிக்குள் ; அனைத்தும்
சங்கமித்துக் கொண்டன.

வரலாறுகளும் பிரச்சினைகளும் ;
வெற்றிக்குள்



உறங்கிவிட்டதெனும் உற்சாகத்துள்
கதிரைகள்
மேலும் அகலக்கால்களை
வைத்தபோதுதான்
பற்றி எரியத்தொடங்கின அனைத்து
நகரங்களும்.

தங்கள் நகரம் அன்றொருநாள்
எரிந்தது கண்டு
சினத்தகிப்பில் இருந்த சிலர்
சிரித்துக் கொள்கிறார்கள் தமக்குள்
'இது அவரவர்க்கான
முன்ஊழ்வினை'யென.
மனிதத்தை நேசிப்பவர்கள் மட்டும்
மீண்டும் கடந்து போகிறார்கள்
மௌனமாக.

பேசப்படா அம்மௌனத்துள்
ஆயிரம் துயரங்கள்...
ஆயிரம் அர்த்தங்கள்...


திரும்புகிறது நிஜவரலாறு
பிரச்சினைகளைத்
தீர்த்துவிடவேண்டுமென்பதற்காய்.
ஆயினும்,
செவிகள் இருந்தும்...
புலன்கள் பூரணமாய் இருந்தும்...
புலனற்றனவாகவே கிடக்கின்றன
சிம்மாசனக்கதிரைகள்; தங்களது
ஆளும் அதிகாரத்திற்காக
வாழும் சுகபோகத்திற்காக..




கலம் அமைப்பின் ஆதரவில் ‘அகவயப்படுத்துதல்’ என்னும் தொனிப்பொருளில் எமது உள்ளம் ஆசிரியர் குழுவின் அங்கத்தவரும், ஓவியருமான பிரியா தபேந்திரனின் ஓவியக் கண்காட்சி ஒன்று ஜூன் 4ம் – ஜூன் 12ம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடைபெற்றது. இவ் ஓவியக் கண்காட்சியினை பல நூற்றுக் கணக்கானோர் கண்டு களித்தனர்.









# ‘தெணியான்’ – ஒரு சரித்திரம்





**தேவகி ரமேஸ்வரன்**

மனிதர்கள் பிறக்கின்றார்கள்; மகான்கள் அவதரிக்கின்றார்கள்; யுகபுருஷர்கள் பிறந்து, அவதாரம் எடுக்கின்றார்கள். தெணியான் காலம் தந்த யுகபுருஷன். அடிநிலை மக்களின் உள்ளக்குமுறல்களை எரிமலைகளாக ஆக்கித் தந்தவர். அவர் நீந்திக் கடந்த நெருப்பாற்றங்கரைகள் எல்லாம் இலக்கியங்களாகப் பரிணமித்தன.

தெணியானின் ஆளுமை விரிவானது அரசியல் செயற்பாடுகள், சிறுகதை, நாவல், விமர்சனம், வானொலி நாடகம், கவிதை, கட்டுரை, அனுபவப்பகிர்வு, பட்டிமன்றப் பேச்சு, ஆசிரியத்துவம் எனப் பலதளப் பரிமாணம் கொண்டது. தெணியான் என்ற முழு மனிதனை நோக்கவேண்டுமாயின் இவை ஒவ்வொன்றும் நுணுகி ஆராயப்படவேண்டியனவாகின்றன. இலக்கியத்தின் வழி சமூகத்தைக் கூர்மையாக நோக்கி, அந்நோக்கினூடாகச் சமூக மாற்றத்தைச் சாதகமாக்கியவர். எனவே, தெணியானை ஒரு சமூக விஞ்ஞானி எனலாம். சமூகத்தை உற்று நோக்குதல், பிரச்சினைகளை இனங்காணுதல், ஆராய்தல், வெளிப்படுத்தல், தீர்வை முன்வைத்தல் என்ற பாங்கில் விஞ்ஞானநோக்கு அவருக்கானது. இது விரிவாக ஆராயத் தகுந்த ஒன்று.

## அரசியல் உறுதிப்பாடு

தெணியானின் அரசியல் நிலைப்பாடு அவர் நடந்துவந்த பாதையினூடு பார்க்கப்பட வேண்டியது. தேவரையாளி இந்துக் கல்லூரி, தேவரையாளி சைவவித்தியாசாலையாக இருந்த காலத்தில் சைவப்புலவர் சி. வல்லிபுரம், கவிஞர் மு. செல்லையா ஆகியோரினால் மொழியாற்றலைப் பெற்றுக்கொண்ட தெணியான், அக்காலத்தில் சைவமும் காந்தீயமும் சார்ந்த சூழலில் வளர்ந்தவர். ஆயினும் தமிழ்நாட்டுத் திராவிட முன்னேற்றக்கழகத்தின் கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டு அக்கொள்கைகளிலே தன்னை ஈடுபடுத்தியவர். திராவிட முன்னேற்றக்கழகம் சார்பான ஏராளம் நூல்களைத் தேடித்தேடி வாசித்தவர். உடுப்பிட்டித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் பொன். கந்தையா அவர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலம், தெணியான் தி. மு. க. கொள்கையிலிருந்து விடுபட்டு மார்க்சிய கொள்கை சார்பில் தன்னை நிலை நிறுத்தினார். தெணியானின் அரசியல் பிரவேசம் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் பேச்சாளராக ஆரம்பமாகியது. இது அவர் பாடசாலை மாணவராகக் கல்வி கற்றுவந்த காலம். இக்காலத்தில் எழுத்தாளர் கே. டானியலின் தொடர்பைப் பெற்றுக் கொண்டவர். அதேவேளை சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் எம். சி. சுப்பிரமணியத்தின் உறவு தெணியானில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தக் கைகொடுத்தது. பின்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து சமூக விடுதலையை நோக்கிய அரசியல் பயணத்தை ஆரம்பித்தவர், தெணியான். இப்பயணத்திலே எம். சி. சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் பொலிகண்டி கந்தவனக் கோயில் ஆலயப் பிரவேசம் முதன்மை பெற்றது. இதன் தொடர்ச்சியாக, அல்வாய் முத்துமாரியம்மன் கோயில், மாலிசந்திப் பிள்ளையார் கோயில் என்பனவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் திறந்துவிடப்பட முன்னின்றுழைத்தார். இக்காலத்தில் அவரது முன்னெடுப்பில் தேனீர்க் கடைப் பிரவேசங்களும் நிகழ்ந்தன.

சமூகத்தை நேசித்தவர் தெணியான். அந்த நேசம் மார்க்சிய ஒளியில் புதிய தரிசனங்களை அவருக்குப் பெற்றுக் கொடுத்தது. ஏற்றத்தாழ்வில்லாத மனித சமுதாயத்தைக் கனவுகண்டு இன, மத, சாதிய, தொழில், பொருள், வர்க்கப் பதவிநிலைகளில் பிளவுபட்டுள்ள மனிதன், அடுத்தவரையும் தன்போல் மதிக்கவேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையைத் தனக்குள் வரித்து, அதனை இலக்கியத்தில் வெளிக்கொணர்ந்தவர். கொள்கைவேறு, படைப்பு வேறு என்றில்லாமல் இரண்டும் ஒன்றெனக் கொண்டவர். இறுதிவரை கொள்கையிலிருந்து மாறுபடாத நிதானம் அவருக்குரியது. மார்க்சியத்தில் அவர்கொண்ட பற்றும் பிடிப்பும் உயரியது. 'பசிக்கின்ற ஒரு மனிதன் இருக்கும்வரை இந்தக் கொள்கைக்கான தேவை இருந்துகொண்டே இருக்கும்' என்பது அவர் வாய்மொழி.

## சமூக நோக்கு

தெணியானின் இலக்கிய சிருஷ்டிகள் அவரது இளகிய உள்ளத்தைக் காட்டுவன. இந்த இளகிய உள்ளம் பிறர்படும் துன்பநிலையைத் தனதாக்கியது. துன்பப்படுபவர்களுக்காகப் பேனா என்ற ஆயுதத்தைத் தூக்கிப் போராடப் பணித்தது. இப்போராட்டம் சாதியம் சார்ந்த போராட்டம் மட்டுமல்ல. ஒடுக்கப்படுபவர்கள் எங்கெங்கு இருப்பினும் அவர்களுக்கானது. இங்கு ஒடுக்குதல் என்பது சாதிய, இன, மத, வர்க்க, பிரதேச அடிப்படைகள் சார்ந்தது. தெணியான் பிறந்த பொலிகண்டிக் கிராமம் பல சமூகப் பிரிவுகளைக்கொண்ட மக்கள் வாழ்ந்துவருகின்ற இடம். இது பலதரப்பட்ட

மக்கட் கூட்டத்தினதும் வாழ்வுநிலை அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளவும், கற்றுக்கொள்ளவும், உணர்ந்துகொள்ளவும் வாய்ப்பான சூழலை வழங்கியது. இந்த அனுபவப்பேறு இக்கிராமத்தோடு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. அது மலையக ஆசிரிய நியமனம், ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை, அரசியல் இயக்க நடவடிக்கைகள், முற்போக்கு இலக்கிய அணிசார்ந்த செயற்பாடுகள், தேவரையாளி இந்துக்கல்லூரிச் சூழல் என்பவற்றோடு, கே. டானியல், டொமினிக் ஜீவா, பேராசிரியர் கா. சிவத்தம்பி என்ற முப்பரிமாணங்களோடு தன்னை வளர்த்துக் கொண்டது.




இந்தப்பின்னணியிலேயே தெணியானின் சமூகம்பற்றிய பார்வையை எடுத்தாராயவேண்டி உள்ளது. 'நான் படைப்பாளியாகி ஆக்க இலக்கிய சிருஷ்டியில் ஈடுபடுவதற்கு முன்னுள்ள மாணவப்பருவத்தில் டொமினிக் ஜீவா, கே. டானியல் ஆகிய இருவரதும் சமூக அரசியல் வாழ்வோடு, அந்த வாழ்வடிநிலையில் நின்றெழுந்த அவர்களது படைப்புகளால் கவரப்பட்டவன். பின்னர் அவர்கள் இருவருக்கும் எனக்கும் ஏற்பட்ட சமூக அரசியலியக்கத் தொடர்புகள் காரணமான உந்துதலால் என் நெஞ்சில் கனன்றுகொண்டிருந்த உணர்வுகளுக்கான வெளிப்பாடாகச் சிருஷ்டி இலக்கியம் படைக்க ஆரம்பித்தேன்' என்ற தெணியானது கருத்து அவரது சமூகம்பற்றிய பார்வையைப் புலப்படுத்துகிறது. அவர்தன் நெஞ்சில் கனன்ற உணர்வுகள் அவரது சொந்த அனுபவங்கள். இந்த அனுபவங்கள் சாதிய ஒடுக்குமுறை சார்ந்தவையாகத்தான் இருக்கும். இவையே அவரது நாவல்களாகவும் சிறுகதைகளாகவும் பரிணமித்தவை.

ஒடுக்கப்படுபவர்களின் குரலாக ஒலித்த தெணியான். பொற்சிறையில் வாடுபவர்களுக்காகவும் குரலெழுப்பித் தன் துணிச்சலையும், மனோ தைரியத்தையும் இனங்காட்டுகிறார். அன்பிற்காக ஏங்கும் ஒருவனைக் கானலில் மானில் இரத்தமும் சதையுமாக விபரிக்கும் தெணியானின் சமூக நோக்கு, அன்பு கிடைக்காமல் ஒடுக்கப்பட்ட முத்துலிங்கம் என்ற பாத்திரம் மீதான கரிசனையை வெளிப்படுத்தி நிற்கிறது. நிலவுடைமை ஆதிக்க மனோபாவத்தோடு விஜயலக்சுமி என்ற பாத்திரம் எவ்வாறு மரக்கொக்கு நாவலில் உயிர்பெறுகிறதோ அவ்வாறே தெணியானின் நாவல்களின் பாத்திரவார்ப்புகள் அமைகின்றன. தான்சார்ந்த சமூகத்தைக் கூர்மையாக நோக்கி, அந்நோக்கு நிலையினூடாக எழும் சிக்கல்களை, போராட்டங்களை இலக்கியமாக்கி, சமூகத்தின் அறிவுக் கண்ணைத் திறக்க ஏதுவாய் அமைந்த தகுதிவாய்ந்த முடிவுகளை வெளிப்படுத்தி, மக்கள் எழுத்தாளன் ஆகியவர் தெணியான். தெணியானின் நாவல்களில், சிறுகதைகளில் அவற்றின் இலக்கிய நிலைப்படுத்தப்பட்ட தன்மைகளுக்கப்பால், அவரின் சமூக நோக்குக் குறித்த பார்வைகள் இன்னும் ஆழப்படுத்தப்படவேண்டியன.

## இலக்கியம் – தனியிடம்

கலை, இலக்கியம் மக்களுக்கானவை என்ற கொள்கையுடைய தெணியான், சமூக மாற்றத்திற்கான கருவியாக இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டவர். அந்தக் கருவியினால் அவர் சாதித்தவை ஏராளம். ஒன்பது நாவல்கள் — விடிவைநோக்கி, கழுகுகள், பொற்சிறையில் வாடும் புனிதர்கள், மரக்கொக்கு, காத்திருப்பு, கானலில் மான், தவறிப்போனவன் கதை, மூவுலகு, ஏதனம் என்பவை அவை. இந்நாவல்கள் ஒவ்வொன்றினதும் பேசுபொருள்கள் வேறுபட்டவை. அவ்வவற்றின் பகைப்புலத்தில் பாத்திரங்களை வார்த்து, வளர்த்துச் சென்று கண்முன் நடமாடச் செய்யும் கைங்கரியம் தெணியானுக்கே கைவந்த கலை. தெணியானின் கருத்தியல் நிலைப்பாடுகள் அவரது பாத்திரங்களின் மீது திணிக்கப்பட்டவை அல்ல. அவற்றைக் கலையம்சங்களோடு படைத்தார். இத்தன்மை அவருடைய நாவல்களிலே வளர்ச்சியும் வலிமையும் பெற்று வந்திருந்தன.




சிதைவுகள், பனையின் நிழல், பரம்பரை அகதிகள் என்ற குறுநாவல்களும் 150க்கு மேற்பட்ட சிறுகதைகளும் படைத்தவர், தெணியான். ஈழத்தைப் பொறுத்தவரை சாதியம் சார்ந்து அதிகளவிலான சிறுகதைகள் எழுதியவரும் அவரே. ஒடுக்கப்பட்டவர்கள் என்ற சிறுகதைத் தொகுப்பு சாதியம் சார்ந்த 25 கதைகளைக் கொண்ட தொகுதி. எழுதப்பட்ட கால ஒழுங்கின்படி தொகுக்கப்பட்ட இந்நூலிலுள்ள கதைகள் நாற்பதாண்டுகால யாழ்ப்பாணத்துச் சமூக வரலாற்று ஆவணமாக உள்ளது. பொதுவுடைமைக் கொள்கைவாதியாக இருந்ததனால்தான் வன்முறைகளை வெறுத்தவர், தெணியான். இன ஒடுக்குமுறையின் அவலங்களை 'உவப்பு' போன்ற சிறுகதைகளினூடாக வெளிப்படுத்தியவர். டானியலுக்குப் பின் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக எழுதக்கூடிய வல்லமை தெணியானுக்கே உண்டு என்பது பலரும் முன்வைத்த கருத்து. எனினும் இருவரினதும் வெளிப்பாட்டு முறைகளும், நோக்கு நிலைகளும் வேறுபட்ட தளங்களைச் சார்ந்தன என்பது நுணுகி நோக்கப்படவேண்டிய ஒன்று. தெணியான் மிகச் சிறந்த தமிழாசிரியர் என்ற வகையில் உன்னதமான மொழிக் கையாட்சியும் பேச்சாற்றலும் மிக்கவர். அவ்வகையில் அவரது மொழிநடை டானியலின் மொழிநடையிலிருந்து வேறுபட்டே அமைந்தது. தான் வாழும் சமூகத்துடன் மிக நெருக்கமான உறவையும், ஊடாட்டத்தையும் கொண்டுள்ள படைப்பாளி தனது இலக்கியங்களும் சமூக இயைபுடையதாகவே அமையவேண்டும் என்பதில் மிகுந்த கவனமாக இருப்பது இயல்பு. இது தெணியானுக்கும் பொருந்தும்.

## ஆசிரியத்துவம்

‘குருவும் தாரமும் தலைவிதிப்படி’ என்பார்கள். தெணியானுக்கு வாய்த்த ஆசிரியர்கள் மிகச் சிறந்தவர்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான ஆளுமை வார்ப்புகள். அந்த வார்ப்புகள் தெணியானைப் புடம்போட்டன. தெணியான் தானும் ஒரு நல்லாசிரியனாய் எண்கணிதம், குடியியல், மொழி, இலக்கியம் என்பவற்றைக் கற்பித்தவர். நாளடைவில் தமிழாசிரியர் ஆனவர். தெணியானிடம் கற்றவர்கள் மொழியைப் பிழையறக் கையாளும் வல்லமை வாய்க்கப்பெற்றவர்கள். இதனை அவரது மாணவர் பலரும் நன்றியோடு கூறுவர். மாணவர்களின் மனநிலை அறிந்து கற்பிக்கக்கூடிய திறன் அவருக்குரியது. இந்த ஆசிரியத்துவம் அவருக்குத் தந்த அனுபவப்பேறுகள் பரந்துபட்டவை. ஆக்க இலக்கியத்துறையிலே அவர் தடம்பதிக்க, பாடசாலை – ஆசிரியர் – மாணவர் என்ற பரந்துபட்ட உலகமும் நல்ல நிலைக்களனாயிற்று. அவரது முதல் நாவல் ‘விடிவை நோக்கி’ இத்தகையது என்பதும் குறிப்பிபிடத்தக்கது. இந்நாவல் மூலமாகவே வடமராட்சியின் முதல் நாவலாசிரியர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார்.

### உறவுகளுடன் உறவு

தெணியான் என்ற தனிமனிதனின் தனிப்பட்ட குணநலன்கள்பற்றிச் சிந்திப்பதும் அவரைப்பற்றிய முழுமையான விசாரிப்புக்களுக்குத் துணைபுரியும். நிமிர்ந்த கம்பீரமான தோற்றம்; நேர்த்தியான உடை; கூர்மையான விழிகள்; தீட்சண்யமான பார்வை அவருக்குரியவை. பிறரை நேசிக்கும் நட்புரிமையுள்ள குணம் உடையவர். இதுவே பரந்துபட்ட நண்பர் குழாத்தை அவருக்குப் பெற்றுக்கொடுத்தது. அன்பான பேச்சு, இனிய வார்த்தைகள், கலகலப்பான, நக்கலும்— நையாண்டியும் கலந்த உரையாடல்கள் கொண்டவர் தெணியான். ஆயினும் சிறுமைகண்டு கொள்ளும் கோபம் மிக உக்கிரமாக இருக்கும்; ஆக்ரோஷமாக இருக்கும். இக்குணமே சிறுமைகண்டு பொங்கிய இலக்கியக்காரனாக அவரைக் காட்டியது. தெணியான் சினம் கொண்டால் எதிரிகள் தாக்குப்பிடிக்க மாட்டார்கள். இது இலக்கிய மேடைகளிலும் நிகழ்ந்தது. அது துப்பாக்கிமுனையாக இருந்தால்கூட.

உறவுகளுக்கு அவர் நேசத்துக்குரிய ஒருவர். தலைமகன், வழிகாட்டி. நன்மையும் தீமையும் ஆராய்ந்து, வருவதை எதிர்வுகூறி வழிநடத்தவல்ல ஆசான். நெஞ்சில் ஈரத்துடன் அன்பைப் பொழியும் ஒருவர். சில சமயங்களில் நெஞ்சில் நிறைந்த அன்பை வெளிக்காட்டாமலும் வைத்திருப்பார். இந்த நேயமிக்க நெஞ்சமே பிறர் ஈனநிலை கண்டு துள்ளி எழுந்து மேலாதிக்க சமூகத்தைச் சுட்டெரிக்கவல்ல இலக்கியங்களைப் படைத்தது.

தெணியான் தன் இலக்கிய ஆளுமையை விரிவுபடுத்தி வளர்க்கப் பெரிதும் துணைநின்ற பேராசியர் கா. சிவத்தம்பி அவர்களை நெஞ்சார நேசித்தவர். ‘நெஞ்சில் பதிந்துள்ள நினைவுகளில் பேராசிரியர் கா. சிவத்தம்பி’ என்ற நூலை அவர் எழுதுவதற்கும் அந்த நேசிப்பே காரணம். பேராசிரியர் மறைந்தபின், அவரது புகைப்படத்தைத் தன்னுடைய வீட்டிலே கூடத்தில் மாட்டிவைத்துள்ளார். தன்னுடைய இலக்கியப் பயணத்தின் காத்திரமான களமாக இருந்த மல்லிகையையும் அதன் ஆசிரியர் டொமினிக் ஜீவாவையும் ஆழ நேசித்தவர். இந்த நேசம் ‘மனசோடு பழகும் மல்லிகை ஜீவா’ என்ற அவரது இன்னொரு நூலின் பெயரிலிருந்து புலனாகிறது.

பல்கலைக்கழகம் போன்ற கல்விசார்ந்த வெளிகளில் என்னை அறிமுகப்படுத்த, நான் கையாண்ட சொற்றொடர் ‘தெணியானின் மருமகள்’ என்பதே. இது என்னைக் குறித்த பல வினாக்களுக்கும் சுருக்கமான பதிலாக அமைந்தது.

இதுவே என்றும் எனக்குப் பெருமை தருவது!

■

# உள்ளம் அறிமுகவிழாக்கள்

*இரண்டு தசாப்தங்களின் பின்னர், உள்ளம் சஞ்சிகை, இணைய வழியாக 2021ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி வெளியிட்டு வைக்கப்பட்டது. எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், உலகெங்கும் வாழும் கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் ஆர்வத்துடன் இந்நிகழ்வில் பங்கெடுத்தனர்.*



கனடா

*உள்ளம் சஞ்சிகையின் அச்சுப்பிரதி வெளியீட்டு விழா கனடாவின் டொரன்டோ நகரில் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி சிறப்பாக நடைபெற்றது. வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சஞ்சிகையின் உள்ளடக்கங்கள் தொடர்பில் காத்திரமான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. இந்த நிகழ்வுக்கு அனுசரணை வழங்கி உதவிய உதயன் அவர்களுக்கு எமது நன்றிகள்.*

*வவுனியா பண்டாரவன்னியன் புத்தகசாலை நடாத்திய புத்தகக்கண்காட்சி 2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி, வவுனியா பொது நூலகத்தில் நடைபெற்றது.. வடமாகாணத்தின் அனைத்து மாவட்ட ங்களில் இருந்தும் பல வாசகர்கள் பங்குபற்றிய இக்கண்காட்சியில் உள்ளம் சஞ்சிகையும் காட்சிப்படுத்தப்பட்டது. 20 பேர்வரை பங்கு கொண்ட கருத்தாடல் நிகழ்வில் உள்ளம் சஞ்சிகை அறிமுகமும் நூலகக்கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.*



வவுனியா



விசுவமடு

*உள்ளம் சஞ்சிகையின் அறிமுக நிகழ்வு 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதி விசுவமடுவில் இடம்பெற்றது. விசுவமடு மத்திய சனசமூக நிலையத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்த நிகழ்ச்சியில் இலக்கிய ஆர்வலர்கள் பலர் ஆர்வத்தோடு பங்கெடுத்தனர் ஆக்கங்கள் தொடர்பான காத்திரமான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன*

உள்ளம் காலாண்டு இதழின் வாசகர் அரங்க நிகழ்வு ஒன்று 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் தேதி கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் வெகு சிறப்பாக இடம்பெற்றது. சஞ்சிகையில் இடம்பெற்ற பல்வேறு ஆக்கங்கள் சம்பந்தமான ஆணித்தரமான விமர்சனங்கள் இந்த அரங்கத்தில் முன்வைக்கப்பட்டன. கொழும்பு மற்றும் விசுவமடு நிகழ்வுகளுக்கு அனுசரணை வழங்கிய வளர்மதியின் மூத்த உறுப்பினரான திரு ரங்கன் மஹாராஜாஅவர்களுக்கும் எமது நன்றிகள்.



கொக்குவில் வளர்மதி

உள்ளம் சஞ்சிகை அறிமுகவிழா வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஊடாக 2022ஆம் ஆண்டு மாதம் ஏப்ரல் மாதம் 17. ஆம் திகதி வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. 200 வரையான ஆர்வலர்கள் பங்குகொண்ட நிகழ்வில் 35 இலக்கியசெயற்பாட்டாளர்கள் இணைந்து சஞ்சிகையில் இருந்த கட்டுரைகள் மற்றும் உள்ளடக்கங்கள் பற்றி விமர்சன உரைகள் நிகழ்த்தியிருந்தனர். திரு. அ.நவரட்ணராஜா அவர்களின் நிதிப்பங்களிப்பில் மதியபோசனமும் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் வெற்றிக்காக அயராது உழைத்த உள்ளம் ஆசிரியர் குழுவைச் சேர்ந்த திரு செ. ஸ்ரீநிவாசன் அவர்களுக்கும் அனுசரணை வழங்கிய வளர்மதியின் மூத்த உறுப்பினரான பா.தில்லைராஜன் அவர்களுக்கும் எமது நன்றிகள்.



கொழும்பு

பெப்ரவரி 27, 2022 ஞாயிற்றுக்கிழமை உள்ளம் அச்சுப் பிரதி வெளியீட்டு விழா கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகத்தின் வேலாயுதபிள்ளை ஞாபகார்த்த மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. இதில் எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், சமூக சேவையாளர்கள், கழக அங்கத்தவர்கள் மற்றும் வளர்மதியின் ஆதரவாளர்கள், அபிமானிகள் என இருநூறுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு இவ் விழாவைச் சிறப்பித்தனர்.

# அமரர் ஈஸ்வரபவானி சோமசுந்தரம்





பவானியக்கா என்று எங்களால் அன்புடன் அழைக்கப்படும் ஈஸ்வரபவானி சோமசுந்தரம் அண்மையில் காலமானார். வளர்மதிக்குத் தனது பாரிய பங்களிப்பைச் செய்த ஒருவர். 90 களின் ஆரம்பத்தில் சுகிர்தரீச்சர் தலைமையில் வளர்மதியின் மகளிர் குழு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அவர் நாட்டைவிட்டு வெளியேற பவானியக்கா மகளிர் குழுவின் தலைமைப் பொறுப்பேற்றுத் திறம்பட நடாத்தினார்.

எல்லோருடனும் வயது வித்தியாசமின்றி நட்போடு பழக கூடிய இவர் சனசமூக நிலையங்களின் பக்கம் பெண்கள் எட்டிப் பாராத காலத்தில் எல்லோரையும் தேடிச் சென்று அழைத்து வந்து ஆர்வத்தோடு இயங்கவைத்தார்.

கலைவிழாக்கள், நாடகங்கள், விளையாட்டுப் போட்டிகள், பொருட்காட்சிகள், சுற்றுலாக்கள், பயிற்சிப்பட்டறைகள் என்பனவற்றோடு யாழ் மாவட்டத்தில் உள்ள ஏனைய சனசமூக நிலையங்களோடு இணைந்தும் பல பணிகளை முன்னெடுத்தார்.

அன்னாரின் பேரிழப்பால் துயருறும் அவர் குடும்பத்தோடு வளர்மதியும் இணைந்து கொள்கிறது.


# குறும்பா



**N.M. சஜாத்**

தென்பகுதிச் சித்தர்வரும் குதிரை
தெருவழியால் ஓடும் கொழும் பூரை
முன்னாலே யிருந்துசிலர்
முடிந்தவரை பிடித்திழுக்கப்
பின்னாலே ஓடும்சில யாரை

கேட்டார்கள் ஆதரவாய் ஓட்டு
கொடுத்தோமே யவர்வார்த்தை கேட்டு
ஆட்சியவர் கைகளிலே
அவசரமாய் சென்றவுடன்
ஓட்டெல்லாம் செல்லாத நோட்டு....!




கையேந்தி நிற்கிறது கடல்சூழ்ந்த நாடு
கடன்வாங்கி உண்கிறது இது வெட்கக் கேடு
வாயேதும் ஓயாமல் ; நிகழ்
வரலாற்றை மாற்றென்றால்
பேயேது போவது புதியதொரு காடு?

**அலெக்ஸ்பரந்தாமன்,**
புதுக்குடியிருப்பு.

மங்களகரமான வைபவங்களை மகிழ்வுடன் கொண்டாட
அழகான அலங்காரம் முக்கியம்.

KAVI'S EVENTS
THE LUXURY HOME DECOR

- Wedding
- Birthday
- Anniversary
- Saree ceremony
  &
- Any occasion



Decor துறையில் அனுபவம் வாய்ந்தவர்
Kavitha (647) 298-1959




For your construction needs in Jaffna...

Contact Us:
Phone : 0094777959914

E-Mail : trshankar2004@gmail.com

GANGU CONSTRUCTIONS

QUALITY IS THE ONLY CONCERN